விலை ரூபா: 15.00

Registered as a Newspaper in Srilanka

# வலம்புரி

Valampurii

பக்கங்கள்: இருபது

சங்கு 12 வள்ளுவர் ஆண்டு 2042 தை 04 செவ்வாய்க்கிழமை (18.01.2011) தொலைபேசி 222 3378, 222 7829 ஒலி 030

ரா
ம்
கோ
MADRAS CEMENTS LTD
RAMCO CEMENT
RAMCO
SLS 107 தரம் கொண்டதும்
100 வீத சாதாரண போட்லான்
சீமெந்து (O.P.C.) ராம்கோ சீமெந்து

நாங்கள் அனைவரும் இலங்கைத் தாயின் மக்கள்

# தமிழ் அரசியல் கட்சிகள் அனைத்தும் ஒன்றிணைந்து செயலாற்ற வேண்டும்!

## யாழ்.பொங்கல் விழாவில் ஜனாதிபதி



(யாழ்ப்பாணம்)

தமிழ்மக்களுக்காக தமிழ் அரசியல் கட்சிகள் அனைத்தும் ஒன்றிணைந்து செயற்பட வேண்டிய காலம் வந்துவிட்டது என ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷ தெரிவித்தார். யாழ். துரையப்பா விளையாட்டு அரங்கில் நேற்று முற்பகல் நடைபெற்ற தேசியப் பொங்கல் விழாவில் பிரதம அதிதியாகக் கலந்துகொண்டு உரையாற்றுகையிலேயே அவர் மேற்கண்டவாறு தெரிவித்தார். (20ஆம் பக்கம் பார்க்க)

## 400 இலங்கையர்களுடன் இரு கப்பல்கள் கனடாவை நோக்கிப் புறப்பட்டன

### புலனாய்வுப் பிரிவு தகவல்

(கொழும்பு)

இலங்கையர்கள் 400 பேரை ஏற்றிக்கொண்டு கனடாவைநோக்கி மேலும் இரண்டு கப்பல்கள் விரைவில் பயணத்தை மேற்கொள்ளவுள்ளதாகப் புலனாய்வு அதிகாரிகள் கனேடிய அரசாங்கத்திற்குத் தெரிவித்துள்ளனர்.

வன்னியில் இடம்பெற்ற இறுதிக்கட்டப் போரின் போது பல்வேறு நாடுகளுக்கும் தப்பிச் சென்றிருந்த பொதுமக்கள் மற்றும் விடுதலைப் புலிகள் அமைப்பின் போராளிகள் குறித்த கப்பல்களில் கனடாவை நோக்கிச் செல்லவுள்ளதாகத் தெரிவிக்கப்பட்டுள்ளது.

பல்வேறு நாடுகளிலிருந்தும் இக்கப்பற் பயணத்துக்கான ஆட்கள் திரட்டப்பட்டு வருவதுடன், அவர்கள் தென்கிழக்காசிய நாடொன்றின் பிரதேசமொன்றில் ஒன்று சேர்க்கப்பட்டு வருவதாகவும் தகவல்கள் வெளிவந்துள்ளன.

இவர்கள் கனடாவின் பிரிட்டிஷ் கொலம்பியக் கரைக்குச் சென்றடையத் திட்டமிட்டுள்ளதாகவும், ஏற்கனவே சிலர் கப்பல் ஏறும் இடத்திற்கு நகர்த்தப்பட்டுள்ளதாகவும் செய்திகள் குறிப்பிடுகின்றன.

இக்குறித்த பயணம் தொடர்பான விபரங்கள் புலனாய்வுத்துறைக்குத் தெரிந்திருந்தாலும், இப்பயணிகளின் உயிராபத்துக் கருதிக் கப்பல்களின் பயணங்களைப் பெரும்பாலும் தடுக்கப்போவதில்லை எனக் கனேடிய அதிகாரி ஒருவர் தெரிவித்துள்ளார். (ந-5)

## ஊடகங்களும் அரசியல்வாதிகளும் எம்மை புலி முத்திரை குத்தியுள்ளனர்

### சுரேஷ் பிரேமச்சந்திரன் தெரிவிப்பு

(கொழும்பு)

நாட்டை பிளவுபடுத்த வேண்டும் என்பது தமது நோக்கமல்ல என தமிழ்த் தேசியக் கூட்டமைப்புக் கட்சி அறிவித்துள்ளது. பிரிவினைவாதத்தை தூண்ட வேண்டும்என்பதோ அல்லது நாட்டை பிளவு படுத்த வேண்டும் என்பதோ தமது நோக்கம்கிடையாது என தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் நாடாளுமன்ற உறுப்பினர் சுரேஷ் பிரேமச்சந்திரன் குறிப்பிட்டுள்ளார். இது தொடர்பில் அவர் மேலும் தெரிவித்துள்ளதாவது,

தமிழ் மக்களின் பிரச்சினைகளுக்கு நியாயமான தீர்வுத் திட்டம் ஒன்று முன்வைக்கப்படல் வேண்டும் என்பதே எமது கோரிக்கை. அரசாங் (20ஆம் பக்கம் பார்க்க)








## சைவக் குருக்களின் மனைவி மீது இனந்தெரியாதோர் துப்பாக்கிச் சூடு

### மானிப்பாயில் நேற்றிரவு சம்பவம்

(யாழ்ப்பாணம்)

மானிப்பாயில் இனந்தெரியாதவர்கள் மேற்கொண்ட துப்பாக்கிச் சூட்டில் சைவக் குருக்களின் மனைவி படுகாயம் அடைந்தார்.

நேற்று இரவு 7.45 மணியளவில் இடம்பெற்ற இச் சம்பவத்தில் மானிப்பாய் ஆஸ்பத்திரி வீதியைச் சேர்ந்த திருமதி ஸ்ரீ பாலேந்திரன் நிமேஷா (வயது 31) என்பவரே படுகாயம் காயமடைந்தவர் ஆவார்.

இச் சம்பவம் பற்றி மேலும் தெரியவருவதாவது,

நேற்று இரவு 7.30 மணியளவில் ஆலயப் பூசை உபயகாரர்களுக்கு தகவல் கொடுப்பதற்காக ஸ்ரீ பாலேந்திரனும் அவரது மனைவி நிமேஷாவும் மானிப்பாய் கியூ மெடிக்கா இன்ரநஷனல் பாடசாலைக்கு அண்மையில் உள்ள வீடொன்றுக்குச் சென்றுள்ளனர். அங்கு வீட்டாருடன் வீதியோரமாக நின்று கதைத்துக்கொண்டு நின்றவேளை ஹீரோகொண்டா மோட்டார் சைக்கிளில் தலைக்கவசம் அணி (20ஆம் பக்கம் பார்க்க)

## அர்ஜுனவுக்கு பிடியாணை

(கொழும்பு)

ஜனநாயகத் தேசியக் கூட்டமைப்பின் நாடாளுமன்ற உறுப்பினரான அர்ஜுன ரணதுங்கவைக் கைது செய்வதற்கான பிடியாணையைக் காலி பிரதம நீதவான் தாமர தென்னக்கோன் நேற்று உத்தரவிட்டுள்ளார்.

இராணுவ நீதிமன்றின் தீர்ப்புக்கு அமையச் சிறைவைக்கப்பட்டுள்ள ஜனநாயகத் தேசியக் கூட்டமைப்பின்தலைவர் சரத் பொன்சேகாவை விடுதலை செய்யுமாறு வலியுறுத்தி நடத்தப்பட்ட ஆர்ப்பாட்டமொன்றின் போது பொதுச் சொத்துக்களுக்குச் சேதம் விளைவித்தார் என்ற குற்றச்சாட்டின் பேரில் அவர் உட்பட மேலும் சிலருக்கு எதிராக (20ஆம் பக்கம் பார்க்க)

## தேசியப் பொங்கல் விழா நேற்று நடைபெற்றது

(யாழ்ப்பாணம்)

தேசியப் பொங்கல் விழா நேற்று முற்பகல் யாழ்.துரையப்பா விளையாட்டு அரங்கில் நடைபெற்றது.

பாரம்பரிய கைத்தொழில்கள் மற்றும் சிறுதொழில் முயற்சி அபிவிருத்தி அமைச்சர் டக்ளஸ் தேவானந்த தலைமையில் நடைபெற்ற இப் பொங்கல் விழாவில் ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷ பிரதம அதிதியாகக் கலந்து கொண்டார்.

இவ் விழாவிற்கு 10.45 மணிக்கு துரையப்பா விளையாட்டரங்கிற்கு வருகைதந்த மகிந்த ராஜபக்ஷவுக்கு மங்கல இசை வாத்தியங்களுடன் தமிழ்ப் பாரம்பரியத்துடன் வரவேற்று அளிக்கப்பட்டது.

தொடர்ந்து விஷேடமாக அமைக்கப்பட்ட பொங்கல் மண்டபத்தில் அந்தணச் சிவாச்சாரியார்களின் வேத பாராயணங்களுடன் பொங்கல் வழிபாடு நடைபெற்றது.

பின்னர் யாழ்.மாவட்டத்தில் தெரிவுசெய்யப்பட்ட 41 விவசாயிகளுக்கு ஜனாதிபதியால் உழவு இயந்திரம் வழங் (20ஆம் பக்கம் பார்க்க)

நடுவு நிலை தவறா நன்னெறி காக்கும் உங்கள் நாளிதழ்

# இனப்பிரச்சினைக்கு தீர்வு காணும் துணிச்சல் ஜனாதிபதி மகிந்தவுக்கு மட்டுமே உண்டு

## பொங்கல் விழாவில் அமைச்சர் டக்ளஸ்



சேவைகள் ஆற்றிக் கொண்டிருப்பவர்களும் சேவைகளை மேலும் பெறவேண்டிய எமது மக்களும் சந்தித்துக் கொள்ளும் நிகழ்வு தான் இந்தச் சூரியப் பொங்கல் தினம்.

இன்றைய சூரியப் பொங்கல் விழா வெறும் களியாட்ட நிகழ்வு அல்ல. உரிமைகளை வழங்க விருப்பம் கொண்டவர்களும் உரிமைகளைப் பெறவேண்டிய எமது மக்களும் சங்கமித்துக் கொள்ளும் நிகழ்வுதான் இந்தத் தேசியப் பொங்கல் தினம். இவ்வாறு அமைச்சர் டக்ளஸ் தேவானந்தா யாழ்ப்பாணம் துரையப்பா விளையாட்டரங்கில் நடந்த சூரியப் பொங்கல் நிகழ்வில் கலந்துகொண்டு உரையாற்றினார். அவர் மேலும் உரையாற்றுகையில்,

நாம் களியாட்டங்களை நடத்துவதற்கு இந்த நிகழ்வை ஒழுங்கு செய்திருக்கவில்லை. களியாட்டம் நடத்தும் சூழலும் இதுவல்ல. எமது கிழக்கு வாழ் உறவுகள் இயற்கை அனர்த்தங்களால் அவலப்பட்டுக் கொண்டிருக்கும் இந்தத் துயரச் சூழலில் நாம் களியாட்டங்களை நடத்திக் கொண்டிருக்க முடியாது.

எமது தேசத்தில் வாழும் தனியொரு மனிதனுக்கு வலிகள், வதைகள், அவலங்கள் நிகழுமேயானால் அந்த வலியும் வதையும் அவலமும் எமது இதயங்களிலும் வலியெடுக்கும் உணர்வுகளைக் கொண்டவர்கள் நாங்கள்.

1978இல் எமது கிழக்கு மாகாண மக்கள் இயற்கை அனர்த்தங்களால் அவலப்பட்டுத் துயரங்களைச் சுமந்து நின்ற போது நிவாரணப் பொருட்களைச் சேகரித்துக் கிழக்கு மக்களிடம் நேரடியாக முதலில் கொண்டு சென்று அந்த மக்களின் துயரங்களைத் துடைத்தவர்களில் நானும் ஒருவன்.

தற்போது கிழக்கு மக்களின் அவலங்களைக் கண்டு எமது ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷ அவர்கள், துரிதமான நிவாரணப் பணிகள் உரிய முறையில் நடக்க வேண்டுமென்று பணிப்புரை வழங்கியுள்ளார். நாமும் எமது கிழக்கு வாழ் உறவுகளின் அவலங் கண்டு துடிதுடித்து அந்த மக்களுக்கான நிவாரணப் பணிகளில் ஈடுபட்டு வருகின்றோம். யாழ்.பல்கலைக் கழக மாணவர்கள் மற்றும் பொது அமைப்புக்களும் ஈடுபட்டு வருகின்றன.

கிழக்கு மக்களின் துயர்துடைக்க உதவியுள்ள அனைவருக்கும் இந்த இடத்தில் நான் நன்றி தெரிவிக்கின்றேன். இன்றைய பொங்கல் நிகழ்வுகளில் கபட நோக்கமில்லை, சுயநலமில்லை, அரசியலில்லை. சூரியனுக்கு நன்றி தெரிவிக்கும் இன்றைய தினத்தில் அச்சமும் பதற்றமும் தருவனவாக இருந்த சூழலையும் எமது மக்கள் உரிமையின் பெயரால் நடத்தப்பட்ட அழிவு யுத்தத்தினாலும் சொந்த இனத்தவர்களாலும் சுரண்டப்பட்டும் ஒடுக்கப்பட்டும் கொல்லப்பட்டும் அச்சுறுத்தப்பட்டும் வாழ்ந்து வந்த துயரச் சூழலை இல்லாதொழித்து எமது மக்களுக்கு ஆறுதல் தர முடிந்த அமைதிச் சூழலை உருவாக்கித் தந்த ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷ அவர்களுக்கும் மற்றும் சகலருக்கும் நன்றி தெரிவிக்கும் நிகழ்வாகவே இதை நாம் கருத வேண்டும்.

நீண்டகால இழப்புக்களைச் சந்தித்திருந்த எமது மக்கள் அழிவுகளை மட்டுமன்றி வேறு எதையுமே பெற்றுத் தந்திராத அழிவு யுத்தத்தை முடிபிற்குக் கொண்டு வந்த நடவடிக்கையின் போதும் அழிவுகளில் இருந்து மீண்டெழுந்து வந்திருக்கின்றார்கள்.

பெரும் புயலை எதிர்கொண்டு மீண்டெழுந்து வந்த எமது மக்கள் துயரங்களில் இருந்து விடுபட்டு ஒளிமயமான ஒரு எதிர்காலத்தை நோக்கிச் செல்லும் விருப்பங்களை வெளிப்படுத்தும் தினமாகவே இன்றைய சூரியப் பொங்கல் தினத்தை நாம் கருதுகின்றோம்.

இதுவரை அனுபவித்து வந்த வலிகள், வதைகள் அனைத்தையும் எடுத்துக்காட்டி அவற்றிலிருந்து மீள்வதற்கான வாய்ப்புக்களையும் சந்தர்ப்பங்களையும் கடந்த காலத் தமிழ்த் தலைமைகள் தவறவிட்டது போல், இனியும் நாம் தவற அனுமதிக்க மாட்டோம் என்ற நம்பிக்கையோடு,

கிடைத்த சந்தர்ப்பத்தை நாம் உரிய முறையில் பாதுகாப்போம் என்பதற்கு எமது மக்கள் சமிக்ஞை காட்டும் தினமாகவே இன்றைய தேசியப் பொங்கல் தினத்தை நாம் கருதுகின்றோம்.

எதை நாம் தீர்க்கதரிசனமாகவும் தொலைதூரப் பார்வையோடும் சொல்லியிருந்தோமோ அதுவே இங்கு நடந்து முடிந்திருக்கின்றது. அது துயரங்களோடு நடந்து முடிந்தாலும் நிரந்தர மகிழ்ச்சிக்காகவே நடந்து முடிந்திருக்கிறது.

எதை நாம் நடக்கும் என்று சொல்லியிருந்தோமோ அதுவே இங்கு நடந்து கொண்டும் இருக்கின்றது. எதை நாம் எண்ணியிருந்தோமோ அதுவே இங்கு நடக்கவும் போகின்றது. எந்த வழிமுறையில் எமது அரசியலுரிமைப் பிரச்சினைக்கான தீர்வைப் பெற்றுக்கொள்வது ?

எமது ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷ அவர்களுக்கு மட்டுமே அந்த அரசியல் துணிச்சலும் எமது நியாயமான கோரிக்கைகள் மீதான விருப்பமும் பிறந்திருக்கின்றது. கிழக்கு மாகாணத்தில் ஒரு அடையாளமாக அதை ஆரம்பித்து வைத்திருக்கின்ற எமது ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷ அவர்களின் உறுதிமிக்க அரசியல் துணிச்சலை நான் பாராட்டுகின்றேன்.

வருகின்ற உள்ளூராட்சித் தேர்தலை அடுத்து வடக்கு மாகாண சபைக்கான தேர்தல் நடக்கப்போகின்றது. அதன் பின்னர் இலங்கையிலுள்ள அனைத்து மாகாண சபைகளுக்கும் இந்த நாட்டில் வாழுகின்ற அனைத்து இன மக்களின் மாகாணங்களுக்கும் 13வது திருத்தச் சட்டத்தின் பிரகாரம் இன்னமும் இருக்க முடிந்த மேலும் கூடிய அதிகாரங்கள் வழங்கப்படும்.

இதுவே நடைமுறைச் சாத்தியமானது. இதிலிருந்து நாம் ஐக்கிய இலங்கைக்குள் சமாதான சகவாழ்வும் சமவுரிமையும் என்ற இலக்கு நோக்கி விரைவாகச் செல்ல முடியும். இதை ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷ அவர்கள் நிச்சயமாகத் தொடர்ந்தும் முன்னெடுப்பார். அதற்கு நாம் பொறுப்பு என்றார். (ந)

## பூநகரிக்கான பஸ் சேவை இன்று முதல் செயலாற்றும்

(யாழ்ப்பாணம்)

யாழ்ப்பாணத்தில் இருந்து பூநகரி நல்லூர் வரையான பேருந்து சேவை இன்று 18 ஆம் திகதி யாழ்.பேருந்து நிலையத்தில் இருந்து தினமும் காலை 7.00 மணி, பிற்பகல் 2.00 மணிக்குப் புறப்பட்டு யாழ்ப்பாணம், சாவகச்சேரி, தனங்கிளப்பு ஊடாக பூநகரி -நல்லூர் வரை செயலாற்றப்படும்.

இதேவேளை பூநகரி -நல்லூரில் இருந்து இதேபாதை வழியாக தினமும் காலை 9.00, மாலை 4.30 செயலாற்றப்படும்.

தினமும் காலை 6.30 மணிக்கு யாழ்.பஸ் நிலையத்தில் இருந்து கிளிநொச்சி சாலை பேருந்து ஒன்று நாவற்குழி, தனங்கிளப்பு, பூநகரி ஊடாக ஸ்கந்தபுரத்திற்கு செயலாற்றப்படும் என்பதுடன் ஸ்கந்தபுரத்தில் இருந்து இதேபாதை வழியாக பிற்பகல் 1.45 மணிக்கு புறப்பட்டு யாழ்.பஸ் நிலையம் வந்தடையும் இவ்வாறு வட பிராந்திய முகாமையாளர் க.கணேசபிள்ளை தெரிவித்துள்ளார். (ந)


## உலகப் பெருமஞ்சம்



### அருள் மிகு இணுவில் கந்தசுவாமி கோயில் தைப்பூச தின மஞ்சத் திருவிழா

எதிர்வரும் 20.01.2011 வியாழக்கிழமை மாலை 6.30 மணிக்கு வசந்த மண்டபப்பூசை நடைபெற்று ஆறுமுகப் பெருமான், வள்ளி, தெய்வானை சமேதராய் மின்சார தீபங்களால் அலங்கரிக்கப்பட்ட நூற்றாண்டுப் பழமை வாய்ந்த உலகப் பெருமஞ்சத்தில் வீதிவலம் வரும் நிகழ்ச்சியும் ஈழத்தின் புகழ்பூத்த நாதஸ்வர கலைஞர்களின் இசைக் கச்சேரியும் இடம்பெறும்.

யாழ். குடாநாட்டின் அனைத்து பகுதிகளிலுமிருந்து பக்தர்கள் ஆலயத்திற்கு வருகை தருவதற்கு இலங்கை போக்குவரத்து சபையினால் விசேட போக்குவரத்து வசதி ஏற்படுத்தப்பட்டுள்ளது.

(3537)

இணுவில் கந்தன் அடியார்கள்

கண்ணன் அரிசி ஆலை
சுன்னாகம் ஸ்ரேசன் றோட்,
No.1 அரிசியினை மலிவாகப் பெற்றுக் கொள்ளலாம்.


## படுவான்கரை மக்களுக்கு யாழ்.பல்கலை மாணவர் உதவி

(மட்டக்களப்பு)

மட்டக்களப்பு மாவட்டத்தில் வெள்ள அனர்த்தம் காரணமாக மிகக் கடுமையாகப் பாதிக்கப்பட்ட படுவான்கரைப் பகுதிக்கு யாழ்.பல்கலைக்கழக மாணவர் ஒன்றியத்தினால் உலருணவுப் பொருட்கள் வழங்கப்பட்டன.

போரதீவுப்பற்று பட்டிப்பளைப் பிரதேச செயலகங்களுக்குட்பட்ட பகுதிகளில் உள்ள இடம் பெயர்ந்தோர் முகாம்களுக்குச் சென்ற இம் மாணவர்கள் நேரடியாக இந்த உணவு விநியோகத்தை மேற்கொண்டுள்ளனர்.

யாழ்.பல்கலைக்கழக மாணவர் ஒன்றியத்தினால் யாழ்.மக்களிடம் சேகரிக்கப்பட்ட உலரு ணவுப் பொருட்களே இவ்வாறு விநியோகிக்கப்பட்டதாகப் பல்கலைக் கழக மாணவர் ஒன்றிய உறுப்பினர் ஒருவர் தெரிவித்தார். (ந-5)

## கால்கோள் விழா

யா/வல்வெட்டித்துறை அமெரிக்க மிஷன் தமிழ்க் கலவன் பாடசாலையின் கால்கோள் விழா இன்று காலை 9 மணிக்கு இப் பாடசாலை அதிபர் தூ.சக்திவேல் தலைமையில் நடைபெறவுள்ளது.

இந்நிகழ்வில் வல்வெட்டித்துறை இலங்கை வங்கி முகாமையாளர் எஸ்.சிறிகாந்தன் பிரதம விருந்தினராகக் கலந்து சிறப்பிக்கவுள்ளார். (ந-4)




# இன்று ஒரு தகவல்

## சீதையின் சிரிப்பு

அசோக வனத்தில் ஒரு மரத்தின் மீது அனுமர் உட்கார்ந்திருந்தார். சீதையைப் பார்ப்பதற்காக இராவணன் வந்தான். சீதைக்கு எவ்வளவோ சொல்லிப் பார்த்தான்.

"நதியின் பிரவாகம் இருக்கிறதே, அது போனது போனது தான். இளமையும் அப்படித்தான். போனால் திரும்பிவராது. உன்னுடைய யௌவனத்தை ஏன் இப்படி வீணாக்கிக் கொண்டிருக்கிறாய்? என்னைக் கல்யாணம் பண்ணிக் கொண்டு சந்தோஷமாக இருக்க வேண்டியது தானே'' என்றான்.

இந்தத் தகாத வார்த்தைகளைக் கேட்டதும்.. யாருக்குமே கோபம் வருவது இயல்பு.

ஆனால், சீதை ஒருதுரும்பை அவனுக்கு முன்னால் போட்டு புன்சிரிப்புடன் அவனுக்குப் பதில் சொல்வதாக வான்மீகி எழுதியிருக்கிறார். இந்த இடத்தில் நமக்கு ஒரு சந்தேகம்.

சீதையின் முகத்தில் புன்சிரிப்பு வருவதற்கு என்ன காரணம்?

இந்தச் சந்தேகத்தை பக்திப்பிரசங்கம் செய்யும் ஒருத்தர் தீர்த்து வைத்தார். எப்படித் தெரியுமா?

சீதா கல்யாணம் நடந்த சமயத்தில் பரமசிவனுக்கு அழைப்பு விடுக்க வில்லையாம். ஏன் தெரியுமா?

முகவரி கிடைக்க வில்லை. அவர்தான் எங்கும் இருப்பவராயிற்றே. எந்த விலாசத்துக்கு பத்திரிகையை அனுப்பமுடியும்? அதனால் என்ன செய்வதென்று தெரியாமல் இருந்து விட்டார்களாம். ஆனால் பரமசிவன் சும்மா இருக்கவில்லை. பத்திரிகை வரவில்லையென்றால் கூட சீதைக்குத் திருமணம் என்று கேள்விப்பட்டதும் வந்து சேர்ந்து விட்டார்.

ஆனால், அவர் வந்து சேர்வதற்குள் திருமணம் முடிந்துவிட்டது. மணமக்கள் எல்லோருடைய காலிலும் விழுந்து ஆசீர்வாதம் வாங்கிக் கொண்டிருந்தார்கள்.

அந்த நேரம் பார்த்து பரமசிவன் வந்து சேர்ந்தார்.

உடனே இராமரும் சீதையும் அவருடைய காலில் விழுந்து வணங்கினார்கள். தை பரமசிவனைப் பார்த்து ... "நீங்கள் எங்களுக்கு ஒரு பரிசும் கொடுக்க வேண்டாம். தங்களுடைய ஆசி மட்டும் எங்களுக்கு இருந்தால் அது போதும்''. என்றாராம். "ஏன் பரிசு வேண்டாம் என்று சொல்கிறாய்?

என்கையில் ஒரு பொருளும் இல்லையே என்பதைப் பார்த்துவிட்டு அப்படிச் சொல்கிறாயா?'' என்று கேட்டார். பரமசிவன்.

"அப்படித்தான் வைத்துக் கொள்ளுங்களேன். உங்களுக்கு வீண் சிரமம் வேண்டாமே என்பதற்காக அப்படிச் சொன்னேன்.'' என்றார் சீதை.

"அப்படியெல்லாம் நினைத்துவிடாதே. என்னிடம் மிக உயர்ந்த பொருள் ஒன்று இருக்கிறது. அதை உனக்குப் பரிசாகக் கொடுக்கப் போகிறேன்'' என்றார் அவர்.

அது என்ன என்று கேட்டார் சீதை ?

"என்னுடைய புன்சிரிப்பு'' என்றார்.

"அது எப்படி விலையுயர்ந்த பொருளாகும்?'' என்று கேட்டார்.

"ஏனாகாது? என் சிரிப்பைக் கண்டுதான் திரிபுரம் எரிந்தது. தெரியுமா? அதை உனக்குப் பரிசாகக் கொடுக்கிறேன்'' என்றார். இப்படி அப்பொழுது வாங்கிய அந்தப் பரிசு தான் இன்றைக்கு அசோக வனத்தில் சீதையிடம் இருந்தது.

இராவணனுக்கு முன் ஒரு துரும்பைப் போட்டு விட்டு சீதை புன்முறுவலோடு பதில் சொன்னதாக எழுதியிருப்பதற்கு இதுதான் காரணம்.

"அந்தச் சிரிப்பு திரிபுரத்தை எரித்தது. இந்தச் சிரிப்பு இலங்கையை எரிக்கப் போகிறது என்பதை காட்டுவதற்காகத்தான் சீதையின் முகத்தில் சிரிப்புத் தெரிந்தது என்று விளக்கம் சொன்னார் பெரியவர்.

ஆக மொத்தத்தில் சிரிப்பில் எவ்வளவு அர்த்தம் இருக்கிறது பாருங்கள். நம்ம ஆள் ஒருத்தர் ஒரு நாள் ரொம்ப சாவகாசமாக முகத்தில் புன்முறுவலுடன் வந்து கொண்டிருந்தார்.

"என்ன சேர் விடயம்.... உங்களுடைய முகத்தில் தெரியும் அந்தப் புன்முறுவலுக்கு என்ன காரணம்'' என்று அவரிடமே கேட்டேன். "வைக்கோல் போர் தீப்பிடித்து எரிகிறது சேர்.

அதுதான் இப்படி வந்து கொண்டிருக்கிறேன்'' என்றார். என்ன சேர் இது? அதைப் பதற்றம் எதுவுமில்லாமல் இவ்வளவு சாதாரணமாக எடுத்துக் கொள்கிறீங்க?'' என்றேன்.

எதற்குப் பதற வேண்டும்? எரியுற வைக்கோல் போர் என்னுடையதில்லையே. எதிர்வீட்டுக்காறருடையது அல்லவா? என்றார் அவர்.

*தென்கச்சி கோ சுவாமிநாதன்*

# வெள்ளத்தால் பாதிக்கப்பட்டோருக்கு உதவ விசேட மருத்துவ குழுக்கள் அனுப்பிவைப்பு

மட்டக்களப்பு மாவட்டத்தில் மழை வெள்ளம் காரணமாக இடம் பெயர்ந்த மக்களுக்கு உதவுவதற்கென 10 விசேட மருத்துவக் குழுக்களை பணியில் ஈடுபடுத்த சுகாதார அமைச்சு தீர்மானித்துள்ளது.

முதலாவது தொகுதியில் 21 மருத்துவர்கள் கடந்த சனிக்கிழமை இம்மாவட்டத்திற்கு அனுப்பிவைக் கப்பட்டனர். மேலும் 5 குழுக்கள் இன்று புறப்பட்டுச்செல்லவுள்ளன.

அம்பாறை, மட்டக்களப்பு, பொலனறுவை, திருகோணமலை மாவட்டங்களில் உள்ள பெரிய வைத்தியசாலைகளில் இருந்து விசேட மருத்துவக் குழுக்கள் அனுப்பி வைக்கப் பட்டுள்ளன. இருந்த போதிலும் குளிர்காய்ச்சல் மஞ்சள் காமாலை ஏஎச்1என்1 மற்றும் மலேரியா போன்ற தொற்று நோய்கள் நலன்புரி நிலையங்களில் ஏற்பட்டிருப்பதாக இதுவரை தகவல் கிடைக்கவில்லை. இடம் பெயர்ந்த வர்களுக்கு தேவையான வசதிகளை வழங்குமாறு சுகாதார அமைச்சர் விடுத்த வேண்டு கோளுக்கு இணங்க இவ் ஏற்பாடுகள் செய்யப்பட்டுள்ளன. (ஸ்ரீ-4-9)

# வாழ்வாதார உதவி வழங்கும் நிகழ்வு

அகதிகள் புனர்வாழ்வு நிறுவனத்தால் சுயதொழில் பயனாளிகளுக்கான வாழ்வாதார உதவி வழங்கும் நிகழ்வு நாளை புதன்கிழமை பிற்பகல் 2 மணிக்கு அகதிகள் புனர்வாழ்வு நிறுவனத் தலைவர் பேராசிரியர் ப.சிவநாதன் தலைமையில் நடைபெறவுள்ளது.

இந் நிகழ்வில் முதன்மை விருந்தினராக யாழ்.மாவட்ட அரசாங்க அதிபர் திருமதி இமெல்டா சுகுமார் மற்றும் சிறப்பு விருந்தினர்களாக தெல்லிப்பளைப் பிரதேச செயலர் எஸ். முரளிதரன், சண்டிலிப்பாய் பிரதேச செயலர் திருமதி எ.அன்ரன் யோகநாயகம் ஆகியோர் கலந்து சிறப்பிக்கவுள்ளனர். (ஸ்ரீ-4)

# கலந்துரையாடல்

(யாழ்ப்பாணம்)

யாழ். மாவட்டத்தில் உள்ள பாடசாலைகளில் கட்டட நிர்மாணம் மற்றும் திருத்த வேலைகளை மேற்கொள்ளும் ஒப்பந்தகாரர்களுக்கும் மற்றும் பாடசாலை அபிவிருத்திச்சங்க பிரதிநிதிகளுக்கான விசேட கலந்துரையாடல் இன்று செவ்வாய்க்கிழமை பிற்பகல் 2.30 மணிக்கு யாழ். கல்வி வலய முகாமைத்துவ மண்டபத்தில் நடைபெறவுள்ளதாக பாடசாலை வேலைகள் பொறியியலாளர் கு.சிவபாலன் அறிவித்துள்ளார்.

எனவே கட்டட நிர்மாண மற்றும் திருத்த வேலைகளை மேற்கொள்ளும் ஒப்பந்தகாரர்களும் பாடசாலை அபிவிருத்திச் சங்க பிரதிநிதிகளையும் தவறாது கலந்து கொள்ளுமாறு அவர் கேட்டுள்ளார். (ஸ்ரீ-4)

# இறுதிப்பரீட்சை

(யாழ்ப்பாணம்)

யாழ்ப்பாணம் வலய முறைசாராக் கல்விப் பிரிவினால் கடந்த ஆண்டு நடாத்தப்பட்ட தொழிற்றிறன் பயிற்சி நெறிகள் மற்றும் சிங்களமொழி, ஆங்கில மொழிக்கான இறுதிப் பரீட்சைகள் நாளை புதன்கிழமை காலை 9 மணி முதல் பிற்பகல் 4 மணி வரை யாழ். இந்து மகளிர் கல்லூரியில் நடைபெறவுள்ளது.

மேற்படி பரீட்சையில் தோற்றவுள்ள பரீட்சார்த்திகள் தமக்குரிய அனுமதியட்டைகளை தமது போதனாசிரியர்களிடமிருந்து பெற்றுக் கொள்ளுமாறு யாழ்.வலயக்கல்விப் பணிப்பாளர் திருமதி அ.வேதநாயகம் அறுவுத்துள்ளனர். (ஸ்ரீ-4)

# குடாநாட்டு சந்தைகளில் நேற்றைய விலை விபரம்

| மரக்கறி வகைகள் | நெல்லியடி | திருநெல்வேலி | யாழ்ப்பாணம் | சாவகச்சேரி |
|---|---|---|---|---|
| | ரூபா | ரூபா | ரூபா | ரூபா |
| கத்தரிக்காய் | 200 | 160 | 180 | 150 |
| உருளைக்கிழங்கு | 50 | 60 | 70 | 60 |
| பச்சைமிளகாய் | 350 | 300 | 300 | 300 |
| தக்காளி | 80 | 120 | 150 | 140 |
| மரவள்ளிக்கிழங்கு | 50 | 40 | 50 | 50 |
| கோவா | 100 | 80 | 120 | 90 |
| கரட் | 100 | 140 | 160 | 130 |
| பூசணி | 20 | 40 | 40 | 40 |
| புடோல் | 70 | 100 | 100 | 90 |
| வாழைக்காய் | 35-40 | 50 | 60 | 40 |
| சின்ன வெங்காயம் | 280 | 300 | 300 | 270 |
| பெரிய வெங்காயம் | 130 | 120 | 150 | 140 |
| பாகற்காய் | 140-150 | 200 | 300 | 170 |
| வெண்டிக்காய் | 90 | 100 | 150 | 90 |
| கருணைக் கிழங்கு | - | 50 | 80 | 60 |
| பயற்றங்காய் | 250 | 200 | 300 | 270 |
| லீக்ஸ் | 70-80 | 120 | 180 | 150 |
| பீற்றூட் | - | - | 160 | 150 |
| கறிமிளகாய் | - | 280 | 300 | 270 |
| முருங்கைக்காய் | - | - | - | - |
| போஞ்சி | 180 | 200 | 280 | 160 |
| கத்தரிதம்புள்ள | - | 120 | 180 | 130 |
| கீரை - 1 பிடி | 20 | 40 | 40 | 30 |
| தேசிக்காய் | 70-80 | 60 | 100 | 90 |
| தேங்காய் (ஒன்று) | 30-50 | 45 | 50-60 | 45 |

# இராசி பலன்

18.01.2011
(தை 04, செவ்வாய்க்கிழமை)
சூரிய உதயம் காலை 6.28 மணிக்கு
சதுர்த்தி பின்னிரவு 5.03 மணிவரை
திருவாதிரை பின்னிரவு 12.48 மணிவரை
இராகுகாலம் 3.35-5.05 மணிவரை
சுபநேரம் 11.05-12.35 மணிவரை

**மேடம்** விருந்து விழாக்களில் கலந்து கொண்டு மகிழும் நாள், தொழில் போட்டிகளை முறியடித்து வெற்றி காண்பீர்கள், சகோதர ஒற்றுமை மேலோங்கும்.

**இடபம்** அலங்காரப் பொருட்களை வாங்க முற்படுவீர்கள், உறவினர்கள் மத்தியில் மதிப்பும் மரியாதையும் உயரும், குடும்பத்தில் குதூகலம் ஏற்படும்.

**மிதுனம்** அம்பிகை வழிபாட்டால் பெருமை காணவேண்டிய நாள், குடும்பச்செலவுகளில் சிக்கனம் காட்ட முன்வருவீர்கள், மன ஆறுதல் தரும் விதத்தில் பயணமொன்று உருவாகலாம்.

**கடகம்** தூரத்துச் சொந்தங்களின் வருகையால் செலவுகள் ஏற்படலாம், அம்பிகை வழிபாடு இன்பம் தரும், எதிர்பாராத திருப்பங்கள் ஏற்படும் நாள்.

**சிங்கம்** சிறப்பான நாள், பொருள்வரவிற்கு அத்திவாரமிடுவீர்கள், கௌரவமான சூழல் அமையும், எடுத்த கருமங்கள் கைகூடும், போசன சுகமுண்டு.

**கன்னி** செல்வாக்கு மேலோங்கும் நாள், வீடுகட்டும் பணியில் ஈடுபட நினைப்பீர்கள், செய்தொழிலில் அதிக ஆர்வம் காட்டுவீர்கள்.

**துலாம்** தொழில் வளர்ச்சிக்கு தடையாக இருந்தவர்கள் விலகுவர், கனிவான பேச்சுக்களால் காரியம் சாதிக்க நினைப்பீர்கள், திடீர் பயணங்கள் ஏற்படலாம்.

**விருச்சிகம்** வாழ்க்கைத் தேவைகளைப் பூர்த்தி செய்து கொள்வதில் அக்கறைகாட்டுவீர்கள், உறவினர்களிடையே சிறு மனஸ்தாபம் ஏற்படலாம்.

**தனுசு** உறவினர் சிலரைத் தேடிச் சென்று சந்திப்பீர்கள், தொழிலில் புதிய முதலீடுகளைச் செய்யும் எண்ணம் உருவாகும், வீட்டுத் தேவைகள் பூர்த்தியாகும்.

**மகரம்** தொழில் வளாச்சி மேம்படும், மாற்றினத்தவர் மகிழ்ச்சிக்குரிய செய்திகளைக் கொண்டு வருவர், தேக நலன் புத்துணர்வு பெறும், போஜன சுகமுண்டு.

**கும்பம்** முன்னைய செய்திகளால் ஏற்பட்ட வில்லங்கங்கள் அகலும், பிள்ளைகளின் தேவைகளை நிறைவு செய்ய முன்வருவீர்கள், உறவினர் வழியில் இனிய சம்பவம் ஒன்று நிகழலாம்

**மீனம்** தொழில் ரீதியாக வரவேண்டிய பணவரவு கைக்குக் கிடைக்கலாம். தாயின் உடல் நலம் சீராகும், தூரதேசச் செய்திகள் நன்மையளிக்கும்.

வளவன்



51ஆவது படைப்பிரிவின் ஏற்பாட்டில் யாழ்.இந்துக்கல்லூரியில் நேற்றுமுன்தினம் தைப்பொங்கல் விழா கொண்டாடப்பட்டது. இந்நிகழ்வில் வாழ்நாள் பேராசிரியர் பொ.பாலசுந்தரம்பிள்ளை மங்கல விளக்கேற்றுவதையும் டெங்குநோய் பற்றிய விழிப்புணர்வு சித்திரப் போட்டியில் வெற்றியீட்டிய மாணவருக்கு யாழ்.படைகளின் கட்டளைத்தபதி மஹிந்த கத்துருசிங்க பரிசில் வழங்குவதையும் தமிழ்மொழி மூலமான கட்டுரைப்போட்டியில் வெற்றிபெற்ற மாணவிக்கு யாழ்.அரச அதிபர் திருமதி இமெல்டா சுகுமார் பரிசில் வழங்குவதையும் விருந்தினர்கள் மற்றும் நிகழ்வில் கலந்துகொண்டவர்களையும் படங்களில் காணலாம். (படங்கள்:-எஸ்.கரன்)

## அதிபர்களுக்கான கூட்டம்

(அல்வாய்)

வடமராட்சி வலயப் பாடசாலை அதிபர்களுக்கான மாதாந்த மீளாய்வுக் கூட்டம் எதிர்வரும் 21ஆம் திகதி வெள்ளிக்கிழமை காலை 8.30 மணி தொடக்கம் மாலை 3.30 மணிவரை புலோலி மெ.மி.த.க.பாடசாலை மண்டபத்தில் வலயக் கல்விப் பணிப்பாளர் வை.செல்வராஜா தலைமையில் நடைபெறவுள்ளது.

பாடசாலைகளின் வருடாந்த அமுலாக்கத் திட்டம் உள்வாரி, வெளிவாரி மதிப்பீடுகள் மற்றும் ஏனைய வருடாந்த திட்டங்கள் பற்றி கலந்துரையாடப்படவுள்ளதால் சகல அதிபர்களும் குறித்த நேரத்திற்கு சமுகமளிக்குமாறு கேட்கப்பட்டுள்ளனர்.

அத்துடன் தேவையான இலவச சீருடை, இலவச பாடநூல் போன்ற விபரங்களை அத்தினத்தில் சமர்ப்பிக்குமாறு கேட்கப்பட்டுள்ளது. (ஸ்ரீ-3-19)

## தெங்கு உரமானியத்தை பகிர்ந்தளிக்கும் செயற்றிட்டம்

(கொழும்புத்துறை)

இலங்கை சமுர்த்தி அதிகார சபையால் தெங்கு உரமானியத்தினை பங்கிட்டுக்கொடுத்தல் தொடர்பான வேலைத்திட்டம் தெங்கு அபிவிருத்தி மற்றும் மக்கள் தோட்ட அபிவிருத்தி அமைச்சின் ஊடாக செயற்படுத்த திட்டமிடப்பட்டுள்ளது.

இதில் கப்ருக உரமானிய வேலைத்திட்டத்திற்கு தெரிவு செய்யப்பட்ட குடும்பங்களுக்கு பரந்த அளவில் தென்னங்கன்றுகளை நடுவதற்கு உதவி செய்யப்படவுள்ளது.

சமுர்த்தி வேலைத் திட்டத்தின் கீழ் கிராம மட்டங்களில் வாழ்வாதார அபிவிருத்தியை மேம்படுத்த தெங்குப் பயிர்ச்செய்கையை விஸ்தரிக்கவும் சேவையைப் பெறுவோருக்கு பயிற்சிகள் வழங்கப்படவுள்ளதாகவும் இலங்கை சமுர்த்தி அதிகாரசபை பணிப்பாளர் நாயகம் ஆர்.பி.பீ. திலகசிறி சகல சமுர்த்தி அலுவலகங்களுக்கும் அறிவித்துள்ளார்.

அதற்கமைய தென்னங்கன்றுகளையும் மற்றும் உரப்பசளை நிவாரணத்தைப் பெற விரும்புபவர்கள், சமுர்த்தி உத்தியோகத்தர், கிராம சேவகர் ஆகியோரிடம் அல்லது நாவலர் வீதியிலுள்ள தென்னைப் பயிர்ச் செய்கை சபையிடம் விண்ணப்பங்களை பூர்த்தி செய்து கொடுக்க முடியும் என்றும் குறிப்பாக ஐயாயிரம் ரூபா பெறுமதியான உரம் ஆயிரம் ரூபாவுக்கு வழங்கப்படவுள்ளமை குறிப்பிடத்தக்கது. (ஸ்ரீ-3-51)

## சாதாரணதர அழகியல் பாட செய்முறை பரீட்சை ஒத்திவைப்பு

(யாழ்ப்பாணம்)

பரீட்சைத் திணைக்களத்தின் வாய்மூல அறிவுறுத்தலுக்கு அமைவாக க.பொ.த(சா/த) தர அழகியல் பாடசெயன்முறைப் பரீட்சை நடைபெறும் திகதிகள் பிற்போடப்பட்டுள்ளன.

இதற்கான திகதிகள் பின்னர் பாடசாலைகளுக்கு அறிவிக்கப்படும் என யாழ். கல்விப் பணிப்பாளர் திருமதி அ.வேதநாயகம் அறிவித்துள்ளார். (ஸ்ரீ-2)




## வடமராட்சி கல்வி வலயத்தின் ஆசிரியர் நிலையம் இடமாற்றம்

(அல்வாய்)

வடமராட்சி கல்வி வலயத்தின் ஆசிரியர் நிலையம் எதிர்வரும் 20ஆம் திகதி தைப்பூசத் தினத்தன்று புலோலி மெ.மி.த.க. பாடசாலையின் மாடிக்கட்டடத்திற்கு மாற்றப்படவுள்ளது.

ஆசிரியர்களின் வாண்மை விருத்தி தொடர்பான செயலமர்வுகளுக்கு நெல்லியடி மத்திய மகாவித்தியாலயத்தில் அமைந்துள்ள ஆசிரியர் நிலையக் கட்டடம் போதாமையினாலும் மற்றும் ஆசிரியர்களுக்கு இடப்பற்றாக்குறை காரணமாகவும் வடமராட்சி வலயக் கல்விப் பணிப்பாளர் அவ் ஆசிரியர் நிலையத்தின் முழுப் பிரதான செயற்பாடுகளையும் புலோலி மெ.மி.த.க. பாடசாலையில் நடத்துமாறு ஆசிரிய நிலையத்தின் பணிப்பாளருக்கு பணித்துள்ளார்.

மேலும் நெல்லியடியில் உள்ள ஆசிரியர் நிலையத்தில் குறைந்த எண்ணிக்கையுள்ள ஆசிரியர்களுக்கான கருத்தரங்குகளை வைக்குமாறும் குறிப்பிட்டுள்ளார். (ஸ்ரீ-3-19)

## அரச ஊழியர்களுக்கு பெப்ரவரி மாத சம்பளத்துடன் ஜனவரிமாத கொடுப்பனவு

(அல்வாய்)

அரச ஊழியர்களுக்கு இம்மாதம் முதல் அடிப்படைச் சம்பளத்தில் ஐந்து வீதமும் வாழ்க்கைச் செலவுப் படியாக 600 ரூபாவும் வழங்குவதற்கான சுற்றுநிருபம் சகல திணைக்களங்களிற்கும் அனுப்பி வைக்கப்பட்டுள்ளன.

கடந்த நவம்பர் மாதம் நடைபெற்ற வரவு-செலவுத் திட்டத்தில் இச் சம்பள அதிகரிப்பு வழங்கவுள்ளதாக ஜனாதிபதியும் நிதியமைச்சருமான மஹிந்த ராஜபக்ஷ அறிவித்திருந்தார்.

ஓய்வூதியர்களுக்கு இம்மாதம் 10 ஆம் திகதி வழங்கப்பட்ட ஓய்வூதியத்தில் ரூபா 300 வாழ்கைப்படியாக வழங்கப்பட்டிருந்தமை குறிப்பிடத்தக்கது.

இதேவேளை வடமாகாணக் கல்வியமைச்சினால் இச் சம்பள உயர்வுக்கான கட்டு நிதி கிடைக்கப் பெறவில்லை என வடமராட்சி வலயக் கணக்காளர் தெரிவித்துள்ளார்.

மேலும் எதிர்வரும் பெப்ரவரி மாத சம்பளத்துடன் ஜனவரி மாதத்திற்குரிய கொடுப்பனவும் வழங்க நடவடிக்கை எடுத்துள்ளதாக அவர் தெரிவித்தார். (ஸ்ரீ-3-19)

## கால்கோள் விழா

(யாழ்ப்பாணம்)

யாழ்ப்பாணக் கல்லூரியில் தரம் 1 மாணவர்களுக்கான கால்கோள்விழா இன்று காலை 9 மணிக்கு கல்லூரி மண்டபத்தில் அதிபர் நோயல் விமலேந்திரன் தலைமையில் நடைபெறவுள்ளது.

இன்றைய தினம் எல்லா மாணவர்களுக்கும் சேமிப்புக் கணக்குப் புத்தகங்களும் பரிசில்களும் வழங்கப்படவுள்ளன. (ஸ்ரீ-9)

✠✠✠

(யாழ்ப்பாணம்)

யா/ஏழாலை மேற்கு சைவ சன்மார்க்க வித்தியாசாலையின் தரம் 1 மாணவர்களுக்கான கால்கோள் விழா இன்று செவ்வாய்க்கிழமை காலை 8.30 மணிக்கு வித்தியாலய அதிபர் செல்வி என்.பிரதா தலைமையில் நடைபெறும்.

இந்நிகழ்வில் வலிகாமம் கல்வி வலய ஆசிரிய ஆலோசகர் திருமதி மயில்வாகனம், ஏழாலை மகாவித்தியால ஓய்வுபெற்ற முன்னாள் உபஅதிபர் திருமதி நா.கந்தசாமி ஆகியோர் கலந்து சிறப்பிக்கவுள்ளனர். (ஸ்ரீ-9)

✠✠✠

(யாழ்ப்பாணம்)

யா/காரை ஊரி அ.மி.த.க. வித்தியாலய கால்கோள் விழாவும் கணனிக்கூடத் திறப்பு விழாவும் இன்று செவ்வாய்க்கிழமை நடைபெறும். நிகழ்வில் கால்கோள்விழா காலை 9 மணிக்கும் கணனிக்கூடத் திறப்பு விழா காலை 10 மணிக்கும் பாடசாலை அதிபர் இ.சிறிதரன் தலைமையில் நடைபெறவுள்ளது.

இந்நிகழ்வில் பிரதம விருந்தினராக தீவக வலயக் கல்விப் பணிப்பாள் ஜி.வி. இராதாகிருஷ்ணன், சிறப்பு விருந்தினர்களாக காரைநகர் உதவி அரசாங்க அதிபர் ஆர்.ரி. ஜெயசீலன், வடமாகாண உதவிக் கல்விப் பணிப்பாளர் ரி.லெனின் அறிவழகன், தீவக வலய ஆசிரிய ஆலோசகர் என். அம்பிகைபாகன், காரைநகர் கோட்டக் கல்விப் பணிப்பாளர் பி.சிறிவிக்னேஸ்வரன், தீவக வலய ஆரம்பக் கல்வி ஆசிரிய ஆலோசகர் மு. கேசவன் ஆகியோர் கலந்து சிறப்பிக்கவுள்ளனர். (ஸ்ரீ-9)

(இருபாலை)

யாழ். வண்ணை நாவலர் மகாவித்தியாலயத்தில் தரம் 1 மாணவர்களின் கால்கோள் விழா இன்று செவ்வாய்க்கிழமை காலை 9 மணிக்கு அதிபர் சு.சிவபாதசுந்தரம் தலைமையில் இடம்பெறவுள்ளது.

இந்நிகழ்வில் பிரதம விருந்தினராக யாழ். வைத்தீஸ்வரா கல்லூரி அதிபர் மு. மகேந்திரன் கலந்து சிறப்பிக்கவுள்ளார். (ஸ்ரீ-136)

✠✠✠

யா/விக்கினேஸ்வர ஆரம்பப் பாடசாலையின் தரம் 1 மாணவர்களுக்கான கால் கோள் விழா இன்று செவ்வாய்க்கிழமை காலை 9.30 மணிக்கு பாடசாலை மண்டபத்தில் பாடசாலையின் அதிபர் எம். மகாகேதீஸ்வரன் தலைமையில் நடைபெறவுள்ளது.

இந்நிகழ்வில் பிரதம விருந்தினராக நெல்லியடி மக்கள் வங்கி பிரதி முகாமையாளர் த. தர்மரத்தினம் கலந்து சிறப்பிக்கவுள்ளார். (ஸ்ரீ-9)

✠✠✠

(யாழ்ப்பாணம்)

யா/குளமங்கால், றோ.க.வித்தியாலய தரம் 1 மாணவர்களுக்கான கால்கோள் விழா இன்று காலை 9 மணிக்கு பாடசாலை மண்டபத்தில் பாடசாலை அதிபர் செல்வி அ.றோ. ஜெயநாயகி தலைமையில் நடைபெறவுள்ளது.

இந்நிகழ்வில் பிரதம விருந்தினராக புனித சவேரியார் ஆலயப் பங்குத் தந்தை அருட்பணி ம.றெக்ஸ் சவுந்திரா கலந்துகொள்ளவுள்ளார்.

சிறப்பு விருந்தினராக இலங்கை வங்கி சிரேஷ்ட முகாமையாளர் சி.விக்னராஜா கலந்துகொண்டு தரம் 1 மாணவர்களுக்கான பாடசாலை பைகளை அன்பளிப்புச் செய்யவுள்ளார். மேலும் இந்நிகழ்வில் மாணவர்களின் பெற்றோர்களையும் வருகை தருமாறு அதிபர் கேட்டுக்கொள்கின்றார். (ஸ்ரீ-9)

✠✠✠

வல்வை சிவகுரு வித்தியாசாலையின் தரம் 1 மாணவர்களுக்கான கால்கோள் விழா இன்று செவ்வாய்கிழமை காலை 9 மணிக்கு வித்தியாலய அதிபர் ஆ.சிவநாதன் தலைமையில் நடைபெறவுள்ளது.

இந்நிகழ்வில் சமூக சேவையாளரும் கிராமசேவகருமான சி.தவனேஸ்வரன் கலந்து சிறப்பிக்கவுள்ளார். (ஸ்ரீ-63)

# பிரதேச செயலகத்தின் மீது இனந்தெரியாதோர் தாக்குதல்

(கொழும்பு)

நிவாரணப்பொருட்கள் கிடைக்கவில்லை எனக்கோரி மட்டக்களப்பு ஆரையம்பதி பிரதேச செயலகத்தின் மீது இனந்தெரியாத சிலர்தாக்குதல் நடத்தியதாகத் தெரிவிக்கப் படுகின்றது.

நேற்றைய தினம் இனந்தெரியாத குழு வினர் தமது அலுவலக ஊழியர்களை அச்சுறுத்தியதுடன் அலுவலகத்தின் உடமை களுக்கு சேதம் விளைவித்ததாக பிரதேச செயலாளர் கே.தனபாலசுந்தரம் தெரிவித் தார்.


இதேவேளை நிவாரணப்பொருட்களை மறைத்துவைத்திருந்ததாகக் கூறி நேற்று முன்தினம் கிராம உத்தியோகத்தர் மீதும் தாக்குதல் நடத்தப்பட்டுள்ளது.

இந்த நிலைமையின் கீழ் நிவாரணப் பொருட்களை விநியோகிக்கும் நடவடிக்கை களில் சிக்கல் ஏற்பட்டுள்ளதாக ஆரையம்பதி பிரதேச செயலாளர் குறிப்பிட்டுள்ளார்.

இச்சம்பவம் தொடர்பாக பொலிஸ் நிலை யத்தில் முறைப்பாடு செய்யப்பட்டுள்ளதாக வும் அவர் தெரிவித்தார்.

இந்தத் தாக்குதல் சம்பவம் குறித்து விசார ணைகளை மேற்கொள்வதற்காக உதவிப் பொலிஸ் அத்தியட்சகர் ஒருவரை காத்தான்குடி ஆரையம்பதி பிரதேசத்துக்கு அனுப்பி வைத் துள்ளதாக பிராந்தியப் பொலிஸ் மேலதிகாரி தெரிவித்துள்ளார்.

தாக்குதலுக்குள்ளான கிராமசேவை யாளர் வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட் டுள்ளார். (ஸ்ரீ-4-9)



2010 ஆம் ஆண்டுக்கான பன்முகப்படுத்தப்பட்ட வரவு -செலவுத் திட்ட நிதியின் மூலமாக ஒரு தொகை தளபாடங்களை அண்மையில் யாழ். மாவட்ட பாராளுமன்ற உறுப்பினர் சிவஞானம் சிறீதரன் யாழ்.பெரியபுலம் மகா வித்தியாலய அதிபரிடம் கையளிப்பதைப் படத்தில் காணலாம்.

# டெங்கு நோயைக் கட்டுப்படுத்துவதில் இராணுவத்தினர் முக்கிய பங்காற்றினர்

## யாழ்.பிராந்திய சுகாதார சேவைகள் பணிப்பாளர் தெரிவிப்பு

(யாழ்ப்பாணம்)

யாழ்.மாவட்டத்தில் டெங்குநோயைக் கட்டுப்படுத்துவதில் இராணுவத்தினரின் பங்க ளிப்பு பாராட்டிற்குரியதென யாழ். மாவட்ட சுகாதார சேவைகள் பணிப்பாளர் வைத்திய கலாநிதி ஆ.கேதீஸ்வரன் தெரிவித்துள்ளார்.

51ஆவது படைப்பிரிவின் ஏற்பாட்டில் யாழ்.இந்துக் கல்லூரியில் இடம்பெற்ற தைப்பொங்கல் விழாவில் கலந்துகொண்டு உரையாற்றும்போதே அவர் இவ்வாறு தெரி வித்தார்.

அவர் அங்கு மேலும் தெரிவிக்கையில், யாழ்.மாவட்டத்தில் 2010 ஆம் ஆண்டு 2100 டெங்குநோயாளர்கள் இனங்காணப்பட்டனர்.

இதில் 28பேர் உயிரிழந்துள்ளனர். யாழ் .மாவட்டத்தில் டெங்குநோயைக் கட்டுப்படுத் துவதற்காக நாங்கள் மாவட்டம், பிரதேசம், கிராமமட்டங்கள் ரீதியாக குழுக்களை அமை த்து செயற்பட்டிருந்தோம்.

மாவட்ட மட்டத்தில் அரசாங்க அதிபர் தலைமையிலும் பிரதேச மட்டத்தில் பிரதேச செயலாளர்கள் தலைமையிலும் கிராம மட்டத்தில் கிராமசேவையாளர் தலைமையி லும் இக்குழுக்கள் சிறப்பாகச் செயற்பட்டனர்.

யாழ்.மாவட்டத்தைப் பொறுத்தவரையில் டெங்குநோயைக் கட்டுப்படுத்துவதில் திணைக் களங்கள், அரச சார்பற்ற நிறுவ னங்கள், வர்த்தகர்கள்,பொலிஸார் மற்றும் இராணுவத் தினர், பத்திரிகையாளர்கள் ஆகியோர் தமது பங்களிப்பைச் செலுத்தியிருந்தனர்.

குறிப்பாக, இராணுவத்தினர் மக்கள் மத்தி யில் டெங்குநோய் பற்றிய விழிப்புணர்வு ஏற்படுத்துவதில் முனைப்புடன் செயற்பட்டனர். வீதிகள் தோறும் டெங்குநோய் பற்றிய அறி வித்தல்களை விடுத்திருந்தனர்.

இதேவேளை வீடுவீடாகச் சென்று மக்க ளுக்கு டெங்குநோய் பற்றிய விழிப்புணர் வையும் ஏற்படுத்தியதோடு பாடசாலை மாணவர்களுக்கு கட்டுரைப்போட்டிகள், சித்திரப்போட்டிகள் என பலபோட்டிகள் நடாத்தி மக்கள் மத்தியில் டெங்கு தொடர்பான விழிப் புணர்வை ஏற்படுத்தினார்கள்.

அதுமட்டுமன்றி சூழல் சுத்திகரிப்பு நடவ டிக்கையிலும் இராணுவத்தினர் ஈடுபட்டிருந் தனர். குறிப்பாக பொது இடங்களில் அதாவது வைத்தியசாலைகள்,மக்கள் கூடும் இடங்கள் ஆகியவற்றை சுத்திகரிப்பதில் இராணுவத்தி னர் தமது ஒத்துழைப்பை வழங்கியுள்ளனர்.

இதேபோன்று யாழ்.மாவட்டத்தில் பரா மரிப்பற்றுக் காணப்படுகின்ற காணிகளில் இருந்த பற்றைகளை அகற்றி டெங்கு ஒழிப்பு நடவடிக்கையில் ஈடுபட்டனர்.

ஆனால் 2011 ஆம் ஆண்டு கடந்த 15ஆம் திகதிவரை 40பேர் மட்டுமே டெங்கு நோயால் பாதிக்கப்பட்டுள்ளனர்.

இவ்வாறு டெங்குநோய் பாரியளவில் கட்டுப்படுத்தப்பட்டுள்ளது என அவர் மேலும் தெரிவித்தார். (ஸ்ரீ-2-6)

# கலைஞர்கள் கௌரவிப்பு

நீர்வேலி காமாட்சிஅம்பாள் ஆலய வருடாந்த அலங்கார உற்சவத்தின் 12ஆம் திருவிழாவானது நாளை புதன்கிழமை காலை 10 மணிக்கு விசேட அபிஷேக ஆராத னைகள் ஆரம்பமாகவுள்ளது. இந்நிகழ்வின் போது நண்பகல் 12 மணிக்கு நீர்வேலி அத்தி யார் இந்துக் கல்லூரி அதிபர் இ.குணநாதன் தலைமையில் இளங்கலைஞர்கள் கௌர விப்பு இடம்பெறும். (ஸ்ரீ-4)







யா/ அளவெட்டி அருணோதயாக் கல்லூரியில் ஒளிவிழா நிகழ்வு அண்மையில் நடைபெற்றது. இந் நிகழ்வில் பிரதம விருந்தினராகக் கலந்துகொண்ட அருட்தந்தை ஏ.ஜேசுதாஸ் மங்கல விளக்கேற்றுவதையும் மாணவர்களின் கலைநிகழ்ச்சியையும் படங்களில் காணலாம்.

# அறுகம்பையில் காணாமல்போன மீனவர்கள் தங்காலையில் மீட்பு

(கொழும்பு)

அறுகம்பையிலிருந்து கடலுக்கு மீன் பிடிக்கச் சென்ற நிலையில் காணாமல் போன 10 முஸ்லிம் மீனவர்களில் 7 பேர் தங்காலைப் கடற்பகுதியில் தத்தளித்துக் கொண்டிருந்த நிலையில் ரோலர் படகு மீனவர்களினால் காப்பாற்றப்பட்டுள்ளனர்.

அத்துடன் மேற்படி மீனவர்களுக்குச் சொந்தமான மூன்று படகுகளும் மேற்படி ரோலர் படகு மீனவர்களால் கரைசேர்க்கப்பட்டுள்ளதாக தெரிவிக்கப்படுகின்றது.

இருப்பினும் காணாமல்போன மேலும் மூன்று மீனவர்களும் அவர்கள் பயணித்த படகும் இதுவரையில் கண்டுபிடிக்கப்பட வில்லை.

இந்த சம்பவம் தொடர்பில் பொத்துவில் பொலிசார் விசாரணைகளை மேற்கொண்டு வருகின்றனர். (ஸ்ரீ-2)

# நீண்டகால விருப்பப்படி மகரஜோதியை தரிசித்த இலங்கை பக்தர் பலியான சோகம்

(இடுக்கி)

இலங்கையைச் சேர்ந்த உஷாகாந் (வயது 24) என்ற வியாபாரிக்கு சபரிமலை மகர ஜோதியை தரிசிக்க வேண்டும் என்பது நீண்ட கால விருப்பமாகும்.

அதன்படி இலங்கையிலிருந்து 20 பேர் கொண்ட குழுவினருடன் முதல்முறையாக அவர் சபரிமலை சென்று, மகர ஜோதியை தரிசித்து தனது விருப்பத்தை நிறைவேற்றினார்.

ஆனால், பின்னர் நடந்த விபத்தில் சிக்கி உஷாகாந் மரணத்தைத் தழுவினார். அவருடன் வந்த ஒருவர் மட்டும் இலேசான காயம் அடைந்தார்.

மற்றவர்கள் அனைவரும் உயிர் தப்பினார்கள்.

பலியான உஷாகாந்தின் உடலை இலங்கைக்கு அனுப்பி வைக்க கேரள மாநில அரசு ஏற்பாடு செய்து வருகிறது. (ஸ்ரீ-2)

# ஆணைக்குழுவின் அம்பாறை அமர்வு பெப்ரவரி வரை ஒத்திவைப்பு

(கொழும்பு)

அம்பாறை மாவட்டத்துக்கான கற்றிந்த பாடங்கள் மற்றும் நல்லிணக்க ஆணைக் குழுவின் அமர்வு அண்மையில் ஏற்பட்ட வெள்ள அனர்த்தம் காரணமாக எதிர்வரும் பெப்ரவரி மாதம் வரை ஒத்திவைக்கப்பட் டுள்ளது.

அம்பாறை மாவட்டத்திற்கான அமர்வு எதிர்வரும் 21 ஆம் திகதி தொடக்கம் 23 ஆம் திகதி வரை நடத்த ஏற்பாடாகியிருந்தமை குறிப்பிடத்தக்கது.

இந்நிலையில் மாவட்டத்தில் ஏற்பட்ட வெள்ள அனர்த்தம் மக்களின் இயல்பு நிலையை முற்றாக ஸ்தம்பிக்கச் செய்துள்ளது. (ஸ்ரீ-2)

# ரீலோட் முறையில் மின்சார பாவனை நாட்டில் அறிமுகப்படுத்தப்படவுள்ளது

இலங்கை தனியார் மின்சார சபையின் கீழ் நிர்வகிக்கப்படும் வீட்டுமின் பாவனையாளர்கள் முற்பணம் மூலம் கட்டணம் செலுத்தும் வகையில் மானி ஒன்றை அறிமுகப்படுத்தப்படவுள்ளதாக கூட்டுத்தாபனத்தின் பொது முகாமையாளர் சுசனத பெரேரா தெரிவித்தார்.

இவ்வருட இறுதிக்குள் இப்புதிய மானியை அறிமுகப்படுத்தவுள்ளதாக கொழும்பில் உள்ள மின்சக்தி மற்றும் வலுவூட்டல் அமைச்சில் இடம்பெற்ற ஊடகவியலாளர் சந்திப்பின்போது அவர் இவ்வாறு தெரிவித்தார்.

கைத்தொலைபேசி மூலம் முற்பணமாக பணத்தை செலுத்திபாவனையாளர்கள் மின்சாரத்தை உபயோகிக்க முடியுமெனவும் செலுத்தப்பட்ட பணம் முடிந்து விட்டால் மீண்டும் பணத்தை செலுத்தி மின்சாரத்தை உபயோகிக்க முடியும் எனத் தெரிவித்தார்.

புதிய தொழிநுட்பத்துடன் கூடிய புதிய மானியை இத்திட்டத்திற்கு அறிமுகப்படுத்தவுள்ளதாக அவர் மேலும் தெரிவித்தார்.

ஸ்மாட் மின்சார மானி என்ற பெயரில் இப்புதிய மானி அறிமுகப்படுத்தப்படவுள்ளது. (ஸ்ரீ-2)

# கையடக்கத் தொலைபேசியின் குறுஞ் செய்திகள் மூலம் பணமோசடி

(கொழும்பு)

மோசடிகள் பலவிதம் அவை ஒவ்வொன்றும் ஒருவிதம் என்பார்கள் தற்போது அதிகளவான மோசடிகள் குறுஞ் செய்திகள் மூலமே அரங்கேறி வருகின்றன.

வெளிநாட்டு லொத்தர் சீட்டின் மூலம் பணம் கிடைக்கப்பெற்றுள்ளது. அதனை உடனடியாகப்பெற்றுக் கொள்ளும்படி குறுஞ் செய்திமூலம் மோசடி செய்யும் போர்வழி குறுஞ் செய்தி மூலம் வெளிநாட்டு லொத்தர் சீட்டில் வெற்றிபெற்றுள்ளீர்கள்.

அப்பணத்தை பெற்றுக் கொள்வதற்கு பெயர் விபரங்கள், வங்கிக் கணக்கு இலக்கத்தையும் அனுப்பினால் லொத்தர் பணத்தைப் பெற்றுக்கொள்ளமுடியும் என அந்தக் குறுஞ்செய்தியில் எழுத்து பொறிக்கப்பட்டு பல்வேறு நபர்களுக்கு அனுப்பி வைக்கப்பட்டுள்ளதுடன் இணையத்தளம் ஒன்றின் பெயரும் அனுப்பப்படுகிறது.

இந்த இணையத்தளத்தில் தமது விபரங்களைப் பதிவுசெய்வதற்கு கட்டணமாக 200 அமெரிக்க டொலர்களை செலுத்தவேண்டுமென குறிப்பிட்டே இந்தக் குறுஞ் செய்திகள் அனுப்பப் படுகின்றன. இச்சம்பவம் குறித்து இலங்கை கணனி மோசடிகளுக்கான எதிர்ப்புக் குழுவிற்கு இதுவரை நான்கு முறைப் பாடுகள் கிடைக்கப்பெற்றுள்ளதாக அக்குழுவின் பொறியியலாளர் ரோஹன பல்லிய குரு தெரிவித்துள்ளார்.

அவர் மேலும் தெரிவிக்கையில், சந்தேக நபரை விரைவில் கைது செய்து நீதிமன்றில் ஆஜர்ப் படுத்தவுள்ளதாகவும் இவ்வாறான குறுஞ் செய்தி வாயிலாக வரும் தகவல்களுக்கு மக்கள் ஏமாற்றமடையாதபடி எச்சரிக்கையாக இருக்க வேண்டும் என்று தெரிவித்துள்ளார். (ஸ்ரீ-2)

# கொலன்னாவ எண்ணெய் குழாய்கள் செயலிழப்பு

இலங்கைக்கு இறக்குமதி செய்யப்படும் கனிய எண்ணெய் துறைமுகத்திலிருந்து கொலன்னாவ எரிபொருள் களஞ்சியசாலைக்கு எடுத்துச் செல்லும் இரண்டு குழாய்கள் செயலிழந்துள்ளதாக இலங்கை பெற்றோலியக் களஞ்சிய நிறுவனம் தெரிவித்துள்ளது.

இந்தக் குழாய் வழியின் தாழ்வான பகுதியில் எண்ணெயை எடுத்துச் செல்வது கடினமாக உள்ளதாக நிறுவனத்தின் தலைவர் மேஜர் ஜெனரல் எம்.ஆர். பிரியூ சொய்சா தெரிவித்துள்ளார்.

சட்டவிரோத குடியேற்றங்கள் காரணமாகவே இந்தக்குழாய்கள் தாழ்வடைந்துள்ளதாகவும் அவர் குறிப்பிட்டுள்ளார். எனவே இந்தச் சட்டவிரோத குடியேற்றவாசிகளை அகற்றி அவர்களுக்காக மாற்று இடங்களை வழங்குவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டு வருகின்றது. (ஸ்ரீ-4-9)


## கூறு விலை கோரல்

யாழ். வலயக்கல்வி அலுவலகத்திற்கு தேவைப்படும் அலுவலகப் பாவனைப் பொருட்கள் (Office Stationary), யாழ். வலயக்கல்வி அலுவலகத்தினால் நடாத்தப்படும் பயிற்சி பட்டறைகள், பரீட்சைக்கான வினாப் பத்திரங்கள், செய்கைத்தாள்கள் என்பவற்றினை அச்சுப்பிரதி பண்ணுதல், நிழற்பிரதி எடுத்தல் மற்றும் பயிற்சி பட்டறைகள், விழாக்களுக்கு காலை, மாலை, மதிய உணவு மற்றும் சிற்றுண்டிகள், குளிர்பானம் (சோடா) என்பவற்றை வழங்குவதற்குமான கூறு விலைகள் கோரப்படுகின்றன. எனவே கூறு விலைகளை சமர்ப்பிக்க விரும்புபவர்கள் கூறு விலைப் படிவங்களை யாழ். வலயக் கல்வி அலுவலக கணக்குக் கிளையில் 21.01.2011 இற்கு முன்னர் பெற்று 28.01.2011இற்கு முன்னர் கூறுவிலைகளை சமர்ப்பிக்குமாறு யாழ். வலயக்கல்விப் பணிப்பாளர் கேட்டுள்ளார்.

திருமதி.அ.வேதநாயகம்,
வலயக்கல்விப் பணிப்பாளர்,
வலயக் கல்வி அலுவலகம்,
யாழ்ப்பாணம்.

(ஸ-2187)



## கண்ணீர் அஞ்சலி



எமது பாடசாலை ஆசிரியை திருமதி இரட்ணசிங்கம் அவர்களது மாமியார்

**திருமதி ஞானமணி கனகம்மா**

அவர்கள் 23.12.2010 அன்று காலமானதை யிட்டு அவர்களின் குடும்பத்திற்கு எமது அனுதாபத்தை தெரிவிப்பதோடு அவரின் ஆத்மாசாந்தி அடைய இறைவனை பிரார்த்திக்கின்றோம்.

நல்லுறவு மன்றம்,
செங்குந்த இந்துக்கல்லூரி.

(ஸ-2177)



## கண்ணீர் அஞ்சலி



எமது பாடசாலையின் ஆய்வுகூட உதவியாளர் திரு.சி.ஸ்ரீ சண்முகநாதன் அவர்களின் அன்புச் சகோதரி

**திருமதி பரமேஸ்வரி சிவனேசன்**

அவர்கள் 22.12.2010 அன்று காலமானதையிட்டு அவர்களின் குடும்பத்தினருக்கு எமது அனுதாபங்களைத் தெரிவிப்பதுடன் அன்னாரின் ஆத்மா சாந்தியடைய இறைவனை பிரார்த்திக்கின்றோம்.

நல்லுறவு மன்றம்,
செங்குந்த இந்துக்கல்லூரி.

(ஸ-2176)

# கிளிநொச்சி மாவட்டத்தில் குளங்களின் நீர்மட்டம் உயர்வு

## இரணைமடுக்குளத்தின் 10 வான்கதவுகள் திறப்பு



(கிளிநொச்சி)

தற்போது பெய்து வரும் பருவகால மழை காரணமாக கிளிநொச்சி மாவட்டத்தில் பல பெரிய குளங்களின் நீர் மட்டம் உயர்வடைந்ததுடன் சில குளங்கள் வான் பாய்ந்த வண்ணம் உள்ளன.

இக்குளங்களின் நீர்மட்டம் தொடர்பாக கிளிநொச்சி மாவட்ட நீர்ப்பாசனத் திணைக்கள பொறியியலாளர் அலுவலகத்தில் நேற்றைய தினம் வெளியிடப்பட்ட தரவுகளின்படி,

இரணைமடுக் குளத்தின் நீர்க் கொள்ளளவு 34 அடி என்பதுடன் தற்போதைய நீர்மட்டம் 30 அடி $5\frac{1}{2}$ அங்குலமாக உயர்ந்துள்ளது. அத்துடன் பிரமந்தனாறு 12 அடி. தற்போதைய நீர்மட்டம் 12 அடி 5 அங்குலம். அக்கராயன்குளம் 23 அடி. தற்போதைய நீர்மட்டம் 23 அடி $3\frac{1}{2}$ அங்குலம், கனகாம்பிகைக் குளம் 10 அடி. தற்போதைய நீர் மட்டம் 10 அடி 1 அங்குலம், கரியாலை நாகபடுவான் குளம் 10 அடி. தற்போதைய நீர் மட்டம் 10 அடி 4 அங்குலம், புதுமுறிப்புக் குளம் 16 அடி 6 அங்குலம். தற்போதைய நீர் மட்டம் 16 அடி 7 அங்குலம், வன்னேரிக் குளம் 9 அடி 6 அங்குலம். தற் போதைய நீர் மட்டம் 9 அடி 7 அங்குலம் என நீர்ப்பாசனத் திணைக்களத்தினர் அறியத் தந்துள்ளனர்.

இதேவேளை இரணமடுக்குளத்தின் 10 வான் கதவுகள் திறந்து விடப்பட்டுள்ளமை குறிப்பிடத்தக்கது. (ஸ்ரீ-3-30)

## புதிய நிர்வாக சபைத் தெரிவும் பொதுக்கூட்டமும்

(கிளிநொச்சி)

கிளிநொச்சி வட்டக்கச்சி மகா வித்தியாலயத்தின் நிர்வாகத் தெரிவும் பழைய மாணவர் சங்க நிர்வாகத் தெரிவும் பொதுக்கூட்டமும் நாளை புதன்கிழமை காலை 9 மணிக்கு நடைபெறவுள்ளது.

இதில் பழைய மாணவர்களை கலந்து கொள்ளுமாறு பழைய மாணவர் சங்கப் பிரதிநிதிகள் கேட்டுள்ளனர். - (ஸ்ரீ-3-30)




## யுத்தம் காரணமாக பாதிக்கப்பட்ட 51 மாணவர்களுக்கு பாதணிகள் அன்பளிப்பு

(பருத்தித்துறை)

கிளிநொச்சி மாவட்டத்தில் கண்டாவளை மகா வித்தியாலய மாணவர்களுக்கு நலன் விரும்பி ஒருவர் பாதணிகளை அன்பளிப்பு செய்துள்ளார்.

கரவெட்டியைச் சேர்ந்தவரும் லண்டனில் வாழ்ந்து வருபவருமான க.சிவசுப்பிரமணியம் என்பவர் இப் பாதணிப் பொதிகளை அன்பளிப்புச் செய்துள்ளார்.

யுத்தத்தினால் பாதிக்கப்பட்டு மீளக் குடியமர்ந்து குறித்த பாடசாலையில் கல்வி பயிலும் வறுமைக்கோட்டிற்கு உட்பட்ட 51 மாணவர்களுக்கு இப் பாதணிகள் வழங்கப்பட்டுள்ளன. (ஸ்ரீ-3-10)

## தேசிய சேமிப்பு வங்கியினால் கிளிநொச்சியில் 5 பாடசாலை சேமிப்பு அலகுகள் திறந்துவைப்பு

(கிளிநொச்சி)

தேசிய சேமிப்பு வங்கியின் கிளிநொச்சி கிளையால் பாடசாலை சேமிப்பு அலகுகள் சிறப்பான முறையில் செயற்படுத்தப்பட்டு வருவதாக தேசிய சேமிப்பு வங்கியின் முகாமையாளர் டி.சிவராஜ் தெரிவித்துள்ளார். இது தொடர்பாக அவர் மேலும் தெரிவிக்கையில், தேசிய சேமிப்பு வங்கியின் கிளிநொச்சி கிளையால் இதுவரையில் 5 பாடசாலை சேமிப்பு அலகுகள் திறந்து வைக்கப்பட்டுள்ளன.

இதில் கடந்த வருடம் கிளி/பாரதி வித்தியாலயத்திலும், கடந்த 7ஆம் திகதி கிளி/ இந்துக்கல்லூரி, கிளி/ கிளிநொச்சி மகா வித்தியாலயம், கிளி/ முருகானந்தா வித்தியாலயம், கிளி/ புனித திரேசா மகளிர் கல்லூரி ஆகிய நான்கு பாடசாலைகளிலும் இப் பாடசாலைச் சேமிப்பு அலகுகள் திறந்து வைக்கப்பட்டு சிறப்பாக செயற்படுத்தப்பட்டு வருகின்றன.

கணனி மயப்படுத்தப்பட்ட இப் பாடசாலை சேமிப்பு வங்கியில் தெரிவு செய்யப்பட்ட பாடசாலை மாணவர்கள்ளயே அச் சேமிப்பு அலகின் நிர்வாக செயற்பாடுகளுக்கு நியமித்துள்ளோம்.

இதேவேளை பாடசாலை சேமிப்பு அலகுகளை எமது கிளைய்யின் உதவி முகாமையாளர் நிர்வகித்து வருகின்றார்.

கடந்த 1974 ஆம் ஆண்டு 19ஆவது கிளையாகத் திறந்து வைக்கப்பட்ட தேசிய சேமிப்பு வங்கியின் கிளிநொச்சிக் கிளை தற்போது குறைந்த பணியாளர் வளத்துடன் அதாவது 6 பணியாளர்களுடன் சிறப்பான சேவையினை பொதுமக்களுக்கு வழங்கி வருகின்றது.

வழமையான வங்கிச் செயற்பாடுகளுடன் அரச ஊழியர்களுக்கு வீடமைப்புக் கடன் போன்ற கடனுதவித் திட்டங்களையும் மட்டுப்படுத்தப்பட்ட அளவில் வழங்கி வருகின்றோம்.

எதிர்வரும் காலங்களிலும் சிறப்பான சேவையை பொதுமக்களுக்கு வழங்கக் காத்திருக்கின்றோம் என்றும் அவர் மேலும் தெரிவித்தார். (ஸ்ரீ-3-30)

## விசுவமடுப் பகுதியில் தொடர்ந்து கசிப்பு ஒழிப்பு நடவடிக்கை

(கிளிநொச்சி)

சமூகத்தினை சீரழிவிற்குள்ளாக்கும் கசிப்பு உற்பத்தி மற்றும் விற்பனையைத் தடுக்க விசுவமடுப் பொலிஸார் கசிப்பு ஒழிப்பு நடவடிக்கையினை துரிதமாக செயற்படுத்தி வருவதாக விசுவமடு பொலிஸ்நிலைய அதிகாரி சார்ஜன்ட் அபயசேகர தெரிவித்துள்ளார்.

இது தொடர்பாக அவர் மேலும் தெரிவிக்கையில்,

விசுவமடுப் பகுதியில் தொடர்ந்தும் கசிப்பு ஒழிப்பு நடவடிக்கையினை மேற்கொண்டு வருகின்றோம். கடந்த வருடமும் பெருந்தொகையான அளவில் கசிப்பினை கைப்பற்றியதுடன் அவற்றுடன் தொடர்புடையவர்களை கைது செய்திருந்தோம்.

இதேவேளை இவ்வருட ஆரம்பத்திலிருந்து கடந்த 15 ஆம் திகதி வரையான காலப் பகுதியில் கிளிநொச்சி பொலிஸ் நிலைய பொலிஸாருடன் இணைந்து விசுவமடுப் பிரதேசத்தில் மேற்கொண்ட கசிப்பு ஒழிப்பு நடவடிக்கையில் விசுவமடு கல்லாறுப் பகுதியில் 25 போத்தல் கசிப்பும், அதே இடத்தில் பெண்ணொருவரிடம் இருந்து 14 போத்தல் கசிப்பும்,ஹெட்பானா பகுதியில் 47 போத்தல் கோடாவும், பிரமந்தன் ஆறுப் பகுதியில் 180 போத்தல் கோடாவும் கைப்பற்றப்பட்டன.

அத்துடன் மேற்படி குற்றச்செயல்களுடன் தொடர்புடைய 17 நபர்களை கைது செய்து சட்ட நடவடிக்கைகளுக்காக கிளிநொச்சி மாவட்ட நீதிமன்றில் முற்படுத்தியுள்ளோம்.

இவ்வாறு பெருந்தொகையாக கசிப்பினைக் கைப்பற்றியதுடன் சிறு சிறு அளவிலும் கசிப்பினைக் கைப்பற்றி அளித்தும் உள்ளோம் என்று தெரிவித்தார். (ஸ்ரீ-3-30)

## வீடமைப்புக்கடன் படிவங்களை விரைவாக ஒப்படைக்க கோரிக்கை

(கிளிநொச்சி)

கிளிநொச்சி வீடமைப்பு அதிகார சபையினால் பொதுமக்களுக்கு வீடமைப்புக் கடன் வழங்குவதற்கென வழங்கப்பட்டுள்ள விண்ணப்பப்படிவங்களை பூர்த்தி செய்து மிக விரைவாக ஒப்படைக்குமாறு கிளிநொச்சி மாவட்ட வீடமைப்பு அதிகார சபையின் முகாமையாளர் எம்.ரவீந்திரன் அறிவித்துள்ளார்.

பொதுமக்களுக்கு வீடமைப்புக் கடன் வழங்கவென வழங்கப்பட்டுள்ள விண்ணப்பப்படிவங்களை பிணையாளிகளின் ஒழுங்குபடுத்தலுடன் ஒப்படைக்க வேண்டும் எனவும் இவர்களுக்கான கடன் வழங்கும் திட்டம் ஆரம்பிக்கப்படவுள்ளதாகவும் அவர் தெரிவித்தார்.

அத்துடன் கடன் பெறுவதற்கு விண்ணப்பிப்பதற்கான விண்ணப்பப்படிவங்கள் விரும்புவோருக்கு வழங்கப்படவுள்ளதாகவும் விண்ணப்பப்படிவங்கள் தேவைப்படும் குடும்பங்கள் வீடமைப்பு அதிகார சபையுடன் தொடர்பு கொள்ளுமாறும் அவர் தெரிவித்தார்.(ஸ்ரீ-4)

## வீதி புனரமைப்பிற்காக பறிக்கப்பட்ட கிரவல்மண் பரவப்படாமையால் சிரமம்

(கிளிநொச்சி)

உருத்திரபுரம் முதலாம் குறுக்கு வீதியில் வீதிப் புனரமைப்பிற்காக பறிக்கப்பட்ட கிரவல் மண் பரவப்படாமல் இருப்பதனால் போக்குவரத்துச் செய்வதில் மிகுந்த சிரமங்களை எதிர்கொள்வதாக பொதுமக்கள் விசனம் தெரிவிக்கின்றனர்.

உருத்திரபுரம் கிழக்கு முதலாம் குறுக்கு வீதியில் மூன்று மாதங்களுக்கு முன்னர் கிரவல் மண் பறிக்கப்பட்டது.இம்மண் பரவப்படாமையால் போக்குவரத்துச் செய்வதில் மக்கள் பெரும் இடர்பாடுகளை எதிர்நோக்கியுள்ளனர். அத்துடன் தமது வயலினை அறுவடை செய்து அவற்றினை ஏற்றி வர முடியாத நிலை காணப்படுவதாக விவசாயிகள் தெரிவித்துள்ளனர்.

இதுதொடர்பாக சம்பந்தப்பட்ட தரப்பினர் உரிய கவனம் செலுத்தி சீரான போக்குவரத்துக்கு வழிவகை செய்து தருமாறு அவர்கள் கோரியுள்ளனர். (ஸ்ரீ-3-30)

## கிளி.மாவட்டத்தில் பசுமைக்கிராமமாக தட்டுவன்கொட்டிக் கிராமம் தெரிவு

(கிளிநொச்சி)

சுற்றாடல் அபிவிருத்தியமைச்சினால் கிளிநொச்சிமாவட்டத்தில் பசுமைக் கிராமமாக தட்டுவன் கொட்டிக்கிராமம் தெரிவு செய்யப்பட்டுள்ளது.

கிளிநொச்சி மாவட்ட செயலகத்தில் நடைபெற்ற மாநாட்டில் மேற்படி கிராமம் தெரிவு செய்யப்பட்டதுடன் இக்கிராம விவசாயிகளுக்கு விதை தானியங்கள் வழங்கப்பட்டது.

இதேவேளை மேற்படி விவசாயிகளுக்கு வீட்டுத் தோட்டப் பயிர்த் தொழில்நுட்பம், சுற்றுச்சூழலைப் பேணும் நடைமுறைகள் தொடர்பான பயிற்சிகளும் வழங்கப்பட்டுள்ளதாக மாவட்ட செயலக தகவல்கள் தெரிவிக்கின்றன. (ஸ்ரீ-3-30)

# தை மாத இராசி பலன்கள்



## மேடம்

(அச்சுவினி, பரணி, கார்த்திகை முதலாம் பாதம்)

*வைராக்கியத்தோடு செயற்பட்டு வருங்காலத்தை நலமாக்கிக் கொள்ளும் மேட இராசி நேயர்களே!*

அஞ்சா நெஞ்சமும், அசாத்திய துணிச்சலும் மிக்கவர்கள் நீங்கள். சோம்பேறித்தனம் இல்லாமல் சுறுசுறுப்பாகச் செயற்படுவது தான் உங்கள் வெற்றிக்குக் காரணம். எதையும் நாளை செய்வோம் என்று ஒத்தி வைக்க மாட்டீர்கள்.

இன்றே செய்ய வேண்டும். அதுவும் இப்பொழுதே செய்ய வேண்டுமென்று சொல்வீர்கள். வீண்பேச்சுக்களால், ஒருசில சமயங்களில் பகையை நீங்கள் வளர்த்துக் கொண்டாலும், பின்னர் வருத்தம் தெரிவித்து நட்பாகிக் கொள்வீர்கள்.

தை மாத கிரக நிலைகளை ஆராய்ந்து பார்க்கும்பொழுது இராசிநாதன் செவ்வாய் உச்சம் பெற்றிருக்கிறார். அதோடு, பாக்யாதிபதி சூரியனும் இணைந்து சஞ்சரிக்கிறார். எனவே, பிள்ளைகள் வழியில் பெருமைக்குரிய தகவல் வந்து சேரும்.

விரயாதிபதி குரு விரயஸ்தானத்தில் பலம் பெற்று சஞ்சரிப்பதால், விரயங்கள் கூடுமோ என்று நீங்கள் நினைக்க வேண்டாம. தனாதிபதி சுக்ரன் தனஸ்தானத்தைப் பார்ப்பதால், தனவரவு தாராளமாக வந்து சேரும்.

எனவே ஆடை, ஆபரணங்கள் வாங்குவதில் ஆர்வம் காட்டுவீர்கள். அழகிய வீடு கட்டி குடியேற வேண்டுமென்ற எண்ணத்தை நிறைவேற்றிக் கொள்வீர்கள்.

ஜனவரி மாதக் கடைசியில் புத-சுக்ர யோகம் செயற்படப் போவதால், அதன்பின்னர் வளர்ச்சி அதிகரிக்கும். வருமானம் பெருகும்.

அதேநேரத்தில் வக்ரச்சனியின் ஆதிக்கம் தொழில் பங்குதாரர்களுக்குள் கருத்து வேறுபாடுகளை உருவாக்கலாம். எனவே அனுசரித்துச் செல்வது நல்லது. உத்தியோகத்தில் இருப்பவர்களுக்கு தூரத்து இடத்திற்கு மாறுதல் கிடைத்தாலும், அதை ஏற்றுக் கொண்டு பின்னர் பழைய இடத்திற்கே மாற்றிக் கொண்டு வருவது நல்லது. சனீஸ்வர வழிபாடும். அனுமன் வழிபாடும் சஞ்சலங்களைத் தீர்த்து வைக்கும்.

### மகர புதனின் சஞ்சாரம்

ஜனவரி 26 ஆம் திகதி மகர இராசியில் புதன் சஞ்சரிக்கப் போகிறார். 3, 6க்கு அதிபதியான புதன் இராசிநாதனுடன் சேரும்பொழுது, வழக்குகளில் வெற்றி கிடைக்கும். இழப்புகளை ஈடுசெய்யும் அளவிற்கு புதிய ஒப்பந்தங்கள் வந்து சேரும். மாமன், மைத்துனர் வழியில் உதவிகள் கிடைத்து மகிழ்ச்சி அடைவீர்கள்.

2, 7க்கு அதிபதியான சுக்ரன் ஜனவரி 30 ஆம் திகதி அன்று தனுசு இராசியில் சஞ்சரிக்கப் போகிறார். அங்குள்ள புதன் மற்றும் இராகுவுடன் இணைந்து சஞ்சரிக்கும் பொழுது, வசதி, வாய்ப்புகளைப் பெருக்கிக் கொடுப்பார். என்றாலும், வாழ்க்கைத் துணை வழியே பிரச்சினைகளை உருவாக்கலாம். எனவே பாம்பு கிரகங்களுக்குரிய பரிகாரங்களை முறையாகச் செய்தால், தேம்பும் நிலை மாறி செல்வ நிலை உயரும்.

### கும்ப புதனின் சஞ்சாரம்

பெப்ரவரி 12 முதல் 3, 6 க்கு அதிபதி இலாப ஸ்தானத்தில் சஞ்சரிக்கும்பொழுது, உடன் பிறப்புகளின் ஒத்துழைப்போடு, நல்ல காரியம் ஒன்றைச் செய்து முடிப்பீர்கள். உத்தியோக நலன்கருதி எடுத்த முயற்சி வெற்றி தரும். வங்கிகளில் எதிர்பார்த்த கடன் உதவிகள் கிடைக்கும்.

இக் காலத்தில் சனியும் வக்ரகதியில் இருப்பதால், தொழில் பங்குதாரர்களிடம் கூடுதல் விழிப்புணர்ச்சியுடன் இருப்பது நல்லது. வெளிநாட்டு பயணங்களுக்கான முயற்சி செய்பவர்கள் சுய ஜாதகத்தை ஒருமுறை பார்த்த பின்னர் முடிவெடுப்பது நல்லது.

இம்மாதம் சகாய ஸ்தானத்தில் சஞ்சரிக்கும் கேதுவால், சகாயங்கள் ஏற்பட வெள்ளிக்கிழமை தோறும் விநாயகப்பெருமானை வழிபட்டு வருவது நல்லது.

### பெண்களைப் பொறுத்தவரை

இம்மாதம் ஆரோக்கியம் சீராகி ஆனந்தப்படுத்தும். மருத்துவச் செலவு குறையும். மாதத்தின் மையப்பகுதியில் பெற்றோர்களின் உடல் நலத்தில் கவனம் தேவை. உங்கள் பெயரில் வாங்கிய ஒரு சில சொத்துக்களில் இருந்த பிரச்சினைகள் இப்பொழுது, முழுமையாக அகலும். கணவரின் அன்புக்கு பாத்திரமாவீர்கள். பயணங்களால் பலன் கிடைக்கும். பெண் தெய்வ வழிபாடு பெருமை சேர்க்கும்.



## இடபம்

கார்த்திகை 2, 3, 4 ஆம் பாதங்கள், ரோகிணி, மிருகசீரிடம் 1, 2 ஆம்பாதங்கள்

*வேகத்தோடும், விவேக இடப இராசி நேயர்களே!*

மனம் தளராமல் செயற்படக்கூடியவர்கள் நீங்கள். வரலாற்றில் இடம்பிடிக்க வேண்டுமென்ற எண்ணத்தை இயற்கையிலேயே வளர்த்துக் கொண்டிருப்பீர்கள். எந்த நேரத்திலும் சுய கௌரவத்தை விட்டுக் கொடுக்க மாட்டீர்கள். நன்கு யோசித்த பின்னர் நீங்கள் ஒரு காரியத்தில் இறங்குவதால்தான் வெற்றி உங்களுக்கு வந்து சேருகிறது. பிறரைச் சார்ந்து வாழக்கூடாது என்று எடுத்துரைப்பீர்கள்.

தை மாத கிரக நிலைகளை ஆராய்ந்து பார்க்கும் பொழுது, எதிர்பார்ப்புகள் அனைத்தும் நிறைவேறும் விதத்திலேயே கிரகங்கள் உலா வருகின்றன. மாதத் தொடக்கத்திலேயே உங்கள் இராசிநாதன் சுக்ரன் உங்கள் இராசியைப் பார்ப்பதால், ஆரோக்கியம் சீராகும். அனைத்து தேவைகளும் பூர்த்தியாகும். பங்காளிப் பகை மாறும். பாசம் காட்டாத உறவினர்கள் கூட பாசம் காட்டத் தொடங்குவர்.

இலாப ஸ்தானத்தில் சஞ்சரிக்கும் குருவின் பார்வைப் பலத்தால், இதுவரை மனக்கசப்பை தந்த உடன்பிறப்புகள் இப்பொழுது, மகிழ்ச்சியைத் தருவ[illegible]ர்கள்.

கடன் சுமை [illegible]டிப்படியாகக் குறையும். தடம் மாறிச் சென்ற குழந்தைகள் கூட இனி தானாகவே உங்கள் சொல் கேட்க முன்வருவர். சுகாதிபதியும், விரயாதிபதியும் ஒன்றாக இணைந்து ஒன்பதாம் இடத்தில் சஞ்சரிப்பதால், பெற்றோர் வழியில் எதிர்பாராத விரயங்கள் ஏற்படலாம்.

இம்மாதம் சனி வக்ர இயக்கத்தில் இருப்பது அவ்வளவு நல்லதல்ல. நண்பர்களை நம்பிச் செய்யும் காரியங்களில் சில ஏமாற்றங்களைச் சந்திக்க நேரிடும். அனுமன் வழிபாடு அல்லல்களைத் தீர்க்கும்.

ஜனவரி 26ஆம் திகதி மகர இராசியில் புதன் சஞ்சரிக்கப் போகிறார். இதன் விளைவாக, பிள்ளைகள் வழியில் பெருமைக்குரிய சம்பவங்கள் நடைபெறும்.

சுபகாரிய பேச் சுக்கள் நல்ல முடிவிற்கு வரும். கொடுத்த வாக்கைக் காப்பாற்றுவீர்கள். புதிய தொழில் தொடங்கப் போட்ட திட்டங்கள் நிறைவேறும். பூமியால் இலாபம் கிடைக்கும்.

### விபரீத இராஜயோகம் செயற்படும் நேரம்!

ஜனவரி 30இல் தனுசு இராசியில் சுக்ரன் சஞ்சரிக்கப் போகிறார். ஆறுக்கு அதிபதி எட்டில் சஞ்சரிக்கும் பொழுது, விபரீத இராஜ யோகம் செயற்படும் அல்லவா? எனவே, திட்டமிடாது செய்யும் காரியங்களில் வெற்றி கிடைக் கும்.

தெய்வ வழிபாடுகளில் ஆர்வம் காட்டுவீர்கள். வாகன மாற்றச் சிந்தனை மேலோங்கும். வளர்ச்சிக்குரிய விதத்தில் நண்பர்கள் ஒத்துழைப்புச் செய்ய முன்வருவர்.

பெப்ரவரி 12ஆம் திகதி கும்ப இராசியில் புதன் சஞ்சரிக்கப் போகிறார். இதன் விளைவாக, தொழிலில் கூடுதல் இலாபம் கிடைக்கும். நீண்டநாள் பாக்கிகள் வசூலாகும்.

வெளி நாட்டு நண்பர்களின் ஒத்துழைப்போடு, விரும்பிய காரியம் ஒன்றைச் செய்து முடிப்பீர்கள். சனியின் வக்ர இயக்கமும் இக்காலத்தில் உள்ளது. எனவே, எதையும் ஒரு முறைக்கு பலமுறை யோசித்து ஏற்றுக் கொள்வது நல் லது.

இம்மாதம் வக்ர சனியின் ஆதிக்கத்தால்

**சிவல்புரி சிங்காரம்**

வளர்ச்சியில் தளர்ச்சி ஏற்படாமல் இருக்க, சனீஸ்வர வழிபாட்டை முறையாக மேற்கொள்வது நல்லது.

### பெண்களைப் பொறுத்தவரை

இம்மாதம் வருமானம் போதுமானதாக இருக்கும். கணவன்-மனைவிக்குள் கனிவு கூடும். உங்கள் பெயரிலேயே ஒரு தொகையை வைப்பு நிதியாக வங்கியில் வைப்புச் செய்யும் சூழ்நிலை உருவாகும். விலகிச் சென்ற உடன் பிறப்புகள் விரும்பி வந்து சேருவர். வாக்கு ஸ்தான கேதுபலம் பெறுவதால், மாதக்கடைசியில் உறவினர் பகை ஏற்பட லாம்.

எனவே, விட்டுக் கொடுத்துச் செல்வது நல்லது. வக்ர சனியின் இயக்கம் இருப்பதால், சனிக்கிழமைதோறும் விரதம் இருப்பதன் மூலமும், காகத்திற்கு சோறு இடுவதன் மூலமும் நன்மைகளை வரவழைத்துக் கொள்ளலாம். (தொடரும்)

# புலிகளின் ஐந்து கப்பல்கள் குறித்த தகவல்கள் வெளியீடு

தமிழீழ விடுதலைப்புலிகளிக் ஐந்து கப்பல்கள் தொடர்பான தகவல்களை சிங்கள ஊடகமொன்று வெளியிட்டுள்ளது. புலிகளுக்கு சொந்தமான எட்டு கப்பல்கள் தொடர்பான விசாரணைகளின் இந்த ஐந்து கப்பல்கள் தொடர்பான மேலதிக தகவல்கள் கிடைக்கப் பெற்றதாக அரசாங்கம் அறிவித்துள்ளது.

புலிகளின் ஐந்து கப்பல்கள் புழுதடைந்துள்ளதாகவும் அவற்றை பழுது பார்க்கும் நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டு வருவதாகவும் நீர் வடிகாலமைப்புத்துறை அமைச்சர் தினேஷ் குணவர்த்தன தெரிவித்துள்ளார்.

குறித்த கப்பல்களின் நிறத்தையும் பெயரையும் மாற்றி பயணங்கள் மேற்கொள்ளப்பட்டு வருவதாக சுட்டிக்காட்டியுள்ளார்.

குறித்த கப்பல்களை கைப்பற்றி இலங்கைக்கு கொண்டு வரும் வகையில் சட்டங்களில் திருத்தம் மேற்கொள்ளப்பட்டு வருவதாக அவர் தெரிவித்துள்ளார். (ஸ்ரீ-2)

# சடலங்களை நல்லடக்கம் செய்வதில் மக்கள் சிரமம்



கிழக்கு மாகாணத்தில் அண்மையில் ஏற்பட்ட வெள்ளம் காரணமாக உயிரிழந்தோரின் எண்ணிக்கை 39ஆக உயர்ந்துள்ளதாக அனர்த்தமுகாமைத்துவ மத்திய நிலையம் தெரிவித்துள்ளது.

கூடுதலான உயிரிழப்புக்கள் மட்டக்களப்பு மாவட்டத்திலேயே பதிவாகியுள்ளன.

மட்டக்களப்பு மாவட்டத்தில் 18பேரும் அம்பாறை மாவட்டத்தில் 10பேரும் உயிரிழந்துள்ள நிலையில் இம்மாவட்டங்களில் 4பேர் காணாமல் போயுள்ளதாகவும் கூறப்படுகின்றது.

குறிப்பாக, கிழக்கு மாகாணத்தில் அண்மையில் ஏற்பட்ட மழை வெள்ளம் காரணமாக சடலங்களை அடக்கம் செய்வதில் பொதுமக்கள் சிரமங்களை எதிர்நோக்குவதாகத் தெரிவிக்கப்படுகிறது.

மயானங்களில் வெள்ள நீர் தேங்கி நிற்பதால் சடலங்களை அடக்கம் செய்வதில் அல்லது தகனம் செய்வதில் மாற்று வழிகளைத் தேட வேண்டியுள்ளதாக மக்கள் கூறுகின்றார்கள். (ஸ்ரீ-2)

பருத்தித்துறை ஹாட்லிக் கல்லூரியின் மைந்தர்களின் நினைவு நிதியத்தின் ஏற்பாட்டில், ஹாட்லிக் கல்லூரி "மைந்தர்களின் நினைவு தினம்" அண்மையில் நடைபெற்றது. இந்நிகழ்வில், இப் பாடசாலையின் அதிபர், ஆசிரியர்கள் ஆகியோர் அஞ்சலி செலுத்துவதையும், இரத்ததானம் வழங்குவதையும், தட்டெறிதல் போட்டியில் தேசிய மட்டத்தில் தங்கப் பதக்கத்தை வென்ற டி.கரிகரனுக்கு எஸ்.கோகுலன் காசோலையினை வழங்குவதையும் படங்களில் காணலாம்.

(படங்கள்:- வல்வெட்டித்துறை செய்தியாளர்)

# கள்ளிக்காட்டு இதிகாசம்

19



கவிப்பேரரசு வைரமுத்து

"ஏத மறக்க நாயக்கரே...? ஏத நெனைக்க...? நான் கால்ல கட்டிவந்து கெடந்தப்ப- பண்டுதமெல்லாம் பாத்துப்பலன் இல்லாமப்போக நாக்குல சூடம் ஏத்தி முத்தாலம்மங்கோயில மூணு சுத்துச்சுத்தி வந்தாளே... அது ஆயுசு பரியந்தம் மறக்குமா?

வெளையாட்டா விடு கட்டணோம் நாயக்கர் அய்யா. அண்ணந்தம்பி ஒறவு இல்ல. மாமன் மச்சான் செயில்லை. தவிச்ச வாய்க்குத் தண்ணித்தர ஆளில்லை. அவுளும் நானுமா வீடு கட்டணமய்யா. நாந்தான் கொத்தனாரு. அவதான் சித்தாளு. அவ மண்ண மிதிச்சு மிதிச்சுக் கொழைச்சுக் குடுப்பா... நான் வாங்கி வப்பேன். ஒரு நாப்பொழுதுக்கும் அவ மண்ணு மிதிச்சுப் பொழுசாயப் பாதத்துல தண்ணி ஊத்திப் பாத்தாக் கால்மிஞ்சியக் காணோம். அங்க தேடுறா... இங்க தேடுறா மசங்கின பெறகு மண்ணக்கிண்டறா- கெடைக்கலையே! 'சரி விட்றி! ஏதோ மங்கம்மாராணி மாங்கா மாலையா காணாமப் போச்சு?குழைச்ச மண்ல கலந்து சுவர்ல போயிச் சொருகிக்கிருச்சு. ஒம் மிஞ்சியும் சேந்ததால சொவரு கெட்டிச் சொவராப் போச்சுடி கேணச்சிறுக்கி'ன்னு சிரிச்..."

"சிரிச்சேன்" என்ற சொல்லை முழுசாய் முடிக்கத் தெரியாமல் முக்கிமுக்கி அழுதார் பேயத்தேவர்.

மழைநீரில் சுவர் கரைந்தால் மண்ணுக்குள் போன மிஞ்சி ஒருநாள் கண்ணுக்குத் தெரியலாம். ஆனால் மண்ணுக்குள் போனால் அழகம்மாள் தெரிவாளா? வீட்டுக்கு மண் குழைத்த மாதரசி இதோ ஒண்ணரை மைல் தூரத்தில் உசுரில்லாமல் கிடக்கிறாள்.

"அத இத நெனச்சு ஆவி கொறையாதீக தேவரே. பொறப்புன்னு இருந்தாப் போய்த்தான ஆகணும்? தங்கச்சி முன்னுக்க போயிருக்கு. நாம பின்னுக்குப் போறோம். அவ்வளவுதான்"

நாயக்கரின் ஆறுதலையும் தாண்டித் தாரை தாரையாய் வடிந்த பேயத்தேவரின் கண்ணீர் மீசையில் முட்டித் தேங்கியது.

தளர்ந்துபோன ஒரு சிங்கம் வயதான யானையின் துதிக்கை பற்றி நடப்பதுமாதிரி நடந்து கொண்டிருந்தார்கள் தேவரும் நாயக்கரும்.

கள்ளிக்காடு கடந்து நெடுந்தூரம் விழுந்தது பேயத்தேவரின் நீராடிய பார்வை.

அதோ தெரியுதே! அந்தக் கம்பங்காடுதான்... அங்கு ஒருநாள் அவருக்கும் அழகம்மாவுக்கும் நேர்ந்த அந்த அனுபவத்தைச் சொல்ல முடியுமா? இல்லை நினைக்கத்தான் முடியும்.

அப்போதுதான் ஊர் ஊருக்கு எழுவுசொல்லப் போய்க்கொண்டிருந்த மாதாரி தொத்தன் தொங்கித் துவண்டுவரும் பேயத்தேவரைக் கண்டு "யப்பே! நான் என்னத்தச் சொல்லுவேன்... ஆத்தா எழவு சொல்லவும் நான் உசுரோடு இருக்கனே..." என்றான் அழுக் குத்துண்டை வாயில்வைத்து அடைத்துக்கொண்டு.

"போடா... போயிப் பொழுதோட சொல்றா..." என்றார் பேயத்தேவர், கண்ணீர்போல் உடைந்த வார்த்தைகளால்.

"பங்குனித் திருவிழா முடிஞ்சு தூக்குச்சட்டி கனக்க அதிரசம் போட்டு எனக்கு அனுப்பி வைக்குமே... தங்கச்சி... பாசமான கழுத... இனிமே ஆண்டுக்கொரு பங்குனி மாசம் வரும். அதிரசம் வருமா?"- நாயக்கரும் ஒரு பெருமூச்சு விட்டார். இடக்கையின் கைத்தடியை வலக்கைக்கு மாற்றிக் கொண்டே.

சொட்டையன் தன்பங்குக்குக் கிழவியின் ஒரு பெருமை பேசினான்.

"எங்க ஆத்தாளுக்கு முழுச்சட்டியில கஞ்சியிருந்தா மூடிவைக்கத் தெரியாதய்ய... ஊராளுகளக் கூப்பிட்டு ஊட்டி 'அனுப்பும்யா."

அவளுக்கா மூடிவைக்கத் தெரியாது? பேயத்தேவர் மனசுக்குள் இன்னொரு நினைவுக்குளவி கூடுகட்டியது.

"அவ சொன்ன பக்குவம் கேட்டுக் கோழிக்குழம்பு வச்சிர்லாம்... ஆனா மீங்குழம்பு அவதான்ய்யா வக்கணும். மீன் வாங்கியாந்து குடுத்தா உடனே ஒரசிட மாட்டா. மீனக் கவுளத்தூக்கிப்பாப்பா... உள்ள ரத்தப் பச இருந்தாத்தான் நல்ல மீனும்பா... இல்லாட்டி செத்த கழுதைக்குச் சிங்காரம் எதுக்குன்னு தூக்கிப் போட்டுருவா. ஒத்தமீன்ல கொழம்பு வச்சாலும் வந்தது போனதெல்லாம் தின்னதுபோக யாருக்குத் தெரியாம ஒருகை சாறெடுத்து உறியில வச்சிருவா. மறுநா காலையில் 'இந்தாம்பள... ஒனக்குத்தான்'னு சொல்லி உறிக்கொழம்பெடுத்து ஊத்துவா. அதுல பாருங்க நாயக்கரய்யா... அவ ஒளிச்சுவச்ச குழம்புலயும் ஒரு துண்டு கெடக்கும். குழம்புவச்ச பெறகுங்கூட மீனு குட்டி கிட்டி போடுமா?"

இடக்கையில் மூக்கைச் சர்ரென்று சீந்திச் சாலையில் எறிந்துவிட்டு, "பொண்டாட்டி மட்டுஞ் செத்துப் போகலய்யா... இன்னைக்கோட என் நாக்குஞ் செத்துப்போச்சு..." என்றார் பேயத்தேவர்.

வீட்டுக்கு வேலைக்காரியாய் வந்த தெய்வம் செத்துக் கிடக்கிறது. இதோ இன்னும்-அரைமைல் தூரத்தில்.

வண்டிப்பாதை முடிந்து சிவீரென்று தெரிந்தது செம்மண்பாதை, அங்கிருந்து கள்ளிப்பட்டி அரை மைல்தான். உள் வயிறு பதற ஆரம்பித்தது ஊர் நெருங்க நெருங்க.

"நான் பொழச்ச பொழப்பு அங்க செத்துக்கெடக்கும். அந்தக் கள்ளங்கபடமில்லாத கண்ணு மூடிக் கெடக்கும். ஆக்கிப் போட்ட கையி ஆடாமக் கெடக்கும்..."

அழகம்மாவின் கையை நினைத்ததும் பொங்கி வந்த கண்ணீர் பொசுக்கென்று கொட்டியது.

கல்யாணமான புதுசு. பச்சைகுத்தும் குறத்தி ஒருத்தி கள்ளிப்பட்டிக்கு வந்தா. பாம்புப்படம் தேள்படம்ன்னு ஊர்ப்பொம்பளைக குணத்துக்குத் தகுந்தபடி குத்திக் கிட்டாளுக. இவளுக்கும் பச்சைகுத்த ஆச, கூப்ட்டா குறத்திய, 'எனக்குப் படம் கிடமெல்லாம் வேணாம்டி ஆத்தா. என்ன ஆம்பளபேரப் பச்சை குத்து'ன்னு கேட்டிருக்கா. அகத்திக்கீரை எலய அம்மியில வச்சு அரச்சு, அத மெல்லிசான துணியில் பரப்பித் திரியாக்கி, அத வெளக்குத் தீயில வாட்டியெடுத்து ஒரு கருகல் வாசன வந்தவுடன-அதுல புகையிலச்சாறு செங்கொட்டைப் பாலு சாயஞ்சேத்து மைபண்ணி தையல் ஊசியக் கையில வச்சுக்கிட்டே கேட்ருக்கா- 'ஓம் புருசன் பேர் என்ன?' 'அதான் வேப்ப மரத்துல வந்து ஆடுமேன்'ருக்கா. வெளங்கல வந்தவளுக்கு. 'சுடுகாட்ல ஆடுமென்'னும் சொல்லிப் பாத்திருக்கா. புரியல குறத்திக்கு. கடைசில முடிஞ்ச தலய அவுத்துப் போட்டு ஆடிக்காட்டிருக்கா. 'ஓ பேயா' ன்னு கேட்ருக்கா குறத்தி. 'ஆமா! ஆமா!' அததோட 'தேவரச் சேத்துக்கன்'னு சொல்லிக்கா. அவ, "பேயி-தேவரு" ரெண்டையும் சேத்துப் "பேய்த் தேவருன்னு எழுதிட்டுப் போயிட்டா. அந்தப் பேரு குத்துன கையத்தானய்யா அவ தலைக்கு வச்சுப் படுப்பா."

ஊர் எல்லையை மிதித்த போது கால் நடுங்கியது பேயத்தேவருக்கு. உடம்பையும் நெஞ்சையும் கொஞ்சம் விறைப்பாக்கிக் கொண்டார். அழகம்மா இறந்ததற்கான அடையாளம் எதுவும் ஊர் எல்லையில் தெரியவில்லை. முள் முருங்கை மரத்தில் கத்திக் கொண்டிருந்தது காக்கை வழக்கம்போல் வாசல் உரலில் சோளம் இடித்துக் கொண்டிருந்தாள் இருளாயிக்கிழவி. ஆசாரி லாடமடிக்க, மாடு திமிராமல் மூக்கணாங்கயிறு பிடித்துக் குத்தவைத்திருந்தான் கிறுக்குராசு. மத்தியானமுமில்லாமல் சாயங்காலமுல்லாமல் பேர்வைக்கப்படாத அந்தப் பொழுதில் பேயத்தேவர் வீட்டு வாசலில் மட்டும் பத்துப் பன்னிரண்டு தலைகள் தெரிந்தன. பேயத்தேவர் வந்துவிட்டார் என்ற வாசனை தெரிந்ததும் "யப்பே! ஆத்தா போயிட்டாப்பே" என்ற செல்லத்தாயி கதறிய கதறல் ஊரின் சப்த நாடியை ஒடுக்கியது. அவள் அலறல்கேட்டு, தூக்கிவைக்க ஆளில்லாத ஒன்பதுநாள் குழந்தை அதன் சக்திக்கேற்ப வீறிட்டது. உள்வாசல் நடை திண்ணயில் உட்கார்ந்திருந்த மொக்கராசு சிவ்வென்று தவ்வித் தெருவுக்கு ஓடிவந்து தாத்தா! பாட்டி செத்துப்போச்சு தாத்தா என்று பேயத்தேவரின் கால்களைக் கட்டிக்கொண்டு கதறினான். விழுந்து கதறிய அவனைக் குனிந்துதூக்கி அவன் மூஞ்சியில் ஒட்டிய தெருமண் தட்டி அவனை அணைத்துக் கொண்டும், பிடிமானமாய்ப் பிடித்துக் கொண்டும் உள்ளீடில்லாத சட்டை ஒன்று நடந்து போவது மாதிரி வீட்டுக்குள் முதல் எட்டு வைத்து, செருப்பை நடைவாசலில் விட்டு, செத்துக் கிடக்கும் தன் சீவனைத் தேடி நடந்தார் பேயத்தேவர்; தொடர்ந்தார் நாய்க்கர். ஓய்ந்திருந்த சுவர்க்கோழிகள் திடீரென்று மொத்தமாய்க் கூச்சலிடுவது மாதிரி பேயத்தேவரைக் கண்டதும் சிதறிக்கிடந்த பொம்பளைகள் ஓவென்று ஒப்பாரி வைத்தார்கள் ஒன்று கூடி. களையெடுத்து வந்தவள் களைத்துத் தூங்குவது மாதிரி கயிற்றுக் கட்டிலில் கிடந்தாள் அழகம்மாள்.

தலைமாட்டில் குனிந்து, தலைகோதி நெற்றி தொட்டு "என்னியவிட்டுட்டுப் போயிட்டியா தாயி" என்று நொறுங்கிவிழுந்து அவர் குலுங்கி அழுதபோது பிணத்தோடு சேர்ந்து கயிற்றுக்கட்டிலும் ஆடியது. ஆத்தா செத்துக்கிடக்கிறாள் அப்பன் அழுது கொண்டிருக்கிறான் என்ற வேதனையில் எள்ளின் முனையளவும் இல்லாமல் கெழவன் எம் பாகத்தப் பிரிச்சுவிடாமப் பொணத்த எப்படித் தூக்குவான்னு பாக்குகிறேன். தன் அழிச்சாட்டியத்துக்கு ஆதரவாக வெளியே ஆள்சேர்த்துக் கொண்டிருந்தான் சின்னு.

(வளரும்)







சாவகச்சேரி லயன்ஸ் கழகத்தினால் தென்மராட்சி கல்வி வலயப் பாடசாலைகளில் தரம் 5 புலமைப்பரிசில் பரீட்சையில் சித்தியெய்திய மாணவர்களுக்கு மதிப்பளித்தல் நிகழ்வு அண்மையில் இடம்பெற்றது. இந்நிகழ்வில் லயன்ஸ் கழகத் தலைவர் லயன் தி.முருகதாசன் மற்றும் விருந்தினர்கள் அமர்ந்திருப்பதையும் தென்மராட்சிப் பிரதேச செயலர் திருமதி.அஞ்சலிதேவி சாந்தசீலன் பரிசில் வழங்குவதையும் படங்களில் காணலாம். ( படங்கள்:-சாவகச்சேரி செய்தியாளர்)

# வடக்கில் 100 பாடசாலைகள் புனர் நிர்மாணம் செய்யப்படவுள்ளன

(கொழும்பு)

வடக்கில் யுத்த காலத்தில் சேதமடைந்த 100 பாடசாலைகள் புனர் நிர்மாணம் செய்யப்படவுள்ளதாகத் தெரிவிக்கப்படுகிறது.

பாடசாலைகளை புனரமைப்பதற்காக ஜப்பானின் நிப்போன் நிறுவனமும் சேவா லங்கா நிறுவனமும் 141 மில்லியன் ரூபா நிதி உதவியை வழங்கியுள்ளது.

பாடசாலை புனரமைப்புத் திட்டம் குறித்து உடன்படிக்கையில் நிப்போன் நிறுவனத்தின் உயரதிகாரியும் வட மாகாணக் கல்வி அமைச்சின் செயலாளரும் கைச்சாத்திட்டுள்ளனர்.

யுத்தம் காரணமாக சேதமடைந்த பல பாடசாலைகள் ஏற்கனவே புனர் நிர்மாணம் செய்யப்பட்டுள்ளதாக அரசாங்க தகவல் திணைக்களம் அறிவித்துள்ளது. வடக்கின் வசந்தம் திட்டத்தின் மூலம் அபிவிருத்தி திட்டங்கள் மேற்கொள்ளப்பட்டு வருவதாகக் குறிப்பிடப்படுகிறது. (ஸ்ரீ-2)

# தூத்துக்குடி-கொழும்பு கப்பல் சேவைக்காக இரண்டு பயணிகள் கப்பல்கள் கொள்வனவு

(கொழும்பு)

தூத்துக்குடி -கொழும்பு இடையே மீண்டும் கப்பல் போக்குவரத்து ஆரம்பிக்கப்படவுள்ளதால் அனைத்து வசதிகளுடன் கூடிய இரண்டு பயணிகள் கப்பலை வாங்க திட்டமிட்டுள்ளதாக துறைமுகத்துறை பிரதி அமைச்சர் ரோகித அபயகுணவர்த்தன தெரிவித்துள்ளார்.

இது குறித்து அவர் மேலும் கூறுகையில்,

இந்தியாவுக்கும் இலங்கைக்கும் இடையே ஒப்பந்தம் கையெழுத்தாகியுள்ளது. இதன்படி கொழும்பு-தூத்துக்குடி, தலைமன்னார்-இராமேஸ்வரம் இடையே 25 ஆண்டுகளுக்கு பின்னர் மீண்டும் கப்பல் போக்குவரத்து ஆரம்பிக்கப்படவுள்ளது.

இந்தியா சார்பில் வாரத்துக்கு நான்கு முறையும் இலங்கை சார்பில் வாரத்துக்கு மூன்று முறையும் கப்பல்களை இயக்க திட்டமிடப்பட்டுள்ளது. இதற்காக விரைவில் இரண்டு பயணிகள் கப்பல்களை கொள்வனவு செய்யத் திட்டமிட்டுள்ளோம்.

இதுகுறித்து ஐரோப்பாவைச் சேர்ந்த இரண்டு கப்பல் நிறுவனங்களிடம் பேசி வருகிறோம். நீண்டகால ஒப்பந்த அடிப்படை யில் இந்த கப்பல்கள் கொள்வனவு செய்யப் படும். பயணிகளின் நலன் கருதி நவீன வசதிகளைக் கொண்ட கப்பல்களை வாங்க திட்ட மிட்டுள்ளோம். பயணிகள் தூங்குவதற்கும் இந்தக் கப்பலில் வசதி ஏற்படுத்தப்படும்.

கொழும்பு துறைமுகத்தை நவீனப்படுத்தவும் முடிவு செய்துள்ளோம். இந்தக் கப்பல் போக்குவரத்து, வர்த்தகர்கள், சுற்றுலா பயணிகளுக்கு மிகவும் உதவியாக இருக்கும். இந்தியாவிலிருந்து ஏராளமான சுற்றுலா பயணிகள் இலங்கை வருவதற்கும் வாய்ப்பு ஏற்படும் என தெரிவித்தார். (ஸ்ரீ-2)

# மழை வெள்ளத்தை வைத்து அரசியல் நடத்த முயற்சிக்கின்றது அரசாங்கம்

## ஜே.வி.பி.குற்றச்சாட்டு

(கொழும்பு)

வெள்ள அனர்த்தத்தினால் தனது நிர்வாகத்தை மறைத்துக்கொள்ள அரசாங்கம் முயற்சிக்கின்றது. ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷ வாயால் கூறுபவையை நாட்டின் சட்டமாகக் கருத முடியாது. பொதுமக்களுக்கு நிவாரணங்கள் வழங்கும்போது சுற்றறிக்கைகளுக்கு கட்டுப்பட வேண்டாம் என ஜனாதிபதி கூறியமை தேசிய சட்ட வழிமுறையை மீறிய செயலாகும் என்று ஜே.வி.பி.குற்றம் சுமத்தியுள்ளது.

அடைமழை வெள்ளம் காரணமாகப் பாதிக்கப்பட்ட மக்கள் தொடர்பாக அரசாங்கம் வெளியிடும் எண்ணிக்கைகள் உண்மைக்குப் புறம்பானவை. எனவே அனர்த்தங் களுக்கு நிலையான உதவித் தொகையினை வரவு-செலவுத் திட்டத்தில் ஒதுக்க இனியேனும் நடவடிக்கை எடுக்கவேண்டும்.

அத்தோடு அனர்த்தத்தில் பாதிக்கப்பட்ட அனைவருக்கும் நிவாரணங்களை பெற்றுக் கொடுப்பதற்கு போராட்டத்தை முன்னெடுப்போம் எனவும் ஜே.வி.பி. எச்சரித்துள்ளது.

பத்தரமுல்லையில் அமைந்துள்ள ஜே.வி.பியின் தலைமை அலுவலகத்தில் நேற்று முன்தினம் நடைபெற்ற விசேட செய்தியாளர் மாநாட்டிலேயே மேற்கண்டவாறு தெரிவிக்கப்பட்டது.

இங்கு உரையாற்றிய பாராளுமன்ற உறுப்பினர் அனுரகுமார திஸாநாயக்க கூறுகையில்,

நாடு முகம் கொடுத்த அடைமழை, வெள்ள அனர்த்தங்கள் தொடர்பாக அரசாங்கம் பல தரப்பட்ட கருத்துக்களை கூறி வருகின்றது. சுனாமிக்குப் பின் ஏற்பட்ட பாரிய அழிவு என்றும் 1957 ஆம் ஆண்டிற்குப் பின் ஏற்பட்ட பாரிய வெள்ளம் என்றெல்லாம் அரசாங்கம் மாயையை உருவாக்கியது.

இதுவேறு ஒன்றுக்கும் அல்ல. தனது இயலாமையை மூடி மறைத்துக்கொள்வதற்காகவே வெள்ளம் விடயத்தை பாரியளவு பெரிதாக்கி கூறி வருகின்றது.

முன்பு யுத்தம் காணப்பட்டமையால் , அதற்கு மறைந்து கொண்டு போலியான தேசப்பற்றை வெளிப்படுத்தி ஆட்சியை அரசாங்கம் கொண்டு நடத்தியது. தற்போது கூறுவதற்கு ஒன்றும் இல்லை. பெய்த மழையையும் அதனால் ஏற்பட்ட வெள்ளத்தையும் கொண்டு அரசியல் நோக்குடன் செயற்பட அரசு ஆரம்பித்துவிட்டது.

குளங்கள் உடைந்தது தொடர்பாகவும் விவசாய நிலங்கள் பாதிக்கப்பட்டுள்ளமை தொடர்பாகவும் அரசாங்கம் முன்வைக்கும் தரவுகள் உண்மைக்குப் புறம்பானது.

ஏனென்றால் எதிர்காலத்தில் அதிகரிக்கப்பட உள்ள பொருட்களின் விலைகளுக்கான அடித்தளத்தை அரசாங்கம் தற்போதே இட்டுள்ளது. பாதிப்புகள் தொடர்பாக கூறும் அரசாங்கம் நாட்டில் ஏற்கனவே தேங்காய், மரக்கறி உட்பட அத்தியாவசியப் பொருட்களின் விலை ஏற்றத்தினால் பாதிக்கப்பட்ட பொதுமக்களுக்கு என்ன செய்தது? 14 லொறிகளில் இராணுவத்தைப் பயன்படுத்தி கொழும்பில் வியாபாரம் செய்தால் அனைத்து மக்களின் பிரச்சினைகளும் தீர்ந்துவிடுமா? வெளிநாட்டிலிருந்து முட்டை இறக்குமதி செய்வதற்குப் பதிலாக அமைச்சர்களுக்கு மூளைகளை இறக்குமதி செய்வதால் நல்ல பயனேற்படும்.

முறைகேடான மரக்கறி உற்பத்தியினால் 48 வீதம் அழிவடைகின்றது.

எனவே இந்த அரசாங்கத்திற்கு நிலையாக செயற்படமுடியாது. நடிப்பு மற்றும் ஏமாற்றத்தின் ஊடாகவே ஆட்சியை முன் னெடுக்க முயற்கிக்கின்றது எனக் கூறினார். (2)

# பண்ணை மீன்சந்தை பகிரங்க ஏலம்

(யாழ்ப்பாணம்)

பண்ணை மீன் சந்தையை குத்தகைக்கு வழங்குவதற்கான பகிரங்க ஏலம் இன்று செவ்வாய்க்கிழமை காலை 11 மணிக்கு யாழ். மாநகர சபையின் நானாவித இறை வரிப் பகுதி முன்றலில் நடைபெறவுள்ளதாக யாழ். மாநகர முதல்வர் திருமதி யோகேஸ்வரி பற்குணராஜா அறிவித்துள்ளார். (ஸ்ரீ)


## கண்ணீர் அஞ்சலி



எமது பாடசாலை ஆசிரியை திருமதி
ச.ரவீந்திரன் அவர்களின் அன்புத் தந்தையார்
**அமரர் செல்லையா சுப்பிரமணியம்**
அவர்கள் 03.01.2011அன்று பிரான்ஸில் கால
மானதையிட்டு அன்னாரின் குடும்பத்தினருக்கு
எமது அனுதாபத்தை தெரிவிப்பதுடன் அன்னாரின்
ஆத்மா சாந்தியடைய இறைவனைப்
பிரார்த்திக்கின்றோம்.

நல்லுறவு மன்றம்,
செங்குந்த இந்துக்கல்லூரி.

(சி-2175)


# ஐக்கிய நாடுகளுக்கான இலங்கை வதிவிடப் பிரதிநிதி பதவியில் மாற்றம்?

(கொழும்பு)

ஐக்கிய நாடுகளுக்கான இலங்கை வதிவிடப் பிரதிநிதி பதவியில் மாற்றம் ஏற்படுத்தப்படவுள்ளதாகத் தெரிவிக்கப்படுகிறது.

ஐக்கிய நாடுகளுக்கான இலங்கையின் வதிவிடப் பிரதிநிதியாக முன்னாள் வெளி விவகார அமைச்சின் செயலாளர் பாலித கோஹண கடமையாற்றி வருகின்றார்.

பாலித கோஹணவிற்கு பதிலாக வேறொருவரை வதிவிடப் பிரதிநிதியாக நியமிப்பதற்கு அரசாங்கம் கவனம் செலுத்தி வருவதாகத் தெரிவிக்கப்படுகிறது.

பாலித கோஹணவின் பதவிக்காலம் பூர்த்தியாவதற்கு முன்னரே வேறு ஒரு பிரதிநிதியை நியமிப்பதற்கு அரசாங்கம் தீர்மானித்துள்ளது. ஐக்கிய நாடுகளின் நிபுணர்கள் குழு தனது சேவைக் காலத்தை நீடித்துள்ள நிலையில் அரசாங்கம் இந்தத் தீர்மானத்தை எடுத்துள்ளது.

நிபுணர் குழு நியமனம் தொடர்பில் பாலித கோஹணவின் நடவடிக்கைகள் குறித்து அரசாங்கத்தின் சிரேஷ்ட உறுப்பினர்கள் சிலர் அதிருப்தி அடைந்துள்ளதாகத் தெரிவிக்கப்படுகிறது.

2009 ஆம் ஆண்டு யுத்தம் முடிவடைந்த சில மாதங்களின் பின்னர் பலிஹக்கார விடமிருந்து கொஹணே வதிவிடப் பிரதிநிதி பதவியை பொறுப்பேற்றுக் கொண்டார். பாலித கோஹண லண்டனுக்கான உயர்ஸ்தானிகராக நியமிக்கப்படலாம் என எதிர்பார்க்கப்படுகிறது.

இதேவேளை இலங்கை ராஜதந்திர சேவையில் பல மாற்றங்கள் நடைபெறவுள்ளதாகத் தெரிவிக்கப்படுகிறது. (ஸ்ரீ-2)

# உள்ளூராட்சி தேர்தலில் ஐ.தே.க.சார்பில் போட்டியிட 15 ஆயிரம் பேர் விண்ணப்பம்

எதிர்வரும் உள்ளூராட்சிமன்ற தேர்தலில் நாடளாவிய ரீதியில் போட்டியிடும் ஐக்கிய தேசிய கட்சி மிகவும் மும்முரமான முறையில் தேர்தலுக்கு தயாராகி வருகின்றது.

ஐக்கிய தேசிய கட்சியின் சார்பில் உள்ளூராட்சிமன்ற தேர்தலில் போட்டியிடும் நோக்கில் 15 ஆயிரத்துக்கும் அதிகமானோர் விண்ணப்பித்துள்ளனர். அவர்களில் சுமார் 5 ஆயிரம் பேரைத் தெரிவு செய்யவுள்ளோம் என்று கட்சியின் பொதுச் செயலாளர் திஸ்ஸ அத்தநாயக்க தெரிவித்தார்.

யாழ்ப்பாண மாவட்டத்துக்கு திருமதி விஜயகலா மகேஸ்வரன் எம்.பி.யும் வன்னி மாவட்டத்துக்கு சுவாமிநாதன் எம்.பி.யும் மட்டக்களப்பு மாவட்டத்துக்கு சசிதரனும் பொறுப்பாளர்களாக நியமிக்கப்பட்டுள்ளனர்.

அவர்கள் அனைத்து விடயங்களையும் மேற்கொண்டு வருகின்றனர் என்றும் அவர் குறிப்பிட்டார்.

உள்ளூராட்சிமன்ற தேர்தலில் ஐக்கிய தேசிய கட்சியின் செயற்பாடுகள் எவ்வாறு அமைந்துள்ளன என்று விபரிக்கையிலேயே அத்தநாயக்க மேற்கண்டவாறு கூறினார். தேர்தலுக்கான ஆயத்தங்கள் தொடர்பில் திஸ்ஸ அத்தநாயக்க எம்.பி மேலும் கூறியதாவது, உள்ளூராட்சி மன்ற தேர்தலில் போட்டியிடும் வேட்பாளர்களை தெரிவு செய்வது தொடர்பான மாவட்ட மட்ட வேட்பாளர் தெரிவுகள் தற்போது மேற்கொள்ளப்பட்டு வருகின்றன. பல்வேறு குழுக்கள் இவை தொடர்பில் நடவடிக்கைகளை மேற்கொண்டு வருகின்றன.

இதேவேளை நாளை முதல் ஆறு நாட்களுக்கு கட்சியின் தேசிய மட்ட வேட்பாளர் தெரிவு குழு வேட்பாளர் தெரிவில் ஈடுபடவுள்ளது. தெரிவுகள் தொடர்பான அனைத்து விடயங்களும் நிறைவு பெற்றதும் எதிர்வரும் 26 மற்றும் 27 ஆம் திகதிகளில் ஐக்கிய தேசிய கட்சியின் சார்பில் வேட்பு மனுக்கள் தாக்கல் செய்யப்படும்

மேலும் வடக்கு-கிழக்கு மாகாணங்களிலும் ஐக்கிய தேசிய கட்சி அனைத்து இடங்களிலும் போட்டியிடுகின்றது. யாழ்ப்பாண மாவட்டத்தின் தேர்தல் குறித்த விடயங்களை ஆராய்வதற்கு விஜயகலா மகேஸ்வரன் எம்.பி. நியமிக்கப்பட்டுள்ளார்.

அவர் சிறந்த முறையில் அங்கு தேர்தலுக்கு தயாராகும் பணிகளை மேற்கொண்டு வருகின்றார். அத்துடன் அம்மாவட்டத்தில் அதிகமானோர் ஐக்கிய தேசிய கட்சியின் சார்பில் போட்டியிட ஆர்வமாகவுள்ளனர்.

வடக்கு -கிழக்கு உள்ளிட்ட நாடளாவிய ரீதியில் இதுவரை 15 ஆயிரத்துக்கும் மேற்பட்டோர் ஐக்கிய தேசிய கட்சியின் சார்பில் போட்டியிடும் நோக்கில் விண்ணப்பித் துள்ளனர். அவர்களில் சுமார் 5 ஆயிரம் பேர் தெரிவு செய்யப்படுவார்கள். பிரசார நடவடிக்கைகள் ஆரம்பமானதும் ஐக்கிய தேசிய கட்சி திட்டமிட்ட ரீதியில் தேர்தலுக்கு தயாராகும் என்று தெரிவித்தார். (ஸ்ரீ-2)

## நாடும் நடப்பும்

### தள்ளுவது யாரு

நானுயர, நீயுயர, வீடுயர, நாடுயர
இறைவனெனும் பேரறிவு துணையோடு
இருளகன்ற இதயம் ஆசி வழி பரவ
போது மடாபுது வாழ்வு பொலிய மேதினியில்
தள்ளியே பழிகொண்ட வருமது வழிவந்தவரும்
இடக்கரும் இல்லோரும் இழிதகவு செய்தோரும்
ஏற்றியும் போற்றியும் வாழத்துரை யணியின்
நறும்பு கைநாளும் கரும்பு கை படரும்
கொள்ளியே பள்ளி கொள்ளும்
கோசி கைகோலோச்சும்
தள்ளி நீவீர் நிற்பீரானால்
தாமே எல்லாம் தழைத் தோங்கும்
தள்ளுவதுயாரு எம்மைத் தள்ளுவது யாரு.

**அறியாதவன்**

# சாட்சியம் அளிப்பதற்கு தயார் புதுக்கோட்டை மீனவர்கள் அறிவிப்பு

இந்திய -இலங்கை கடற்பரப்பில் கடந்த 12ஆம் திகதி இலங்கை கடற்படையினரால் தமிழக மீனவர் ஒருவர் சுட்டுக்கொல்லப்பட்ட சம்பவம் தொடர்பில் தாங்கள் சாட்சியம் அளிக்க தயார் என புதுக்கோட்டை பகுதி மீனவர்கள் தெரிவித்துள்ளனர்.

இந்தச் சம்பவத்தில் இலங்கை கடற்படையினர் ஈடுபட்டனர் என்ற குற்றச்சாட்டு தொடர்பில், இந்திய தரப்பினர் தகுந்த ஆதாரங்களை முன்வைத்தால் இது குறித்து இலங்கைத் தரப்பு விசாரணை நடத்தத் தயார் என இலங்கையின் புதிய கடற்படை தளபதி கடந்த 15 ஆம் திகதி கூறியிருந்தார்.


அவரது இந்தக் கருத்து தொடர்பில் தெரிவித்த புதுக்கோட்டை ஜகதாப்பட்டணம் விசைப்படகு மீனவர்கள் சங்கத்தின் தலைவரான ராமகிருஷ்ணன், குறிப்பிட்ட சம்பவத்தில் பயன்படுத்தப்பட்ட துப்பாக்கி குண்டு மற்றும் திசை காட்டும் கருவிகளிலிருந்து எடுக்கப்பட்ட குறிப்புகள் போன்றவை இந்திய அதிகாரிகளிடம் ஒப்படைக்கப்பட்டுள்ளதாக தெரிவித்தார்.

மேலும் இந்தத் துப்பாக்கிச் சூடு சம்பவத்தில் பலியான மீனவர் பயணம் செய்த படகும் தடயமாக இந்திய கடலோர காவல் படையினரிடம் ஒப்படைக்கப்பட்டுள்ளதாகவும் ராமகிருஷ்ணன் தெரிவித்தார்.

தமது மீனவர் ஒருவர் சுட்டுக்கொல்லப்பட்ட சம்பவம் தொடர்பில் இந்திய அதிகாரிகளிடம் முறைப்படி புகார் அளிக்கப்பட்டுள்ளதாகவும் கூறும் அவர் இந்த விடயம் குறித்து விசாரணை இடம் பெறுமாயின் தாங்கள் சாட்சியம் அளிக்கத் தயாராக இருப்பதாகவும் தெரிவித்தார். (ஸ்ரீ-2)

# தேசிய கீதம் தொடர்பான பிரச்சினைக்கு விரைவில் தீர்வு காணப்படும்

## அமைச்சர் வாசுதேவ நாணயக்கார தெரிவிப்பு



தேசிய கீதம் தொடர்பான பிரச்சினைக்கு விரைவில் தீர்வு காணப்படும் என தேசிய மொழிகள் அமைச்சர் வாசுதேவ நாணயக்கார தெரிவித்துள்ளார்.

சகல இன சமூகங்களினதும் உரிமைகள் பாதுகாக்கப்படக் கூடிய வகையில் இந்த சர்ச்சைக்கு தீர்வு காணப்படும் என அவர் குறிப்பிட் டுள்ளார். இரத்தினபுரியில் நடைபெற்ற தைப்பொங்கல் விழாவில் கலந்து கொண்டு உரையாற்றிய போது அவர் இதனைக் குறிப்பிட்டுள்ளார்.

இந்த நிகழ்விலும் சிங்கள மொழியில் தேசியகீதம் பாடப்பட்டுள்ளதாகத் தெரிவிக்கப்படுகிறது. மொழி பெயர்ப்பாளர்கள் அவசியமற்ற ஓர் சமூகத்தை கட்டியெழுப்புவதே தமது நோக்கம் என அவர் தெரிவித்துள்ளார். (ஸ்ரீ-2)

# இன்றைய நாளின் முன்னைய பதிவுகள்

2011.01 18

★350 - ஜெனரல் மக்னென்டியஸ் ரோமப் பேரரசன் கொன்ஸ்டன்சை அகற்றி தன்னை மன்னனாக அறிவித்தான்.

★1520 - அசுண்டே ஆற்றுக்கருகில் இடம்பெற்ற போரில் டென்மார்க் மற்றும் நோர்வேயின் இரண்டாம் கிறிஸ்டியன் சுவீடனை வென்றான்.

★1535 - லீமா நகரம் நிறுவப்பட்டது.

★1591 - சியாம் மன்னன் நரெசுவான் பர்மாவின் இளவரசன் மின்சிட் சிராவுடன் மோதி அவனைக் கொன்றான்.

★1670 - ஹென்றி மோர்கன் பனாமாவைக் கைப்பற்றினான்.

★1701 - பிரஷ்யாவின் மன்னனாக முதலாம் பிரெடெரிக் முடிசூடினான்.

★1778 - ஹவாய் தீவுகளைக் கண்டறிந்த முதலாவது ஐரோப்பியன் கப்டன் ஜேம்ஸ்குக் இதற்கு சான்ட்விச் தீவுகள் எனப் பெயரிட்டான்.

★1788 - இங்கிலாந்தில் இருந்து 736 கைதிகளைக் கொண்ட முதலாவது தொகுதி அவுஸ்திரேலியாவின் பொட்டனி விரிகுடாவைச் சென்றடைந்தது.

★1824 - இலங்கையின் ஆளுநராக சேர் எட்வர்ட் பார்ன்ஸ் நியமிக்கப்பட்டார்.

★1871 - வடக்கு ஜேர்மனி கூட்டமைப்பு மற்றும் தெற்கு ஜேர்மன் மாநிலங்கள் ஆகியன ஜேர்மன் பேரரசு என்ற பெயரில் இணைந்தன. முதலாம் வில்ஹெல்ம் அதன் முதலாவது மன்னனான்.

★1896 - எக்ஸ்றே இயந்திரம் முதற்தடவையாக காட்சிப்படுத்தப்பட்டது.

★1911 - யூஜின் எலி என்பவர் தனது விமானத்தை சான் பிரான்சிஸ்கோ துறைமுகத்தில் நிறுத்தி வைக்கப்பட்டிருந்த USS பென்சில்வேனியா என்ற கப்பலின் மீது இறக்கினார். கப்பலொன்றில் தரையிறக்கப்பட்ட முதலாவது விமானம் இதுவாகும்.

★1919 - முதலாம் உலகப் போர்: பாரிஸ் அமைதி உச்சி மாநாடு பிரான்ஸில் வேர்சாயி நகரில் ஆரம்பமானது.

★1929 - லியோன் ட்ரொட்ஸ்கி சோவியத் ஒன்றியத்தில் இருந்து வெளியேற்றப்பட்டார்.

★1944 - இரண்டாம் உலகப் போர்: மூன்று ஆண்டுகளாக நாசிகளால் முற்றுகையிடப்பட்டிருந்த லெனின்கிராட் நகரை சோவியத் படைகள் மீட்டெடுத்தன.

★1960 - கொங்கோவின் எதிர்காலத்தைத் தீர்மானிக்கும் முக்கிய வட்டமேசை மாநாடு பெல்ஜியத்தில் நடைபெற்றது.

★1969 - ஐக்கிய அமெரிக்காவின் விமானம் ஒன்று சாண்டா மொனிக்கா விரிகுடாவில் வீழ்ந்ததில் 38 பேர் கொல்லப்பட்டனர்.

★1977 - அவுஸ்திரேலியாவின் சிட்னியின் புறநகர்ப் பகுதியான கிரான்வில் என்ற இடத்தில் பாலம் ஒன்று இடிந்து வீழ்ந்ததில் அதன் மேல் சென்று கொண்டிருந்த தொடரூந்து கீழே வீழ்ந்ததில் 83 பேர் கொல்லப்பட்டனர்.

★1995 - 17 ஆயிரம் ஆண்டுகள் பழைமையான குகை ஓவியங்கள் தெற்கு பிரான்ஸில் கண்டு பிடிக்கப்பட்டன.

★1997 - போர்ஜ் அவுஸ்லாண்ட் என்பவர் அண்டாட்டிக்காவை துணை எதுவுமின்றி முதன் முதலில் கடந்து சாதனை படைத்தார்.

★2002 - சியேராலியோனியில் உள்நாட்டுப் போர் முடிவுக்கு வந்ததாக அறிவிக்கப்பட்டது.

★2003 - கன்பராவில் இடம்பெற்ற காட்டுத் தீயில் 4 பேர் கொல்லப்பட்டு 500 வீடுகள் முற்றாக எரிந்து சேதமடைந்தன.

### பிறப்புகள்

★1854 - சுன்னாகம் குமாரசாமிப்புலவர், ஈழத்துப் புலவர் (இ. 1922)

★1921 - நாம்பு ஓச்சிரோ, இயற்பியல் அறிஞர்

★1937 - ஜோன் ஹியூம்,நோபல் பரிசுபெற்றவர்.

★1955 - எரிக் சொல்ஹெய்ம், நோர்வே அமைச்சர்

### இறப்புகள்

★1862 - ஜான் டைலர், ஐக்கிய அமெரிக்காவின் 10ஆவது ஜனாதிபதி. (பி. 1790)

★1873 - எட்வர்ட் பல்வர்-லிட்டன், ஆங்கில எழுத்தாளர் (பி. 1803)

★1936 - றூடியார்ட் கிப்லிங், நோபல் பரிசு பெற்ற பிரித்தானிய எழுத்தாளர் (பி. 1865)

★1963 - ப.ஜீவானந்தம், தமிழகப் பொதுவுடைமைக் கட்சித் தலைவர். (பி. 1906)

★1995 - அடொல்ஃப் பியூட்டெனண்ட், நோபல் பரிசு பெற்ற ஜேர்மானிய வேதியியலாளர். (பி. 1903)

★1996 - என்.டி.ராமராவ், தெலுங்கு திரைப்பட நடிகர், அரசியல்வாதி. (பி. 1923)

**2007 - மேற்கு ஐரோப்பாவின் 20 நாடுகளில் தாக்கிய கிரில் சூறாவளியினால் ஐக்கிய இராச்சியத்தில் 14 பேர் மற்றும் ஜேர்மனியில் 13 பேருமாக மொத்தம் 44 பேர் உயிரிழந்தனர்.**

# தேசிய அபிவிருத்தி சார்பாக இலவசக் கல்வி முறைமை உண்மையில் வெற்றி கண்டுள்ளதா? (4)



இதற்காககிடைக்கக் கூடிய வளங்களைப் பயன்படுத்தி கல்வியானது திட்டமிடப் படவேண்டும்.

உயர்ந்தபட்ச வளங்களை கல்விக்காகச் செலவிடும் போது உயர்தரமும், பொருத்தப்பாடும் உடைய கல்வியை வழங்கமுடியும். இத்தகைய கல்வியை சகலருக்கும் சாதி, மத, இன, பிரதேச வேறுபாடின்றி சமமாக வழங்கப்படவேண்டும். இதுவே வினைத்திறனாகும். எனவே தான் கல்வியானது உளவிருத்தி அல்லது உளக்கட்டொழுங்கு, ஒழுக்கம் உட்பட்ட கலாசாரம் மற்றும் வினைத்திறன் ஆகியவற்றைக் கொண்டிருந்து ஒருவரை பௌதீகரீதியாகவும், ஆன்மீக ரீதியாகவும் வாழ்க்கைக்குத் தயார்ப்படுத்துகின்றது.

இன்று உலக மயமாக்கலில் இலங்கை உள்ளீர்க்கப்பட்டுள்ளது. இதன் விளைவாக ஆங்கிலமொழியின் முக்கியத்துவம் உணரப்பட்டுள்ளது. தாய்மொழிப் போதனையில் சிறந்த பிரஜைகள் உருவாக்கப்பட்டபோதும் உலகளாவிய ரீதியில் ஈடு கொடுக்க முடியாத நிலை தோன்றியுள்ளமையும் மறுக்கமுடியாததொன்றாகும். இது காலத்தின் தேவையாகவுள்ளது. இதன் பிரதிபலிப்பே அண்மைக் காலத்தில் இந்நாட்டில் ஆங்கில மொழியில் போதனைகள் பாடசாலைகளில் இடம்பெறுவதற்குரிய வழிவகைகள் மேற்கொள்ளப்பட்டன. குறிப்பாக தரம் 6 இலிருந்து பல்கலைக் கழகம் வரை சில பாடத்துறைகளில் ஆங்கில மொழிமூலம் போதனைகள் இடம் பெற வாய்ப்பளிக்கப்பட்டது. இதனால் ஆங்கில மொழி மூலம் கற்பதற்கு ஆர்வமும், விருப்பமும் உடையவர்களுக்கு எம் மொழியூடாக போதனைகள் இடம்பெற்றபோதிலும், அவர்களில் அநேகர் தொடர்ந்து க.பொ.த (உயர்தர) வகுப்புவரை கற்க முடியாதவர்களாக இடையிலேயே தாய்மொழிப் போதனை வகுப்புகளில் சேருவதைக் காணக் கூடியதாகவுள்ளது. இதற்குப் பல காரணிகளைக் கூறலாம்.

இவற்றில் முக்கியமானது யாதெனில் க.பொ.த (உயர்தர) பரீட்சை இந்நாட்டில் பல்கலைக்கழக அனுமதிக்காக ஒரு பாரிய போட்டிப் பரீட்சையாகும். இப்போட்டிப் பரீட்சையில் மாணவர் அடையும் அடைவுப் புள்ளிகளுக்கு மொழிவேறுபாடு இல்லை.

**"கல்வியானது சமூகப் பொறுப்பும் பொருளியல் ரீதியான உற்பத்தித்திறனும் கொண்டநேர்மையான, கட்டொழுங்குள்ள,தேசபக்தியுள்ள குடிமக்களை உருவாக்க வேண்டும்"**

எனவே தான் ஆங்கில மொழியில் கற்பதற்கு ஆர்வம் கொண்ட வசதி படைத்தோரின் பிள்ளைகள் கூட இம்முறைமையிலிருந்து விடுபடுவதைக் காணக்கூடியதாகவுள்ளது. உண்மையில் தாய்மொழியில் கற்பதினால் மாணவரின் கிரகித்தலும் பெறும் விளக்கமும், இதன் காரணமாக பெறப்படும் அடைவும் ஆங்கில மொழிமூலமாக அடையப்பெறுவதிலும் அதிகம் என்பது மறுக்க முடியாத தொன்றே!

ஆங்கிலமொழி மூலம் போதனைக்கு அம்மொழியில் தேர்ச்சி பெற்ற குறிப்பாக மூன்று வருடங்கள் பயிற்றுவிக்கப்பட்ட ஆசிரியர்கள் உருவாக்கப்பட்டு அம் மொழி மூலப் போதனைக்காக ஆங்கில மொழி மூல வகுப்புகளைக் கொண்ட பாடசாலைகளுக்கு நியமிக்கப்படுகிறார்கள். ஆனால் இன்னும் இம் முறைமை வெற்றியளிக்காத நிலையே காணப்படுகிறது.

ஏனெனில் உதாரணமாக யாழ். குடாநாட்டை எடுத்துக் கொண்டால் பல வளங் கூடிய பாடசாலைகளில் இம்முறைமை ஆவலுடன் ஆரம்பிக்கப்பட்டது. ஆனால் காலப் போக்கில் அம் முறைமை சில பாடசாலைகளில் முற்றாக இல்லாது போய்விட்டது. இதற்குரிய காரணங்கள் பல இருப்பினும், தற்போது யுத்தத்தினால் பாதிக்கப்பட்ட வன்னிப் பிரதேசங்களில் சில குறித்த பாடசாலைகளில் இம் முறைமையை ஆரம்பிக்க வேண்டும் என்ற எடுகோளடிப்படையில் ஆங்கில மூலம் பயிற்றுவிக்கப்பட்ட சில ஆசிரியர்கள் நியமிக்கப்பட்டுள்ளனர். இது எந்தளவுக்கு வெற்றி பெறும் என்பது எதிர்காலத்தில்தான் தெரியவரும். சிலவேளைகளில் இவ்வாசிரியர்கள் தாய்மொழியில் கற்பிக்க வேண்டிய பரிதாப நிலையும் எதிர்காலத்தில் ஏற்பட்டால் வியப்பில்லை. இது வளங்கள் வீணடிக்கப் படுவது, திட்ட அமுலாக்கலின் குறைபாடும் எனக் கருதமுடியும்.

**கலைத்திட்டத்தில் சமயத்தின் பங்களிப்பு**

பிள்ளைகளில் கட்டொழுக்கை ஏற்படுத்தி அவர்களின் ஆன்மீக மேம்பாட்டை உருவாக் காதபட்சத்தில் கல்வியானது முழுமையாக மாட்டாது. 1920, 1930ஆம் ஆண்டு கட்டளைச் சட்டங்கள் சமய கல்விசார்பான ஏற்பாடுகளைக் கொண்டிருந்தன.

ஆனால் அரசாங்க பாடசாலைகளின் கலைத்திட்டத்தில் சமயம் சேர்க்கப்படவில்லை. 1945ஆம் ஆண்டு யூன் மாதத்தில் அரசாங்கப் பாடசாலைகளிலும், அரச பயிற்சிக் கல்லூரிகளிலும் பெற்றோரின் சமயம் அவர்கள் விரும்பியவிடத்து போதிக்கப்பட வேண்டும் என்னும் விதந்துரை ஏற்றுக் கொள்ளப்பட்டது. மேலும் அரச உதவி பெறும் சகல பாடசாலைகளிலும் சமயம் கட்டாயமாகப் போதிக்கப்படவேண்டும் எனும் திருத்தமும் ஏற்றுக்கொள்ளப்பட்டது. ஆனால் கிறிஸ்தவ மிஷனரிகளின் பலமான எதிர்ப்பினால் இதற்கு சட்டரீதியான அந்தஸ்து கிடைக் கவில் லை.

உண்மையில் தனது சமயத்தைக் கற்பதற்கு பிள்ளைக்குள்ள அடிப்படை ஜனநாயக உரிமை சமயப் பாடசாலைகளில் ஏற்றுக் கொள்ளப்படவில்லை. கட்டொழுங்கின் மூலமே ஒரு மனிதன் மற்றையோரின் நம்பிக்கையையும் விசுவாசத்தையும் பெறுகிறான். ஒருவரது நம்பகத்தன்மையே அவர் செல்வத்தைச் சேர்ப்பதற்கு அடிப்படையாகும். அவ்வாறு அவர் தேடிக்கொண்ட செல்வமானது அறமும், மகிழ்ச்சியும் கொண்ட வாழ்க்கையை நடத்துவதற்கு உதவுகிறது. எனவே தான் பௌதீக மற்றும் ஆன்மீக கட்டொழுங்கு இல்லாத கல்வி உண்மையான கல்வியல்ல. கட்டொழுங்கோடு சேர்ந்த அறிவே தேசிய அபிவிருத்திக்கு சாதகமாக அமையும்.

**தம்பியப்பா காங்கேசபிள்ளை**
முன்னாள் அதிபர்
பலாலி ஆசிரியர் கலாசாலை

இதனால் கட்டொழுங்கு வேலைப் படையின் தரத்தை மேம்படுத்துவதோடு நின்று விடாமல் வேலை நியமங்களும், வேலை ஒழுக்கமும் பின்பற்றப்படும்போது உற்பத்தித்திறன் உயர்வடைகின்றது. உண்மை என்னவெனில் கட்டொழுங்கு இல்லாத அறிவினால் பயனேதும் இல்லை.

(தொடரும்)

# ஈழத்தில் தமிழில் வெளிவரும் கலை இலக்கியச் சிற்றிதழ்கள் (2)

**கொழும்பில் நடைபெற்ற சர்வதேச எழுத்தாளர் மாநாட்டில் வாசிக்கப்பட்ட ஆய்வுக்கட்டுரை**

### கலை இலக்கியச் சிற்றிதழ்களின் உள்ளடக்கம்

ஈழத்துக் கலை இலக்கியச் சிற்றிதழ்களின் உள்ளடக்கம் பல்வேறு வகைமைகளுக்குள் அடங்கும் உட்கூறுகளைக் கொண்டனவாய்க் காணப்படுகின்றன. ஒரே சஞ்சிகையில் எல்லா உட்கூறுகளையும் காணமுடியாவிடினும், பொதுவாக சிறுகதை, கவிதை, கட்டுரை, நாடகம், நூல் விமர்சனம், நேர்காணல், பத்தி எழுத்து, வாசகர் எண்ணம் போன்ற பல்வேறு படைப்புகளை இன்று இச் சஞ்சிகைகளில் காணக்கூடிய தாக உள்ளது.

உள்ளடக்கக்கூறுகளை ஒழுங்கமைத்து, கருத்துவெளிப்பாட்டுச் சித்திரங்களையும் சேர்த்து கணனி அச்சுப்பதிப்பில் இன்றைய கலை இலக்கிய சஞ்சிகைகள் வெளிக்கொண்டு வரப்படுகின்றன.

படைப்புகளை அச்சுப்பதிக்கும் போது அவற்றின் ஒழுங்குபடுத்தும் திட்ட ஏற்பாட்டிலும் அதிக சிரத்தை காட்டுவதையும் அவதானிக்கக்கூடியதாக உள்ளது.

### கலை இலக்கியச் சிற்றிதழ்களின் இன்றைய நிலை

◆ கால ஓட்டத்தில், கலை இலக்கிய இதழ்கள் பல்கிப் பெருகுவதை நாம் காண்கின்றோம். புதிய புதிய இதழ்கள் உருவாக்கம் பெற்று, குறுகிய கால இடைவெளியில் அவை வந்த வேகத்திலேயே பல நின்று விடுவதையும் காண்கின்றோம்.

◆ பொதுவாக, இச்சஞ்சிகைகளில் மூத்த எழுத்தாளர்களும் இளைய தலைமுறையினரும் எழுதிவருகிறார்கள்.

◆ இளைய தலைமுறையினர் பெரும்பாலும் கவிதைகளையே எழுதுகின்றனர். எழுத்தாளர்களின் அனுபவத்தைப் பொறுத்து, இக்கவிதைகளின் தரம் காணப்படுகின்றது. சில கவிதைகளைப் படிக்கும் போது, படைப்பாளியின் அனுபவத்தளவிரிவு பற்றிய ஐயப்பாடு எழுவது தவிர்க்கமுடியாததாகிறது.

◆ கலை இலக்கியச் சிற்றிதழ்களுக்கு பாடசாலைகளில் ஆசிரியர்களிடமிருந்தும் மாணவர்களிடமிருந்தும் அதிக வரவேற்புகிடைக்காத நிலையே காணப்படுகிறது. இதற்கு மாணவர்களிடத்தும் ஆசிரியர்களிடத்தும் வாசிப்பு ஆர்வமின்மையே காரணம்.

◆ தனி இதழ் ஒவ்வொன்றும் பொதுவாக 40-60 பக்கங்களைக் கொண்டனவாய், ரூ. 40 முதல் ரூ. 100 வரை விலை நிர்ணயம் செய்யப்பட்டுள்ளன.

◆ பலசஞ்சிகைகளின் உள்ளடக்கம், தமது வாசகர்கள் யார் என்ற தெளிவின்றி, பலமட்டத்து வாசகர்களையும் திருப்திப்படுத்தும் வகையில் அமைவதனால், கனதித் தன்மையை இழந்துவிடுகின்றன.

◆ புதிய இலக்கியக் கோட்பாடுகளை வாசகர்க்கு அறிமுகம் செய்வதற்கான கட்டுரைகளை துறைசார் விற்பன்னர்களிடமிருந்து பெற்றுப் பிரசுரிக்கும் நிலை காணப்படுகின்றது. அதேவேளை, புதிய எழுத்தாளர்கள் போதிய அனுபவமும் அறிவுமின்றி, கோட்பாட்டுரீதியான கட்டுரைகளை எழுதி வருகின்ற போக்கும் காணப்படுகின்றது.

◆ சிறுசஞ்சிகைகளிற்சில, இடை இடையே, தேவை கருதி சிறப்பிதழ்களையும் வெளியிட்டு வருகின்றன.

### கலை இலக்கியச் சிற்றிதழ்கள் எதிர் கொள்ளும் சவால்கள்

◆ சிறுசஞ்சிகை ஒன்றை உருவாக்குவதற்கான செலவு அதன் விலையினும் அதிகமாக இருக்கிறது.

◆ சஞ்சிகை விநியோகம் சிரமத்திற்குரிய ஒன்றாகக் காணப்படுகின்றது.

◆ ஓர் இதழை ஐம்பது ரூபா அல்லது அறுபது ரூபாவுக்கு வாங்கிப் படிக்கும் மனோநிலை பலருக்கு இல்லை.

◆ பலரிடத்து, தொடர்ந்தும் இதழ்களை இலவசமாகத் தந்தாலென்ன என்ற மனப்பாங்கு காணப்படுகிறது:

◆ சஞ்சிகைக்கான விளம்பரங்களைப் பெற்றுக்கொள்வதில் சிரமம் உள்ளது.

◆ சிறுசஞ்சிகைகளுக்கு எழுதும் எழுத்தாளர்கள், உடனடியாக தமது படைப்பை அச்சில் பார்த்துவிடத் துடிக்கிறார்கள்.

◆ சிலவேளைகளில், ஒரே சமயத்தில் இரண்டு, மூன்று சஞ்சிகைகளுக்கு தமது ஒரே படைப்பின் பிரதிகளை அனுப்பிவைக்கின்றனர்.


◆ விமர்சனக் கட்டுரை எழுதும் ஆரம்ப எழுத்தாளர்களிற் சிலர், தம்மை விமர்சனப் பண்டிதர்களாகத் கருத்திக் கொண்டு, தெளிவின்றி, மூத்த எழுத்தாளர்களை, அவர்தம் படைப்புகளை, விமர்சன முறையியலுக்குப் பொருத்தமற்ற வகையில் அவதூறு சொல்கின்றனர்.

◆ முன்னைய நாட்களில், ஆரோக்கியமான இலக்கிய விவாதங்கள் பல இச் சிறு சஞ்சிகைகளில் இடம்பெற்றன. இந்நிலை மாறி புனைபெயர்களுள், ஒளிந்து கொண்டு, படைப்பாளிகளைச் சீண்டும் வகையில் கடிதங்களை எழுதும் போக்கு காணப்படுகிறது.

◆ புதிதாகக் கட்டுரை எழுதுபவர்களிற் சிலரிடம் வெட்டி ஒட்டும் (Cut and paste) போக்கு காணப்படுகிறது.

◆ இலக்கியத் திருட்டை (plagiarism) மிகவும் இலாவகமாக சில எழுத்தாளர்கள் மேற்கொள்ளும் நிலை காணப்படுகிறது.

◆ இச்சஞ்சிகைகளுக்கூடாக இடம்பெறும் சிறுகதைப் போட்டிகளுக்கென பிரபலமான எழுத்தாளர்களின் முன்னைய எழுத்துகளை தங்கள் படைப்புகளாக அனுப்பிவைக்கும் போக்கும்காணப் படுகின்றது.



◆ சிறுசஞ்சிகைகளின் மூலம் இலாபம் பெறும் நிலை என்று எதுவும் இல்லை. ஆயினும், சஞ்சிகை விற்பனையை வர்த்தகக் கண்ணோட்டத்தில் நோக்கி, உதாசீனம் செய்யும் நிலை உள்ளது.

◆ சிறு சஞ் சிகைகளுக்கான சந்தாவைப் பெற்றுக் கொள்வதில் பாடசாலைகளோ நிறுவனங்களோ ஆர்வம் காட்டுவதில்லை.

◆ சந்தாதாரர்களுக்கான இதழ்களை அனுப்புவதற்கான முத்திரைச் செலவு உயர்வாக உள்ளது.

◆ வாசிப்புத்திறனை ஊக்குவிக்கும் திட்டங்கள் பொதுவாக பாடசாலைகளில் காணப்படுவதில்லை.

◆ இலத்திரனியற்தொழில்நுட்ப வளர்ச்சி காரணமாக ஏற்பட்டுள்ள சாதன வளர்ச்சிகள் வாசிப்பின்முக்கியத்துவத்தைக்குறைத்துள்ளன.

இணையத்தளங்களில் வலைப்பூக்களை உருவாக்கி, தமது படைப்புகளை அவற்றினூடாக வெளியிடுகின்றனர். அவர்களிடத்து தமது படைப்புகளை சிறுசஞ்சிகைகளுக்கு அனுப்பும் ஆர்வம் குறைந்துவருகிறது.

**மதிப்பீடும் எதிர்காலத் திட்டங்களும்**

**மதிப்பீடு:** ஈழத்துக் கலை இலக்கிய சஞ்சிகைகளைப் பொறுத்தவரை, தனி மனித முயற்சிகளுக்கூடாக முன்னெடுக்கப் பட்டுவரும் சஞ்சிகைகளே நின்றுநிலைத்துள்ளன. நிறுவனரீதியாகவோ அல்லது குழுமுறையிலோ ஆரம்பிக்கப்பட்ட இதழ்கள் ஆரம்பநிலையிலேயே நின்றுபோய் விட்டன. ஆசிரியர் குழுவினரிடையே காணப்பட்ட கருத்து முரண்பாடுகளும் இதற்குக் காரணமாகும்.

**க.பரணீதரன்**
ஆசிரியர் -ஜீவநதி

(தொடரும்)

# தேர்தலைக் கண்டு நடுங்கும் அரசாங்கம்


மகிந்த ராஜபக்ஷ

நாம் தேர்தல்களுக்குப்பயம் இல்லை. தேர்தல் நடத்தினால் ஜே.வி.பியும் ஐக்கிய தேசியக் கட்சியும் நடுங்குகின்றன. இது மகிந்தவும், அவரது அரசாங்கமும் எப்போதும் கூறும் திருவாசகம். அப்படியானால், ஏன் மாநகரசபைகளின் தேர்தல்கள் ஒத்திவைக்கப்பட்டன. உலகக் கிண்ண கிரிக்கெட் போட்டிகள் நடைபெறவுள்ளதால் போட்டிகள் நடைபெறும் நகரங்களில் தேர்தலை ஒத்திவைப்பதாக அரசாங்கம் ஆரம்பத்தில் கூறியது. அப்படியானால் போட்டிகள் நடத்தப்படும் கொழும்பு மாநகரசபை, பல்லேகல பிரதேசசபை, சூரியவெள நகரசபை ஆகியவற்றின் தேர்தல்களை மாத்திரமே ஒத்திவைத்திருக்க வேண்டும். ஏன் 18 மாநகர சபைகளின் தேர்தல் ஒத்திவைக்கப்பட்டது. இதற்கு வேறு எந்தக் காரணமும் அல்ல. குறித்த 18 நகரங்களிலும் அரசாங்கம் தோல்வியடையும் என புலனாய்வுப் பிரிவுகள் அறிவித்திருந்ததன் காரணமாகவே தேர்தலை அரசாங்கம் ஒத்திவைத்தது.

தற்போது நகரத்திலுள்ள வாக்குகளைக் கண்டு அரசாங்கம் நடுங்குகிறது. இவ்வாறு நடுங்குவது சாதாரணமான அரசாங்கம் அல்ல. நிறைவேற்று அதிகாரத்தை இன்னும் ஆறு ஆண்டுகளுக்குள் எழுதி வைத்துக்கொண்டு நாடாளுமன்றத்தில் மூன்றில் இரண்டு பெரும்பான்மையை வைத்துக் கொண்டு, ஜனாதிபதித் தேர்தலில் வாழ்நாள் முழுவதும் போட்டியிடக் கூடிய வகையில் திருத்தங்களை மேற்கொண்டு ஆசியாவின் மிகவும் சக்திவாய்ந்த அரசாங்கமாக இருக்கும் நிலையிலேயே அரசாங்கம் இவ்வாறு நடுங்குகிறது. இரண்டாவது பதவிக் காலத்திற்காகப் பதவியேற்று இரண்டு மாதங்கள் கடக்கும் முன்னரே தேர்தல்களைக் கண்டு இப்படி நடுங்குவார்களானால் எதிர்காலத்தில் எப்படி தேர்தலை எதிர்கொள்ள முடியும்.

உள்ளூராட்சி சபைகளைக் கலைப்பதற்கு முன்னர் 18 மாநகர சபைகளில் தோல்வி அடைவோம் என கணக்குப் பார்த்த அரசாங்கம் ஏனைய இடங்களில் எவ்வாறு வெற்றிபெறும் என்பதை உறுதிப்படுத்துவது. உண்மையில் அரசாங்கம் கடந்த காலத்தில் நடைபெற்ற அனைத்துத் தேர்தல்களிலும் வெற்றியைக் கையில் வைத்துக்கொண்டு வெற்றிபெறும் மனநிலையிலேயே தேர்தல்களுக்குச் சென்றது. எனினும், இம்முறை 18 மாநகர சபைகளுக்கான தேர்தல்களை ஒத்திவைத்து அவற்றில்

## சிங்களத்தில் உபுல்நோசப்

தோல்வியடைந்து விடுவோம் என்ற தோல்வி பயத்தோடே இம்முறைத் தேர்தலைச் சந்திக்கிறது.


அரசாங்கத்தை வீழ்த்துவது கிராமங்கள் அல்ல நகரங்களே. நகரத்தில் தொடங்கினால் கிராமத்திற்குச் செல்லும். கிராமத்திலிருந்து நகருக்கு வருவதில்லை. நகரத்திற்குள் தனக்கு ஆதரவில்லை என அரசாங்கம் நினைக்குமானால் அரசாங்கத்திற்கெதிராக பாரிய எதிர்ப்புகள் எழ ஆரம்பிக்கும். அது நகரத்தில் ஆரம்பித்து கிராமங்கள் வரை விரிவடையும். இது இலங்கையில் மாத்திரமல்ல உலகம் முழுவதும் இதுதான் நடைபெறுகிறது. பிரேமதாஸவிற்கு எதிரான நம்பிக்கையில்லாப் பிரேரணை நகரத்தில் ஆரம்பித்தது. பிரேமதாஸவிற்கு எதிரான எதிர்ப்புகள் நகரத்திலிருந்து கிராமத்திற்குச் சென்றது. 2001ஆம் ஆண்டு சந்திரிகா அரசாங்கத்திற்கு எதிரான மக்கள் சக்தி நகரத்தை மையமாகக் கொண்டே கட்டியெழுப்பப்பட்டது. அதுவும் பின்னர் கிராமம் வரை விரிவடைந்தது. 2004ஆம் ஆண்டு ரணில் விக்ரமசிங்க அரசாங்கத்திற்கெதிரான, சமாதானத்திற்கெதிரான சிங்கள பௌத்த சக்திகள் நகரத்தை அடிப்படையாகக் கொண்டே ஆரம்பித்தன. பின்னர் அதுவும் கிராமங்கள் நோக்கிப் பரவியது.

உண்மையில் மகிந்த அரசாங்கத்திற்கு ஆதரவான நிலையும் நகரங்களிலேயே உருவானது. யுத்த வெற்றியின் பின்னர் மகிந்தவை மன்னராக அபிஷேகப்படுத்தியதும் நகரமே. இந்த அபிஷேகம் பின்னர் கிராமங்களுக்குச் சென்றது. இந்த நிலையில் நகரங்களில் தேர்தலை நடத்த நடுங்கும் அரசாங்கம் அடுத்த ஆறு வருடங்கள் நடுங்காமல் எப்படி ஆட்சி செய்யப் போகிறது. மகிந்த இரண்டாம் தவணைக்காக பதவியேற்ற பின்னர் இருந்தே அரசாங்கம் ஆட்டம் காண ஆரம்பித்தது.

"யானைக் குட்டிகள் கதவைத் தட்டுகின்றன. நான் மிகவும் கடினமாக கதவுகளை மூடிவைத்துக் கொண்டிருக்கிறேன். மேலும் தேவையெனில் ஐக்கிய

# அரசுக்கு எதிராக குரல் கொடுக்கும் முன்னாள் பிரதமர் ரட்ணசிறி

தேசியக் கட்சியிலிருந்து நாடாளுமன்ற உறுப்பினர்களை ஆளும் கட்சிக்கு இழுத்துக் கொள்ள முடியும். எனினும் கொடுப்பதற்கு அமைச்சுப் பதவிகள் இல்லை" இவ்வாறு தனது இரண்டாம்


ரணில் விக்ரமசிங்க

தவணைக்கான பதவியேற்பிற்கு முன்னர் மகிந்த தெரிவித்திருந்தார். அப்போது ஐக்கிய தேசியக் கட்சிக்குள் உட்கட்சிப் பூசல்கள் இருப்பதாகக் கூறி அரசாங்கம் கைதட்டி மகிழ்ந்து கேலி செய்தது. ஆனால் இன்று அரசாங்கத்தில் இருக்கும் சிரேஷ்ட அமைச்சரான முன்னாள் பிரதமர் ரட்ணசிறி விக்ரமநாயக்க, எதிர்க்கட்சிகளுடன் இணைந்து சூழ்ச்சி செய்வதாக அரசாங்கத்தின் அமைச்சார்கள் கூறுகின்றனர். ஜனாதிபதி பதவியேற்பதற்கு முன்னர் எத்தனை பேர் ஐக்கிய தேசியக் கட்சியிலிருந்து அரசாங்கத்திற்குத் தாவப் போகின்றார்கள் என எழுதிய ஊடகங்கள், தற்போது ரட்ணசிறி உள்ளிட்ட ஆளும் கட்சியினர் எதிர்க்கட்சிக்கு செல்வது குறித்து எழுதுகின்றன.

ரட்ணசிறி தனது அமைச்சில் கடமைகளைப் பொறுப்பேற்ற வைபவத்தில் உரையாற்றும்போது தாம் ஒருபோதும் எதிர்க்கட்சிக்கு செல்லப்போவதில்லையெனவும், தன்னைக் கட்சியிலிருந்து நீக்க மகிந்தவிற்கும் முடியாது எனவும் கூறினார். அவர் கூறியது உண்மைதான். ரட்ணசிறி என்பவர் ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சியை விட்டுச் செல்லும் நபர் அல்ல. அவர் அவ்வாறு செல்வதானால் 1983 ஆம் ஆண்டு அநுர பண்டாரநாயக்கவிற்கும், ஜே.ஆர்.ஜெயவர்த்தனவின் அரசாங்கத்திற்கும் இருந்த அரசியல் கொடுக்கல்-வாங்கல் காரணமாக அதிருப்தியடைந்து கட்சியின் செயலாளர் பதவியிலிருந்து விலகி விஜேகுமாரதுங்க, சந்திரிகா ஆகியோரின் மக்கள் கட்சியில் இணைந்


ரட்ணசிறி

திருக்கலாம். அவர் மக்கள் கட்சிக்குச் செல்லவில்லை. தற்காலிகமாக அரசியலிலிருந்து ஒதுங்கியிருந்தார். கட்சி மீது இருக்கும் பற்று காரணமாக அவர் அரசியலிலிருந்து சிறிதுகாலம் ஒதுங்கியிருந்தார்.

92ஆம் ஆண்டு அவர் மீண்டும் ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சிக்குத் திரும்பினார். சுதந்திரக் கட்சி இல்லாத அரசியலை நினைத்துப் பார்க்க முடியாததன் காரணமாகவே அவர் அப்போது சந்திரிகாவுடன் இணைந்து கொண்டார். இதனால் அவர் கட்சியை விட்டுச் செல்லமாட்டேன் எனக் கூறுவது உண்மைதான். அப்படியானால் அவர் என்ன செய்யப் போகிறார். அவர் சுதந்திரக் கட்சிக்குள் இருந்து கொண்டு அந்தக் கட்சியின் மறுசீரமைப்பிற்கு தலைமை தாங்கப் போகிறார். சுதந்திரக் கட்சிக்குள் ஜனநாயகத்தை ஏற்படுத்தி, அரசாங்கத்திற்குள்ளும் ஜனநாயகத்தை ஏற்படுத்தும் நடவடிக்கைக்கும் தலைமைதாங்கப் போகிறார். அவர் அதனை செய்தும் காட்டியிருக்கிறார்.

அவரது பேச்சுக்குப் பின்னர் அலுவலகங்கள் இல்லாதிருந்த சிரேஷ்ட அமைச்சர்களுக்கு ஒரு அலுவலகம் கிடைத்தது. செயலாளர்கள் கிடைத்தனர். ரட்ணசிறியின் புண்ணியத்தால் 10 சிரேஷ்ட அமைச்சர்களும் கடமைகளைப் பொறுப்பேற்றனர். என்னை நீக்க ஜனாதிபதி அல்ல எவருக்கும் முடியாது என ரட்ணசிறி கடமையைப் பொறுப்பேற்கும் போது கூறினார். அவர் வெறுமனே இதனைக் கூறவில்லை. அரசாங்கம் திருந்தாவிட்டால் திருத்துவதற்கான தலைமைத்துவதை வழங்கத் தான் தயார் என்ற செய்தியை அவர் வழங்கினார்.

ஐக்கிய தேசியக் கட்சியின் தலைமைத்துவத்தின் சிறகுகளை வெட்டி அந்தக் கட்சியின் மறுசீரமைப்புப் பணியை மறுசீரமைப்புக் குழு வெற்றிகரமாக முன்னெடுத்திருந்த சமயத்தில் ரட்ணசிறி நெஞ்சை நிமிர்த்தி கதைக்க ஆரம்பித்திருக்கிறார். அரசாங்கத்தினதும் சுதந்திரக் கட்சியினதும் மறுசீரமைப்பு போராட்டத்தை ரட்ணசிறி ஆரம்பிப்பாரா என்பதைக் கூறமுடியாது. எனினும் அவர் அரசாங்கத்திற்குள் எதிர்க்கட்சியொன்றை உருவாக்கும் அடித்தளத்தை இட்டுள்ளார். அது சரியானது. ஐக்கிய தேசியக் கட்சிக்குள் மறுசீரமைப்பு அணிகள் தனியான பிரிவுகளை உருவாக்கி, கட்சிக்குள் ஜனநாயகத்தை ஏற்படுத்துவது சாதாரண விடயம். ஐக்கிய தேசியக் கட்சியின் மறுசீரமைப்புக் குழுவினர் தமது போராட்டத்தில் வெற்றிபெற்று கட்சியின் தலைமையகத்தின் வாயில் கதவை அசைக்கும் வகையில் கூடியிருந்த மக்கள் கூட்டத்தின் பின்னரே ரட்ணசிறி குரல் எழுப்ப ஆரம்பித்திருக்கிறார்.

ரட்ணசிறி போன்றவர்கள் நுழைவாயில் கதவை எப்போது அசைக்கப் போகிறார்கள். அதனை சரியாகக் கூறமுடியாது.

எவ்வாறாயினும், ஐக்கிய தேசியக் கட்சியினர் மறுசீரமைப்பு கோரி சிறிகொத்தவின் வாயில் கதவை அசைத்த போது மகிந்தவின் அரசாங்கமே அதனைக் கண்டு குலுங்கியது. இந்த நடுக்கமும் மாநகர சபைத் தேர்தல்களை ஒத்திவைப்பதற்கான ஒரு காரணமாகும். இது மகிந்த இரண்டாவது பதவிக் காலத்திற்கான சத்தியப்பிரமாணத்தை மேற்கொண்ட பின்னர் ஏற்பட்ட அடுத்த வீழ்ச்சியாகும்.

உள்ளூராட்சி சபை தேர்தல் முறைத் திருத்தம் தொடர்பான சட்டமூலத்தை சுருட்டிக் கொண்டமை மாபெரும் வீழ்ச்சியாகும். தொகுதி வாரியாக உள்ளூராட்சி சபைத் தேர்தல்களை நடத்தி இலங்கையில் மூன்றில் இரண்டு பிரதேசங்களைக் கைப்பற்றிக் காட்டுவதற்காகவே அரசாங்கம் ஆரம்பத்தில் திட்டமிட்டது.

இந்தப் புதிய திருத்தச் சட்டமூலத்தின் அடிப்படையில் வரவு-செலவுத் திட்டம் தோற்கடிக்கப்பட்டால் உள்ளூ ராட்சி சபைகளின் ஆட்சி அதிகாரம் கையைவிட்டுப் போய்விடும்.


ராஜபக்ஷவின் ராஜதானியான பெலியத்தயில் தொடங்கி உள்ளூராட்சி சபைகளின் கூட்டமைப்பு அரசாங்கத்தின் வரவு-செலவுத் திட்டங்கள் தோல்வியடைந்துவரும் நிலையில் சட்டமூலத்தை அமுல்படுத்தினால் அது தமக்குத்தாமே வெட்டிக்கொள்ளும் குழியென அரசாங்கம் அஞ்சியது. தொகுதி வாரியாக தேர்தல் நடத்தினால் எதிர்க்கட்சிக்கு சாதகமாக அமைந்துவிடுமோ என்ற அச்சமும் அரசாங்கத்திற்கு ஏற்பட்டது. இந்த அச்சம் காரணமாகவே சட்டமூலத்தை நிறைவேற்றாமல் அதனை ஒத்திவைத்தது.


சஜித் பிரேமதாஸ

இந்த விடயங்கள் மகிந்த இரண்டாம் தவணைக்காக பதவியேற்ற பின்னர் அரசாங்கம் அடைந்துள்ள வீழ்ச்சியைக் காட்டுகிறது. இன்னும் இரண்டு மாதங்கள் கூட பூர்த்தியடையவில்லை. ஒன்றரை மாதத்தில் தனது நிழலைக்கூடக் கண்டு அஞ்சும் அரசாங்கம் என்ன ஆட்டங்கள் ஆடினாலும் ஆறு வருடங்களுக்கு ஆட்சி செய்யுமானால் அது ஆச்சரியமானது.

# டெங்குக் காய்ச்சல் DENGUE FEVER






## குழந்தைகளுக்கு வரும் காய்ச்சல்கள்

*(சென்றவாரத் தொடர்ச்சி)*

**அறிகுறிகள்**

உடலுக்குள் டெங்கு வைரஸ் கிருமிகள் நுழைந்த 1-7 நாட்களுக்குள் நோயின் அறிகுறிகள் ஏற்படும். அந்த அறிகுறிகள், பாதிக்கப்பட்ட நபரின் வயதுக்கு ஏற்ப மாறுபடும்.

சிறுவர்கள் (Infants) மற்றும் குழந்தைகளுக்கு 1-5 நாட்களுக்குள் காய்ச்சல் ஏற்படும். தொண்டைவலி, மூக்கில் இருந்து நீர் கொட்டுதல், இலேசான இருமல் உண்டாகும்.

பெரிய குழந்தைகள் மற்றும் பெரியோர்களுக்கு காய்ச்சல், தலைவலி, முதுகுவலி போன்றவை காய்ச்சலுக்கு முன் ஏற்படும். காய்ச்சல் ஏற்பட்ட 24-48 மணி நேரத்தில் உடல் முழுவதும் சிவப்பு நிறத் தடிப்புகள் உருவாகும்.

காய்ச்சலுக்கு ஏற்ப நாடித் துடிப்பின் அளவு அதிகமாகவோ குறைவாகவோ இருக்கும். உடல்வலி, மூட்டு வலி ஏற்பட்டு அதன் தீவிரம் அதிகரிக்கும்.

2முதல் 6 நாட்களுக்குள் குமட்டல், வாந்தி போன்றவை ஏற்படும். நெறி கட்டுதல் மற்றும் பசியின்மை போன்றவை ஏற்படும்.

**டெங்கு ஹீமோராஜிக் காய்ச்சல்**

ஒருவரை ஒன்றுக்கும் மேற்பட்ட முறை டெங்கு வைரஸ் தாக்கும் போது டெங்கு ஹீமோராஜிக் காய்ச்சல் என்ற மோசமான பாதிப்பு ஏற்படுகிறது.

இரண்டாவது முறையாக டெங்கு வைரஸ் தாக்கும்போது இந்தப் பாதிப்பு ஏற்படலாம். முதல் தடவை இந்த வைரஸ் தாக்கும்போது நோயாளியின் எதிர்ப்புச் சக்தியை உந்துகிறது (Sensitize).

இரண்டாவ்து தடவை தாக்கும்போது உடலில் நோய் எதிர்ப்புச் சக்தியைப் பாதிக்கிறது.


வைரஸ் தாக்கிய 4முதல் 6 நாட்களுக்குப் பின்னர், முதல் நிலையாக காய்ச்சல், உடல் வலி, வாந்தி, தலைவலி, பசியின்மை, இருமல் போன்றவை ஏற்படும். இவற்றைத் தொடர்ந்து, இரண்டாவது நிலையில் அடுத்த இரண்டு அல்லது ஐந்தாவது நாட்களுக்குள் நிலைமை மோசமாகி இறப்பு நேரிடலாம்.

இந்த இரண்டாவது நிலையில் நோயாளி கை, கால்கள், சில்லிட்டுப் போகும். உடல் சூடாக இருக்கும்.முகம் சிவந்து போகும். வியர்வை அதிகரிக்கும். பாதிக்கப்பட்ட குழந்தைகள் மிகவும் பரபரப்பாகவும், எரிச்சலுடனும் இருப்பார்கள். நெஞ்சுக்கு அடியில் வலி உண்டாகும்.

முன்நெற்றி மற்றும் கை, கால்களில் நுளம்புக்கடி போன்ற சிறிய சிறிய இரத்தக் கசிவுகள் ஏற்படும். சில சமயங்களில் பெரிய அளவில் இரத்தக்கசிவும் ஏற்படலாம். ஊசி போட்ட இடத்தில் இருந்துகூட இரத்தம் தானாகவே கசியலாம்.

உடல் முழுவதும் சிவந்த மற்றும் சிவந்து தடித்த புள்ளிகள் உண்டாகலாம். வாயைச் சுற்றியும், கை கால்களும் ஊதா நிறத்தில் மாறலாம். குழந்தைகள் கஷ்டப்பட்டு மிக வேகமாக மூச்சுவிடுவார்கள். நாடித்துடிப்பு வேகமாகவோ உலலது மெதுவாகவோ இருக்கும்.ஈரல் வீங்கிப்போகும். பரிசோதனை செய்யும்போது வலிக்கும்.

டெங்கு ஹீமோராஜிக் காய்ச்சல், 20-30 சதவீதம் அளவுக்கு டெங்கு ஷொக் சிண்ட்ரோம் (Dengue Shock Syndrome) என்ற நிலைக்குக் கொண்டு செல்லும். உணவுக் குழாயில் இரத்தக் கசிவு ஏற்பட்டு இரத்த வாந்தியும், மலம் கறுப்பாகவும் வெளியாகும்.



24-36மணி நேரத்துக்குப் பின்னர் குழந்தைகளுக்குக் கொஞ்சம் கொஞ்சமாககுணம்தெரியும். காய்ச்சல் படிப்படியாகக் குறையும்.

**டெங்கு ஹீமோராஜிக் காய்ச்சல் அறிகுறிகள்**

◆ காய்ச்சல்

காய்ச்சல் அதிகமாகவும், தொடர்ந்தும், சில சமயங்களில் இடைவெளி விட்டு 2-7 நாட்கள் வரை இருக்கும்.

◆ இரத்தக் கசிவு

டார்னிகுட் பரிசோதனையில் (TOURNIQUET TEST), 2.5 செ.மீ. சதுரப்பரப்பில் 20க்கும் மேற்பட்ட இரத்தப் புள்ளிகள் இருந்தால், இந்த நோய் உள்ளதை உறுதிப் படுத்திக்கொள்ளலாம்.

**டாக்டர் பி.சேகர்**
குழந்தைநல மருத்துவர்
சென்னை

இவைதவிர கீழ்க்கண்ட அறிகுறிகள் இருந்தாலும் நோய் இருப்பது உறுதி.

◆ நுளம்புக்கடி போன்ற இரத்தப் புள்ளிகள்
◆ பெரிய இரத்தப் புள்ளிகள்
◆ மிகப் பெரிய இரத்தக் கசிவு
◆ மூக்கில் இருந்து இரத்தம் வடிதல்
◆ ஈறுகளில் இருந்து இரத்தம் கசிதல்
◆ இரத்தவாந்தி அல்லது மலம் கறுப்பாகவோ, இரத்தமாக வருதல். (வளரும்)




# மருத்துவத் துளிகள்



வயிற்றில் உள்ள குடல்களில் சுரக்கும் அமிலங் களும் நச்சுப்பொருட்களும் அரிப்பதன் காரணமாக குடல் புண் என்கிற அல்சர் ஏற்படுகிறது. பச்சை வாழைப் பழத்தை தொடர்ந்து சாப்பிட்டு வந்தால் இந்தப் பாதிப்பில் இருந்து விடுபடலாம்.

குடல்களில் பழுதுபட்ட மெல்லிய சவ்வுத் தோல்களை விரைவில் வளரச் செய்து புண்ணை ஆற்றி விடும் சக்தி பச்சை வாழைப் பழத்திற்கு உண்டு.

வெண்டைக்காய் விதையைக் கொஞ்சம் பார்லி கஞ்சி யில் போட்டு காய்ச்சி மூன்று நாள் வரை சாப்பிட்டு வந் தால் சிறுநீர் கழிக்கும் போது ஏற்படும் எரிச்சல் இல்லாமல் போகும்.

உணவு சாப்பிடுவதற்கு அரை மணி நேரத்திற்கு முன்னதாக தினசரி அரை ரீஸ்பூன் ஒலிவ் எண்ணெயைச் சாப்பிட்டு வந்தால், இரத்தக் குழாயில் கொழுப்பு படிவதைத் தடுக்க லாம்.

வாய்ப்புண் உள்ளவர்களுக்கு காரம் ஆகாது. முடிந்தவரை காரத்தைக் குறைத்துச் சாப்பிடுங்கள்.தேங்காயத் துண்டுகளைச் சாப்பிட்டு வந்தால் எளிதில் வாய்ப்புண் ஆறும்.

இரவில் படுக்கப் போகும்முன் வெந்நீரில் சிறிது தேன் கலந்து அந்த நீரில் வாயைக் கொப்பளித்து வந்தால் பற்களுக்குத் தொந்தரவு கொடுக்கும். பக்ரீறியாக்கள் செத்துப் போகும். பற்களின் எனாமல் சிதையாமல் பாதுகாக்கப்படும்.

வெள்ளைப் பூசணிக்காய் சாறில் ஒரு கரண்டித் தேன் கலந்து சாப்பிட்டு வந்தால் மூளைச்சோர்வு நீங்கும். சுறுசுறுப்பாக செயற்படலாம்.

# அவசியமான காய்கறிகள்...!

பனிக்காலத்தில் இயல்பாகவே நமது உடல் மிகவும் சூடாக இருக்கும். அப்போது நமது உடம்பின் உஷ்ணத்தை சமன்படுத்த, குளிர்ச்சியான காய்கறிகளை சாப்பிடுவது அவசியம். பனிக்கால பிரச்சினைகளான இருமல், காய்ச்சல், ஜலதோஷம் ஆகியவை ஏற்படாமல் கீழ்க்கண்ட காய்கறிகள் நம்மைப் பாதுகாக்கும்.

வெண்டைக்காய், குளிர்ச்சியான தன்மை கொண்டது. வெண்டைக்காய் இதனுடன் சீரகம் சேர்த்து சமைப்பது நல்லது. இது வறண்ட குடலைப் பதப்படுத்தும். இதில் விற்றமின் 'சி', 'பி' மற்றும் உயிர்ச்சத்துக்கள் உள்ளன. இதை அடிக்கடி உட்கொண்டு வந்தால் சிறுநீர் பெருகும். உஷ்ண இருமலைக் குணமாக்கும். வாய்வுத்தொல்லை உள்ளவர்கள் இதை அதிகமாக உண்டால் வயிற்று வலியை ஏற்படுத்திவிடும். அதனால் அவர்கள் வெண்டைக்காயை அளவோடு எடுத்துக் கொள்வது அவசியம்.

**அவரைக்காய்:** இதிலும் பல வகைகள் உண்டு. வெள்ளை அவரைப் பிஞ்சை, நோயாளிகள் உண்ணும் காலத்தில் பத்திய உணவாக உண்ணலாம். இதை சமைத்து உண்டால் உடலை வலுவாக்கும். சூடான தேகம் கொண்டவர்களுக்கு இது மிகவும் நல்லது. இரத்த அழுத்தம் உள்ளவர்களும் இதை விரும்பிச் சாப்பிடலாம்.

**புடலங்காய்:-** நீர்ச்சத்து அதிகம் கொண்ட காய் இது. சூடான தேகம் கொண்டவர்கள் இதை அதிக அளவில் உணவில் எடுத் துக்கொள்வது நல்லது. தொடர்ந்து புடலங் காய் சாப்பிட்டு வந்தால் தேகம் செழிப் பாகும்.இது எளிதில் ஜீரணமாகி நல்லபசியை உண்டாக்கும். வாதம், பித்தம், கபம் பிரச்சினைகளால் ஏற்படும் திரிதோஷத் தைப் போக்கும் சக்தி இதற்கு உண்டு. வயிற்றுப் பொருமல், வயிற்றுப் பூச்சி பிரச்சினைகளுக்கு இது நல்லது.

**சுரைக்காய் :-** இது உடல் சூட்டைத் தணிக்கக் கூடியது. உடலை வலிமையாக்குதல், தாகத்தை அடக்குதல் போன்றவற்றிலும் உதவு கிறது.



# பிரேஸிலில் வெள்ளம், நிலச்சரிவு காரணமாக உயிரிழந்தோர் தொகை ஆயிரத்தை தாண்டும்

## மீட்புப் பணியாளர்கள் தெரிவிப்பு



(தெரசாபோலிஸ்)

பிரேஸில் நாட்டில் ஏற்பட்ட பெருமழை வெள்ளப்பெருக்கு, கடும் நிலச்சரிவு காரணமாக உயிரிழந்தோர் எண்ணிக்கை ஆயிரத்தைத் தாண்டும் என்று மீட்புப் பணியாளர்கள் தெரிவிக்கின்றனர்.

தெரசாபோலிஸ், நோவா பிரைபர்கோ, பெட்ராபோலிஸ் ஆகிய நகரங்களும் பல கிராமங்களும் இந்த வெள்ளம், நிலச்சரிவில் சிக்கி பெருமளவுக்குச் சேதம் அடைந்துள்ளன.

வெள்ளம், நிலச்சரிவில் இறந்தவர்களுக்கு அஞ்சலி தெரிவிக்கும் வகையில் 3 நாள் அரசுமுறை துக்கம் கடைப்பிடிக்கப்படும் என்று பிரேஸிலின் புதிய பெண் ஜனாதிபதி தில்மா ரூசெஃப் கடந்த 15 ஆம் திகதி அறிவித்தார்.

இந் நாட்களில் விருந்து, கேளிக்கைகள் இடம்பெறாது. தேசியக் கொடி அரைக்கம்பத்தில் பறக்க விடப்படும். நாட்டு மக்கள் அனைவரும் தேசியத் துயர் களைய தங்களாலான உதவிகளைத் திரட்டித் தருவார் கள்.

இந்தச் சேதம் ரியோடி ஜெனிரோ நகரில் தான் அதி கம் பாதிப்பை ஏற்படுத்தியிருக் கிறது. எனவே அந்த மாநில அரசு வரும் திங்கள் முதல் ஒரு வாரத்துக்குத் தங்களு டைய மாநிலத்தில் அரசு முறை துக்கம் கடைப்பிடிக்கப்படும் என்று அறிவித்திருக்கிறது.

14 ஆயிரம் பேருக்கு உதவி ரியோ நகரிலிருந்து 60 கிலோ மீற்றர் தொலைவில் உள்ள செரானா பகு தியில் சுமார் 14 ஆயிரம் பேருக்கு உணவு, குடி நீர், மருந்து ஆகிய வசதிகளை மீட்பு உதவிக் குழுவினர் செய்து வருகின்றனர்.

கேம்போ கிராண்டி என்ற கிராமத்தில் 2 ஆயிரத்து 500 வீடுகள் இருந்தன. ஆனால் இப்போது ஆள் நடமாட்டம் இருப்பதற்கான அறிகுறிகளே இல்லை.

சடலங்களை எடுத்துச் செல்வதற்காக குளிரூட்டப்பட்ட பெட்டக வசதியுள்ள 4 லொரிகள் தெரசாபோலிஸ் தேவாலயத்துக்கு வெளியே தயாராக நிறுத்தப்பட்டிருக்கின்றன. மழைநீரில் ஊறியும் சேற்றில் புதைந்து அழுகியும் சடலங்கள் மீட்கப்படுவதால் அவற்றை மேலும் கெடாத நிலையில் எடுத்துச் செல்வதற்காக இந்த லொரிகள் தருவிக்கப்பட்டுள்ளன.

ஆனால், மழை வெள்ளத்தால் பல இடங்களில் சாலைகள் அடித்துச் செல்லப்பட்டும் அரித்துச் செல்லப்படும் கடுமையாகச் சேதம் அடைந்துள்ளன.

சில பகுதிகளில் நூறடிக்கும் மேல் சாலைகளே இல்லாமல் மிகப்பெரிய பள்ளங்கள் காணப்படுகின்றன. பிரேஸில் நாடு மலைப்பாங்கான பிரதேசம். இங்கே நிலச்சரிவு என்றால் முதலில் பாதிக்கப்படுவது தரைவழி போக்குவரத்துத்தான் என்பது நினைவுகூரத்தக்கது.

எனவே, நோயாளர் காவுவண்டிகளும் வான்களும் செல்ல முடியாத நிலைமை காணப்படுகிறது. அத்துடன் மழை, பனி காரணமாக அப் பகுதிகளில் கடும் பனி மூட்டம் ஏற்பட்டுள்ளது. எனவே, ஹெலிகொப்டர் போன்ற வான் ஊர்திகளையும் மீட்புப் பணியில் ஈடுபடுத்த முடியாத நிலைமை ஏற்பட்டிருக்கிறது. இந்தக் காரணங்களால் மீட்புப் பணியும் மிகுந்த கால தாமதத்துடன் நடைபெறுகிறது.

இந்த சோகங்களுக்கு நடுவிலும் நெஞ்சைப் பிழியவைக்கும் காட்சி ஒன்று மீட்புப் பணியாளர்களின் கண்களைக் குளமாக்குகிறது. கிறிஸ்டினா மரியா டி சந்தானா என்ற பெண் இந்த வெள்ளத்தில் சிக்கி உயிரிழந்தார். அவருடைய உடலை தெரசாபோலிஸ் நகர கல்லறைத் தோட்டத்தில் புதைத்து விட்டார்கள். அவர் ஆசையாக வளர்த்த நாய் இறுதிச்



சடங்கின் போது கல்லறைத் தோட்டத்திற்கு வந்து அங்கு நடப்பதையெல்லாம் பார்த்துக் கொண்டிருந்தது.

எல்லோரும் வீட்டுக்குத் திரும்பிய போதிலும் அது திரும்பாமல் அந்த இடத்திலேயே படுத்துக் கொண்டது. அந்த நாய் இன்னமும் உணவு உண்ணாமலும் நீர் அருந்தாமலும் இறந்து போன எஜமானி மீண்டும் வரட்டும் என்று கண்ணீரோடு காத்துக் கிடக்கிறது. யாராவது போனால் அவர்கள் தங்கள் எஜமானிதானா என்று பார்த்து விட்டு இல்லையென்று தெரிந்ததும் மீண்டும் தலையைக் கவிழ்த்து படுத்துக் கொள்கிறது. (ஸ்ரீ-2)




# கராச்சி கலவரம்; 32 பேர் உயிரிழப்பு

(கராச்சி)

பாகிஸ்தானில் சிந்து மாநிலத்தில் உள்ள கராச்சியில் முத்தாஹிதா குவாமி கட்சி ஆட்சி நடைபெற்று வருகிறது. அயல் மாநிலமான பலுச்சிஸ்தானில் அவாமி லீக் கட்சி ஆட்சி இடம் பெற்றுவருகிறது. இந்த 2 கட்சிகளுமே ஆளும் பாகிஸ்தான் மக்கள் கட்சி கூட்டணியில் இடம் பெற்று இருந்தன. சமீபத்தில் இரண்டு கட்சிகளும் இந்தக் கூட்டணியில் இருந்து விலகின. பின் முத்தாஹிதா கட்சி மீண்டும் கூட்டணியில் சேர்ந்து கொண்டது.

இவ்விரண்டு கட்சிகளுக்கும் இடையில் கராச்சியில் மோதல் வெடித்தது. இந்த மோதலில் 35 பேர் பலியானார்கள். அவர்களில் ஜியோ டி. வி. நிருபர் வாலிகான் பாபர் என்பவரும் பலியானார். இந்த நிலையில் நிருபர் கொலைக்கான காரணம் குறித்து விசாரிப்பதற்காக நீதிவிசாரணையை அரசாங்கம அறிவித்தது. நிருபர் வாலிகான் துப்பாக்கியால் சுடப்பட்டு கொல்லப்பட்டார். இரு கட்சியினருக்கும் இடையே ஏற்பட்ட மோதலில் அரசியல் கட்சிகளை சேர்ந்தவர்கள் பலியானார்கள் . இந்தக்கலவரம் தொடர்பாக 30 பேர் கைது செய்யப்பட்டுள்ளனர். (ஸ்ரீ-2)

# பதவி விலக மறுக்கும் அதிபருக்கு ஐரோப்பிய யூனியன் தடைவிதிப்பு

பதவி விலக மறுக்கும் ஐவரி கோஸ்ட் ஜனாதிபதி லாரன் பேக்போவுக்கு மேலும் நெருக்கடி கொடுக்கும் விதத்தில் அந்நாட்டு எண்ணெய் நிறுவனங்கள், வங்கிக்கள் மற்றும் துறைமுகங்கள் ஆகியவற்றின் சொத்துக்களை முடக்கும் விதத்தில் ஐரோப்பிய யூனியன் பொருளாதார தடை விதித்துள்ளது.

ஆபிரிக்க நாடான ஐவரி கோஸ்ட்டின் ஜனாதிபதி லாரன் பேக்போ பதவி விலக மறுத்து வருகிறார். இதனால் அவரை பதவி விலக வைப்பதற்கான நெருக்கடி கொடுக்க ஐரோப்பிய யூனியன் தீர்மானித்தது.

இதையடுத்து பேக்போ அவரது மனைவி, அமைச்சர்கள், இராணுவ உயரதிகாரிகள் மற்றும் தளபதிகள், பாதுகாவலர்கள், சில செய்தி பத்திரிகைகளின் ஆசிரியர்கள் உள்ளிட்ட 84 பேரின் சொத்துக்களை முடக்க நேற்று முன்தினம் ஐரோப்பிய யூனியன் உத்தரவிட்டுள்ளது. மேலும் அரசுக்கு சொந்தமான எண்ணெய் சுத்திகரிப்பு ஆலை இறப்பர் தொழிற்துறை, மின் சார உற்பத்தி நிறுவனம், தேசிய செய்தி நிறுவனமான ஆர்.டீ.ஐ ஆகியவற்றின் சொத்துக்க ளையும் ஐரோப்பிய யூனியன் முடக்கியுள் ளது.

இந்நிறுவனங்கள் பேக்போவிடம் சட்ட விரோத அரசுக்கு நிதியுதவி செய்வதால் இவற்றின் சொத்துக்கள் முடக்கப்பட்டதாக ஐரோப்பிய யூனியன் அறிவித்துள்ளது.

அதேநேரம் செனகல் நாட்டில் இயங்கி வரும் மேற்கு ஆபிரிக்காவின் மத்திய வங்கியான பி.சி.இ.ஏ.ஓ.வில் இருந்து பேக்போ தினமும் நிதியுதவி பெற்று வருகிறார்.

இதுகுறித்து பேசிய பேக்போ அரசின் செய்தித் தொடர்பாடல் அகோவுவா டோன் மெல்லோ, மேற்கத்திய நாடுகள் தவறு செய்கின்றன. உலகம் அமெரிக்காவுடனோ, ஐரோப்பாவுடனோ முடிந்து விடப் போவதில்லை.

மேற்கு ஆபிரிக்காவின் 40 சதவீதம் பொருளாதாரம் ஐவரி கோஸ்டை சார்ந்து தான் உள்ளது. அதனால் எங்களை விலக்கினால் பி.சி.இ.ஏ.ஓ. வை இழுத்து மூட வேண்டியதுதான் என்றார். (ஸ்ரீ-2)

# சூடானை பிரிப்பதற்கான வாக்கெடுப்பில் புதிய நாடு உருவாவதற்கு முழு ஆதரவு



(ஜூபா)

ஆபிரிக்காவின் சூடான் நாட்டில் பிரிவினைக்காக நடத்தப்பட்ட பொதுவாக்கெடுப்பு முடிவடைந்தது. இதையடுத்து ஐரோப்பா வாழ் சூடானியர்களிடையே நடத்தப்பட்ட வாக்கெடுப்பு எண்ணிக்கை பற்றிய முடிவு நேற்று முன்தினம் அறிவிக்கப்பட்டது. அதில் ஐரோப்பா வாழ் சூடானியர்கள் பிரிவினைக்கு ஆதரவாக பெரும்பான்மை விகிதத்தில் வாக்களித்திருந்தனர்.

ஆபிரிக்க நாடான சூடானில் ஏற்பட்ட உள்நாட்டு கலவரத்தால் கடந்த 2005 இல் மேற்கொண்ட அமைதி ஒப்பந்தப்படி கடந்த 9 ஆம் திகதி முதல் 15 ஆம் திகதி வரை நாடு இரண்டாகப் பிரிவது குறித்த பிரிவினைக்கான பொதுவாக்கெடுப்பு நடந்து முடிந்தது.

இதில் உள்நாடு மற்றும் ஐரோப்பா வாழ் சூடானியர்கள் கலந்து கொண்டு வாக்களித்தனர். கடந்த 16 ஆம் திகதி வாக்குப்பதிவு முடிவடைந்ததை அடுத்து முதல் நடவடிக்கையாக ஐரோப்பா வாழ் சூடானியர்களின் வாக்குகள் எண்ணப்பட்டு நேற்று முன்தினம் முடிவுகள் அறிவிக்கப் பட்டன.

அதன்படி பதிவான 640 வாக்குகளில் 97 சதவீதம் வாக்குகள் புதிய நாடு உருவாவதற்கு ஆதரவாக அளிக்கப்பட்டுள்ளன. இதையடுத்து நூற்றுக்கணக்கான சூடானியர்கள் இந்த வெற்றியை ஆரவாரத்துடனும் மகிழ்ச்சியுடனும் கொண்டாடினர்.

வாக்கெடுப்பின் முழு முடிவுகளும் பெப்ரவரி 6 அல்லது 14 ஆம் திகதி அறிவிக்கப்படும் என்று எதிர்பார்க்கப்படுகிறது. (ஸ்ரீ-2)

# இன்னும் 3 தினங்களுக்குள் புதிய அரசை நிறுவ வேண்டும்

## நேபாள ஜனாதிபதி உத்தரவு

(காத்மண்டு)

தேசியக் கட்சிக்குள் கருத்தொற்றுமையின் அடிப்படையில் எதிர்வரும் 21 ஆம் திகதிக்குள் புதிய அரசு அமைக்க வேண்டும் என்று நேபாள ஜனாதிபதி ராம்பரன் யாதவ் கேட்டுக் கொண்டுள்ளார். நேபாளத்தில் கடந்த ஜூன் 30 இல் அப்போதைய பிரதமர் மாதவ்குமார் நேபாள் தனது பதவியை இராஜினாமா செய்தார். தொடர்ந்து அமைக்கப்பட்ட தற்காலிக அரசின் பிரதமராக நேபாள் பொறுப் பேற்றுக் கொண்டார்.

இதையடுத்து நாட்டின் இரண்டாவது பெரிய கட்சியான நேபாளி காங்கிரஸ், பிரதமர் வேட்பாளராக ராம்சந்திர போதயாளை நிறுத்தியது. தொடர்ந்து பிரதமரைத் தேர்ந்தெடுக்க இதுவரை 16 முறை வாக்கெடுப்பு நடந்தும் ஒரு முடிவுக்கு வர இயலவில்லை.

ஆளும் கூட்டணியில் அங்கம் வகித்து வரும் நேபாள கம்யூனிஸ்ட் கட்சி (யு.எம்.எல்) மற்றும் பிரதான எதிர்க்கட்சியான பிரசண்டா தலைமையிலான ஐக்கிய நேபாள கம்யூனிஸ்ட் கட்சி(மாவோயிஸ்ட்) இரண்டும் போதயாளுக்கு எதிராக வாக்களித்து வந்தன.

இதனால் கட்சிகளுக்கிடையில் கருத்தொற்றுமை ஏற்படுவதற்காக போதயாளுக்கு போட்டியில் இருந்து விலக்குவதாக நேபாளி காங்கிரஸ் கட்சி கடந்த வாரம் அறிவித்தது.


இந்நிலையில் கடந்த ஆறு மாதங்களுக்கும் மேலாக நாட்டில் நீடித்து வரும் அரசியல் நெருக்கடியை தீர்க்க அனைத்து கட்சிகளும் ஒருமித்த கருத்துடன் எதிர்வரும் 21 ஆம் திகதிக்குள் புதிய அரசை நிறுவும்படி ஜனாதிபதி ராம்பரன் யாதவ் கேட்டுக் கொண்டுள்ளார்.

இதற்கிடையில் நேபாள அரசுக்கும் ஆயுதம் ஏந்திய மாவோயிஸ்டுகளுக்கும் இடையில் சமாதான முயற்சியை ஏற்படுத்துவதற்காக தலைநகர் காத்மண்டுவில் ஐ.நா. கண்காணிப்புக்குழு இயங்கி வருகிறது.

இக்குழுவின் கண்காணிப்பில் முன்னாள் மாவோயிஸ்டுகள் 19 ஆயிரம் பேர் உள்ளனர். இவர்களின் எதிர்காலத்தை தீர்மானிப்பதில் அரசியல் கட்சிகளிடையே வேறுபாடுகள் நிலவி வந்தன. இந்நிலையில் கடந்த 16 ஆம் திகதி பிரதமர் யாதவ் குமார் நேபாள் மற்றும் பிரசண்டாவுக்கிடையில் கண்காணிப்புக்கான ஆறு பேர் கொண்ட குழுவை நியமிப்பது தொடர்பாக ஓர் உடன்படிக்கை கையெழுத்தானது. (ஸ்ரீ-2)

# சபரிமலை பக்தர்கள் 106 பேரை பலிகொண்ட விபத்து எப்படி நடந்தது?

## முதற்கட்ட விசாரணையில் தகவல்



சபரிமலை பக்தர்கள் 106 பேரைப் பலி கொண்ட விபத்து நடந்தது எப்படி? என்பது குறித்து திடுக்கிடும் தகவல்கள் வெளியாகியுள்ளன.சபரிமலை அருகே நடந்த விபத்திலும் கூட்ட நெரிசலிலும் சிக்கி 106 பக்தர்கள் பலியானார்கள். அவர்களில் 39 பேர் தமிழ் நாட்டை சேர்ந்தவர்கள்.

## பாரதச் செய்திகள்

கடந்த 14 ஆம் திகதி அன்று மாலை 6 மணிக்கு சபரிமலையில் மகரஜோதி தரிசனம் நடைபெற்றது. இவ்வாண்டு பொங்கல் பண்டிகைக்கு முந்தைய நாளில் மகரஜோதி தரிசன வழிபாடு நடைபெற்றது. மறுநாள் பொங்கல் என்பதால் தரிசனம் முடிந்ததும் பொங்கல் பண்டிகையை கொண்டாடுவதற்காக பக்தர்கள் உற்சாகத்துடன் திரும்பத் தொடங்கினார்கள்.

சபரிமலைக்கு செல்வதற்கு 3 வழிகள் இருந்தாலும் புல்மேடு பாதையில் 7 கிலே மீற்றர் தூரம் சென்றாலே சன்னி தானத்தை அடைந்து விட லாம். எனவே சீக்கிரமாக வீடு திரும்புவதற்காக இந்த பாதையை பெரும்பாலான பக்தர்கள் தேர்ந்து எடுத்தனர். ஆனாலும் இந்தப் பாதை போதிய பாதுகாப்பு இல்லாத ஆபத்து நிறைந்த மிக குறுகலான பாதையாகும். 50 ஆயிரம் பேர் மட்டுமே செல்லக் கூடிய அந்தப் பாதையில் ஒரே நேரத்தில் ஏறத்தாழ 3 இலட்சம் பக்தர்கள் வந்து கொண்டு இருந்தனர்.

சபரிமலைக்கு வரும் பக்தர்கள் புல்மேடு வரை வாகனங்களில் செல்ல முடியாது. எனவே, தமிழக எல்லைப்பகுதி நகரங்களான வண்டிப் பெரியார் , குமுளி ஆகிய இடங்களில் தங்கள் வாகனங்களை நிறுத்தி விட்டு வருவது வழக்கம். புல்மேட்டில் இருந்து தங்கள் வாகனங்களுக்கு செல்ல வேண்டுமானாலும் பஸ்ஸில் செல்ல வேண்டுமானாலும் அவர்கள் வண்டிப் பெரியார் , குமுளி நகரங்களுக்குத்தான் செல்ல வேண்டும்.

அந்தப் பாதை வனத்து றையின் கட்டுப்பாட்டில் உள்ளதால் லொரி, பஸ் போன்ற வாகனங்களை அனுமதிப்பது இல்லை. எனவே ஜீப் மற்றும் ஆட் டோ போன்ற வாகனங்கள் மூலம் புல்மேட்டில் இருந்து வண்டிப் பெரியார் , குமுளிக்கு பக்தர்கள் சென்று கொண்டு இருந்தனர்.

அந்த வாகனங்களின் சாரதிகள் போட்டி போட்டுக் கொண்டு அளவுக்கு அதிகமானவர்களை ஏற்றிச் சென்று கொண்டு இருந்தனர். அப்படி ஒரு ஜீப்பில் ஏராளமான பக்தர்களை ஏற்றிக் கொண்டு இருந்தனர். ஜீப்பின் மீது சிலர் ஏறி அமர்ந்து இருந்தனர். பின்னால் இருந்த ஆட்டோக்களின் சாரதிகள் ஆத்திரத்தில் அந்த ஜீப்பை தள்ளிவிட்டதாகக் கூறப்படுகிறது.


இதனால் நிலை தடுமாறிய அந்த ஜீப் விபத்துக்குள்ளாகி பக்கத்தில் இருந்த பள்ளத்தில் கவிழ்ந்தது. இதில் ஜீப்பில் இருந்தவர்களும் , ஜீப் ஏறி நசுக்கியதால் சாலையில் நடந்து சென்று கொண்டு இருந்தவர்களும் நசுங்கி இறந்தனர்.


அவர்கள் எழுப்பிய மரண ஓலத்தினால் அந்தப் பகுதியில் பீதி ஏற்பட்டது. இதனால் பக்தர்கள் சிதறி ஓடத் தொடங்கினார்கள். இரவு 8.15 மணிக்கு இந்த விபத்து நடந்ததால் அங்கு போதிய வெளிச்சமும் இல்லை. இதனால் என்ன நடந்தது என்று தெரியாமலேயே ஏதோ பெரிய அளவில் அசம்பாவிதம் நடந்து விட்டதாக பக்தர்கள் முண்டியடித்தபடி ஓடியதால் கடுமையான நெரிசல் ஏற்பட்டது.

அத்துடன் வீதியின் இரு புறங்களிலும் சிறிய கடைகளை நடத்தி வந்தவர்களும் தங்களையும் தங்கள் பொருட்களையும் பாதுகாத்துக் கொள்வதற்காக, தங்கள் மீது விழுந்து விடாமல் இருப்பதற்காக பக்தர்களை தாக்கத் தொடங்கினார்கள்.

இதனால் ஒருவர் மீது இடித்துத்தள்ளியபடி ஓடியதால் பலர் நெரிசலில் மிதிபட்டு உடல் நசுங்கினார்கள். பாதுகாப்புக்கு தேவையான பொலிஸாரோ, மருத்துவ சிகிச்சை அளிக்கவோ அந்தப் பாதையில் எந்த வசதியும் செய்து கொடுக்க முடியவில்லை.

மேலும் விபத்து நடந்தவுடன் தாங்கள் மாட்டிக் கொள்வோமோ என்று பயந்து ஜீப் மற்றும் ஆட்டோ சாரதிகளும் தங்கள் வாகனங்களை எடுத்துக் கொண்டு வேகமாகச் சென்று விட்டனர். இதனால் நெரிசலில் சிக்கி இறந்தவர்களையும் படுகாயம் அடைந்தவர்களையும் உடனடியாக வைத்தியசாலைக்குக் கொண்டு செல்லவும் உடனடி வசதியில்லை.





வனப்பகுதி என்பதால் அந்த இடத்தில் செல்போன்களும் செயற்படவில்லை. இதனால் இந்த கோர விபத்து நடந்து ஏறத்தாழ 2 மணி நேரத்துக்குப் பின் இரவு 10.15 மணி அளவில்தான் பக்கத்து நகரங்களான வண்டிப் பெரியார் , குமுளி நகரங்களுக்கு அதுபற்றிய தகவல் தெரியவந்துள்ளது.

அதன் பின்னர்தான் அங்கிருந்து அம்புலஸ், லொறி போன்ற வாகனங்கள் வரவழைக்கப்பட்டு காயம் அடைந்தவர்களை வைத்தியசாலைகளுக்கு ஏற்றிச் செல்ல முடிந்தது. இதன் காரணமாக உரிய சிகிச்சை இல்லாமல் வாகனங்களில் கொண்டு செல்லப்பட்ட பலர் வழி யிலேயே பரிதாபமாக உயிர் இழந்துள்ளனர்.

விபத்தை நேரில் பார்த்தவர்களும் விபத்தில் சிக்கி காயம் அடைந்தவர்களும் விபத்துக்கான காரணம் குறித்து இந்த தகவல்களைத் தெரிவித்துள்ளனர் என்றாலும் இந்த விபத்துக்கு மாறுபட்ட காரணங்களும் கூறப்படுகின்றன.

இந்த நிலையில் இந்தத் துயர விபத்து குறித்து விசாரணை நடத்தும்படி கேரள முதல் மந்திரி அச்சுதானந்தன் உத்தரவிட்டு இருந்தார். கேரள குற்றப்பிரிவு பொலிஸார் மற்றும் தடயவியல் நிபுணர்கள் விபத்து நடந்த இடத்துக்குச் சென்று விசாரணை நடத்தி வருகிறார்கள். (ஸ்ரீ-2)

## கோல்டன் குளோப் விருதை தவறவிட்டார் ரஹ்மான்

சிறந்த இசைக்காக வழங்கப்படும் கோல்டன் குலோப் விருதை இசையமைப்பாளர் ரஹ்மான் தவறவிட்டார். இரு தினங்களுக்கு முன் அமெரிக்காவின் கிரிக்ட்டிக்ஸ் சாய்ஸ் விருதை ஐ ரைஸ் என்ற திரைப்படத்துக்காக தட்டிச் சென்றார்.

ரஹ்மான் விருது பெற்ற கையுடன் லொஸ்ஏஞ்சல்சில் நடைபெற்ற கோல்டன் குளோப் விருது விழாவில் கலந்து கொண்டார். ஸ்லம்டாக் மில்லினர் திரைப்பட இயக்குனர் டேனி பாயில் இயக்கத்தில் வெளியாகியிருந்த 127 ஹவர்ஸ் என்ற படத் திற்கு ஏ. ஆர்.ரஹ்மான் இசையமைத்திருந்தார். இந்த திரைப்படம் கோல்டன் குளோப் விருதுக்கான போட்டியில் இடம்பெற்றிருந்தது.

ஆனால் தி சோசியல் நெட்வேர்க் என்ற படத்திற்கு இசையமைத்த டிரண்ட் ரென்சார், அடிகஸ் ராஸ் ஜோடிக்கு இந்த விருது அளிக்கப்பட்டது. (ஸ்ரீ-2)



உலக நன்மைக்காக இராமேஸ்வரம் இராமநாதசுவாமி கோயிலில் சுவாமிக்கு கங்காபிஷேகம் செய்வதற்கு புனித நீர்க்கலசங்களை தலையில் சுமந்தபடி ஊர்வலமாக சென்ற துறவிகளை படத்தில் காணலாம்.

## இந்திய மாலுமிகள் 14 பேருக்கு ஒருவருட சிறைத்தண்டனை

சோமாலியா நாட்டிலிருந்து சட்டவிரோதமாக நிலக்கரி கடத்தியதாக இந்தியாவைச் சேர்ந்த 14 மாலுமிகளுக்கு ஓராண்டு சிறைத் தண்டனை விதிக்கப்பட்டது. சிறைத்தண்டனையிலிருந்து தப்பிக்க வேண்டுமானால் சோமாலியா அரசுக்கு சுமார் 4 இலட்சத்து 60 ஆயிரம் ரூபாவை அபராதமாக செலுத்த வேண்டும் எனக் கூறப்பட்டது.

சோமாலியா நாட்டில் அல்கொய்தா தீவிரவாதிகளுடன் தொடர்புள்ள ஷெபாப் என்ற தீவிரவாதிகள் நாட்டின் சில பகுதிகளைத் தங்களுடைய கட்டுப்பாட்டில் வைத்துள்ளனர்.

அவ்விடத்திலிருந்துதான் இந்த நிலக்கரி கொண்டுவந்து கப்பலில் ஏற்றப்பட்டதாகவும் அரசின் கட்டுப்பாட்டில் இல்லாத இடத்திலிருந்து நிலக்கரி கொண்டுவரப்பபட்டதால் நீதிமன்றம் தண்டிக்க உரிமையில்லை என்று வழக்கறிஞர் ஹஸன் அப்துல்லா பரயாரி வாதாடியுள்ளார்.

அனுமதியில்லாமலும் உரிய கட்டணம், வரிகள் செலுத்தாமலும் நிலக்கரி எடுத்துச் செல்ல உரிமை கிடையாது என்று நீதிபதி ஹசி எல்மி நூர் தனது தீர்ப்பில் குறிப்பிட்டார்.

14 இந்திய மாலுமிகளுடன் ஒரு சோமாலியப் பெண்ணுக்கும் தண்டனை விதிக்கப்பட்டது. அவர்தான் அந்த நிலக்கரிக்காகப் பணம் பெற்றுக்கொண்டார். (ஸ்ரீ-2)



மங்களூரில் நடைபெற்ற விழாவில் விருதுபெற வந்த பாடகர் கே.ஜே.ஜேசுதாசை அவரது ரசிகர்கள் பல்லக்கில் அமர வைத்து தூக்கிச் செல்வதைப் படத்தில் காணலாம்.

சரியாகத் திட்டமிட்டால் முதல் முயற்சியிலேயே பாதித் தூரத்தை நிச்சயம் அடைந்து விடலாம்.

– என்.ஹில்

வலம்புரி
T.P. 021 567 1530
Web: www.valampurii.com
e-mail: editor@valampurii.com

# தமிழ் அரசியல்வாதிகளிடம் ஓர் அன்பான வேண்டுதல்!

இனப்பிரச்சினைக்குத் தீர்வாக பதின்மூன்றாவது சரத்திற்கு அப்பால் கூடிய அதிகாரங்களை வழங்கத் தான் தயாராக இருப்பதாக ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷ தெரிவித்துள்ளார்.

அதேநேரம், மாகாணங்களுக்கு பொலிஸ் அதிகாரம் வழங்கப்படமாட்டாது எனவும் அவர் கூறியுள்ளார்.

ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷ போருக்குப் பின்பு இவ்வாறானதொரு அறிவித்தலை ஒரு போதும் தெரிவித்ததாகத் தெரியவில்லை.

இனப்பிரச்சினை என்பது அபிவிருத்தியை ஏற்படுத்துவதன் மூலமாக இல்லாதொழிக்கப் படும் என்பதே அவரின் கோட்பாடாக இருந்தது. அதனையே அவர் பல தடவைகள் எடுத்துக் கூறியிருந்தார்.

இந்திய வெளியுறவு அமைச்சர் எஸ்.எம். கிருஷ்ணா யாழ்ப்பாணத்திற்கு வருகை தந்து இந்திய உதவித் தூதுவராலயத்தை யாழ்ப்பாணத்தில் திறந்து வைத்து உரையாற்றுகையில், இனப்பிரச்சினைக்கான தீர்வின் ஆரம்பப் புள்ளியாக 13ஆவது திருத்தச்சட்டமூலம் அமைய வேண்டுமெனக் கூறியிருந்தார்.

இவ்வாறு இந்திய அமைச்சர் எஸ்.எம். கிருஷ்ணா கூறியபோது,மேடையில் இருந்த அமைச்சர் பேராசிரியர் ஜி.எல்.பீரிஸின் முகம் கறுத்துக் கொண்டது.

ஆக, இனப்பிரச்சினைக்கான தீர்வு 13ஆவது திருத்தச் சட்டமூலத்தின் அடிப்படையில் அமைவது கூட அவருக்கு – அரசுக்கு உடன்பாடாக இருக்கவில்லை என்பது அதிலிருந்து தெளிவாகியது.

இவற்றின் மத்தியில் அண்மையில் தமிழகத்திற்குச் சென்றிருந்த இந்திய காங்கிரஸ் கட்சியின் பொதுச் செயலாளர் ராகுல் காந்தி, இலங்கைத் தமிழர்களின் நிலைமை குறித்து கவலை வெளியிட்டுள்ளதுடன்,

இனப்பிரச்சினைக்கு தீர்வு காணும் விடயத்தில் தான் நேரடியாகத் தலையிடுவேன் எனப் பகிரங்கமாக உறுதியளித்தார்.

அவரின் உறுதியளிப்பை சாதாரணமாகக் கருத முடியாதென இப்பகுதியில் நாங்கள் குறிப்பிட்டிருந்தோம்.

அதற்கு சில நாட்களுக்குப் பின்னர் தென் பகுதி நாளிதழ் ஒன்றும் ராகுல் காந்தியின் கூற்றை இலங்கை அரசு உதாசீனம் செய்யக் கூடாது என ஆலோசனை கூறியிருந்தது.

இந்நிலையில், 13ஆவது திருத்தச்சட்ட மூலத்திற்கு அப்பால், கூடிய அதிகாரம் வழங்கப்படும் என ஜனாதிபதி கூறியுள்ளமையும் சாதாரணமான விடயமல்ல.

எனவே தமிழ் அரசியல் தரப்புக்கள் மிகவும் நிதானமாகவும், புத்திசாலித்தனமாகவும் ஒற்றுமையாகவும் இந்த விடயத்தைக் கையாள வேண்டும்.

மருந்துக்கேனும் இந்திய உதவியை மறந்து விடாதீர்கள். அங்குதான் – சூக்குமம் உள்ளது.

# வெள்ளப் பாதிப்பு உயிரிழந்தோர் 39 பேராக உயர்ந்தது

இலங்கையில் அண்மையில் ஏற்பட்ட வெள்ளம் காரணமாக உயிரிழந்தோரின் எண்ணிக்கை 39ஆக உயர்ந்துள்ளதாக அனர்த்த முகாமைத்துவ நிலையம் தெரிவித்துள்ளது. மட்டக்களப்பு மாவட்டத்திலேயே கூடுதலான உயிரிழப்புகள் பதிவாகியுள்ளன.

மட்டக்களப்பு மாவட்டத்தில் 18 பேரும் அம்பாறை மாவட்டத்தில் 10 பேரும் உயிரிழந்துள்ள நிலையில் இம்மாவட்டங்களில் 4 பேர் காணாமல்போயுள்ளதாகவும் கூறப்படுகிறது.

மட்டக்களப்பு –திருகோணமலை வீதியில் மன்னம்பிட்டியில் இதுவரை முற்றாக வெள்ளம் குறையாத காரணத்தினால் கனரக வாகனங்கள் மட்டுமே அவ்வீதியால் பயணிக்கின்றன. புதிதாக புனரமைக்கப்பட்டு கார்பட் வீதியாக மாற்றப்பட்ட அக்கரைப்பற்றுதிருக்கொண்டியடிமடு வீதிக்கு சேதம் ஏற்படாத போதிலும், வீதியின் இரு புறமும் வெள்ளத்தால் அரிக்கப்பட்டுள்ளதாக தெரிவிக்கப் பட்டுள்ளதுடன் 18 கிலோ மீற்றர் நீளமான அம்பிளான்துறை தாந்தாமலை வீதியில் 27 இடங்களில் சேதம் ஏற்பட்டுள்ளதாகவும் குறிப்பிடப்பட்டுள்ளது.

அதேவேளை ஏற்பட்ட வெள்ளப் பெருக்கினால் இவ்வாண்டில் நெல் அறுவடை நான்கு லட்சம் மெற்றிக் தொன்னால் வீழ்ச்சி அடையும் என்று அரசாங்கத்தின் கணிப்பீடுகள் தெரிவித்துள்ளன.

ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷ தலைமையில் உணவுப் பாதுகாப்பு மற்றும் வாழ்க்கைச் செலவு தொடர்பான குழுவின் கூட்டம் கடந்த வாரம் நடைபெற்ற போதே இத் தகவல் வெளியிடப்பட்டது.

2010 /11 பெரும்போகத்தில் அதிக அறுவடை எதிர்பார்க்கப்பட்ட மட்டக்களப்பு,திருகோணமலை ,அம்பாறை , அனுராதபுரம், பொலநறுவை, வவுனியா மாவட்டங்களில் 275 ஆயிரம் ஏக்கர் நிலப்பரப்பில் பயிர்ச்செய்கை மேற்கொள்ளப்பட்டிருந்தது.

இந்நிலையில் 88,500 ஏக்கரில் பயிரிடப்பட்டிருந்த பயிர்கள் வெள்ளத்தில் மூழ்கியுள்ளதாக தெரிவிக்கப்பட்டுள்ளது.

மட்டக்களப்பில் 49 ஆயிரம் ஏக்கரிலும் அனுராதபுரத்தில் 14 ஆயிரத்து 400 ஏக்கரிலும் ,அம்பாறையில் 11 ஆயிரத்து500 ஏக்கரிலும்,திருகோணமலையில் 7 ஆயிரத்து 400 ஏக்கரிலும் ,பொலநறுவையில் 6 ஆயிரம் ஏக்கரிலும் பயிர்கள் வெள்ளத்தில் மூழ்கியுள்ளன. (ந–5)

# வேட்புமனுத் தாக்கல் கால நீடிப்பில் முடிவில்லை

(கொழும்பு)

வெள்ள அனர்த்தம் காரணமாக கிழக்கு மாகாண உள்ளூராட்சி மன்றங்களுக்கான தேர்தல் வேட்புமனு தாக்கலுக்கான கால நீடிப்பு குறித்து இதுவரை தீர்மானிக்கப்படவில்லை என தேர்தல் திணைக்கள வட்டாரங்கள் தெரிவித்தன.

நேற்று திங்கட்கிழமை தேர்தல் திணைக்களத்தில் தேர்தல் ஆணையாளர் தயானந்த திஸாநாயக்க தலைமையில் உள்ளூராட்சி மன்றங்களுக்கான தேர்தல் வேட்புமனு தாக்கல் தொடர்பான விசேட கூட்டம் இடம்பெற்றது.

இக்கூட்டத்தில் பிரதி தேர்தல் ஆணையாளர், மாவட்ட தெரிவத்தாட்சி அலுவலகர்கள் ஆகியோர் கலந்துகொண்டனர்.

இந்த விசேட கூட்டத்தில் கிழக்கு மாகாண உள்ளூராட்சி மன்றங்களுக்கான தேர்தல் வேட்புமனு தாக்கலுக்கான கால நீடிப்பு குறித்து எதுவும் கலந்துரையாடப்படவில்லை என தேர்தல் திணைக்கள வட்டாரங்கள் தெரிவித்தன.

உள்ளூராட்சி மன்றங்களுக்கான தேர்தல் வேட்புமனுத் தாக்கல் தொடர்பில் மாத்திரமே நேற்று தேர்தல் திணைக்களத்தில் இடம்பெற்ற விசேட கூட்டத்தில் ஆராயப்பட்டதாக தேர்தல் திணைக்கள தகவல்கள் தெரிவித்தன.

வெள்ள அனர்த்தம் காரணமாக கிழக்கு மாகாண உள்ளூராட்சி மன்றங்களுக்கான தேர்தல் வேட்புமனு தாக்கலுக்கான காலத்தை நீடிக்குமாறு சில கட்சிகள்தேர்தல்ஆணையாளரிடம்வேண்டுகோள் விடுத்திருந்தமை குறிப்பிடத்தக்கது. (ந–5)

# வெள்ளத்தால் ஏற்பட்ட பாதிப்பு ஐ.நா.உயர் அதிகாரி வருகை

வெள்ளத்தினால் பாதிக்கப்பட்ட மக்களைப் பார்வையிடுவதற்காக ஐக்கிய நாடுகளின் மனித உரிமை விவகாரங்களுக்கான பிரதிச் செயலாளரும் அவசர கால நிவாரணப் பிரதி இணைப்பாளருமான கதரின் பிராக் 3 நாள் உத்தியோகபூர்வ விஜயமொன்றை மேற்கொண்டு இலங்கை வரவுள்ளார்.

எதிர்வரும் 19ஆம் திகதி இலங்கைக்கு வரவுள்ள அவர், 21ஆம் திகதி வரை இலங்கையில் தங்கியிருப்பாரென ஐக்கிய நாடுகள் அலுவலகம் தெரிவித்துள்ளது.

இலங்கையில் தேவைப்படும் மனித உரிமை நடவடிக்கைகளுக்கும் பலவீனமான மக்களுக்கு ஐ.நாவின் உதவிப் பொருட்களை வழங்குவதற்கும் கதரின் பிராக்கின் இலங்கைக்கான விஜயம் அமைவதாக ஐக்கிய நாடுகள் சபை விடுத்துள்ள அறிக்கையில் சுட்டிக்காட்டப் பட்டுள்ளது.

இவரது விஜயத்தின் போது உதவி முகவர் நிலையங்கள், நன்கொடையாளர்கள், அரசாங்கப் பிரதிநிதிகளையும் சந்திப்பதற்குத் திட்டமிடப்பட்டுள்ளது.

இலங்கையில் வெள்ளத்தால் பாதிக்கப்பட்டோருக்கான அவசர நிவாரண நிதியமொன்றும் கதரின் பிராக்கின் விஜயத்தையொட்டி ஆரம்பிக்கப்படவுள்ளது.

அவசரகால நிவாரணப் பிரதி இணைப்பாளர் கதரின் பிராக்கின் இலங்கைக்கான முதலாவது விஜயம் இதுவென்பது குறிப்பிடத்தக்கது. (ந–5)

# திறந்த பல்கலைக்கழக யாழ்.பிராந்தியத்தில்

(யாழ்ப்பாணம்)

இலங்கை திறந்த பல்கலைக்கழகத்தின் யாழ் பிராந்திய நிலையத்தினால், 2011/2012 கல்வியாண்டிற்கான எந்திரவியல் பட்டக்கற்கைநெறிக்கு விண்ணப்பம் கோரப்பட்டுள்ளது.

இதற்கமைய விண்ணப்பதாரிகள் எதிர்வரும் பெப்ரவரி மாதம் 26ஆம் திகதிக்கு முன் யாழ்.பிராந்திய நிலையத்தில் விண்ணப்பப் படிவங்களை பெற்று விண்ணப்பிக்கலாம் என யாழ்.பிராந்திய நிலைய இணைப்பாளர் அறிவித்துள்ளார். (ந–2,4)

# அரிவாட்டாய நாயனார் குருபூசைதினம்

" எஞ்சாத வாட்டாயன் அடியார்க்கும் அடியேன்
வள்ளற் பிராற்கு அமுதேந்தி வருவோனுகலுமிங்கே
வெள்ளச் சடையாய் அமுது செய்யா விடில் என் தலையைத்
தள்ளத் தகுமென்று வாட்பூட்டிய தடங்கையினன் காண்
அள்ளற் பழனகண மங்கலத்து அரிவாட்டாயனே "

திருத்தொண்டர் திருவந்தாதி

அரிவாளினால் நெல்லறுத்து இறைவர்க்குத் தினசரி செந்நெல் திருவமுது செய்து தொண்டு புரிந்ததனாலும் திருத்தொண்டுக்குத் தடை நேர்ந்த போது அரிவாளினால் கழுத்தை அரிந்ததனாலும், பிறவிப் பெரும் பிணியை மாற்றி சிவபதஞ் சேர்வதற்கு அரிவாளே காரணமாக இருந்ததனாலும் அரிவாட்ட நாயனார் எனப் பெயர் பெற்று நாயனாரும் அவரது மனைவியும் சிவ லோகத்தில் பேரின்பந் துய்த்திருக்கும் பேறுபெற்ற நாயனார்களை நாமும் வணங்கி பிறவி எனும் பிணியைப் போக்கி இறை இன்பம் பெறுவோம்.

க.கு.க.சிவபாலன்

# சுவாமி விவேகானந்தரின் அறிவுரைகள்



மகத்தான பணிகளை ஆற்றவேண்டுமாயின் நீண்ட காலத்திற்கு இடையறாத முயற்சி பேரளவிற்குத் தேவைப் படுகிறது. இந்தப்பணியில் ஒருசிலர் தோல்வி காணலாம். அதற்காக நாம் மனம் உளைய வேண்டியதில்லை. ஒரு பெரிய காரியத்தைச் சாதிக்கும்போது நடுநடுவே பலர் வீழ்ச்சியுறுவதும் இடஞ்சல்கள் ஏற்படுவதும் சகஜமே. பெரும்பெரும்துன்பங்கள் தோன்றலாம். மனிதனின் தன்னலமும் மற்ற பிற தீமைப்பேய்களும் எழுந்து தலைவிரித்து ஆடலாம். இவற்றையெல்லாம் ஆன்மீகம் எனும் பெரும் நெருப்பிலிட்டுப் பொசுக்க வேண்டும். இறைவனை நோக்கிச் செல்லும் பாதை மிகவும் செங்குத்தானது. கரடுமுரடானது. பலர் இப்பாதையில் சென்றிருப்பதுதான் வியப்பிற்குரியது. இதில் சென்ற பலர் தோல்வி கண்டது வியப்பில்லை. ஆயிரம் இன்னல்கள் வந்து மோதினாலும் அவற்றின் நடுவே பண்பாட்டை நிறுவ வேண்டும். நாகரிகத்தின் வரலாறு யாதெனில் தெய்வம் மனிதனாகி வந்தது என்ற முன்னேற்றத்தின் வளர்ச்சியேயாகும்.

# இந்தியாவின் நிவாரண உதவிகள் தொடரும்

## இந்திய உயர்ஸ்தானிகர் தெரிவிப்பு



(கொழும்பு)

வெள்ளத்தால் பாதிக்கப்பட்ட மக்களுக்கான இந்தியாவின் நிவாரண உதவி தொடரும் என இலங்கைக்கான இந்திய உயர்ஸ்தானிகர் அசோக் கே காந்தா தெரிவித்துள்ளார்.

அதன்படி இந்தியாவில் இருந்து மேலும் இரண்டு கப்பல்களில் நிவாரணப்பொருட்கள் கிழக்கு மாகாணத்தில் வெள்ளத்தால் பாதிக்கப்பட்ட மக்களுக்கு விநியோகிக்க அனுப்பி வைக்கப்படுவதாக அவர் குறிப்பிட்டார்.

முதலாவது தொகுதி நிவாரணப் பொருட்கள் அண்மையில் விமானத்தின் மூலம் அனுப்பிவைக்கப்பட்டதாகவும் விமானத்தில் கொண்டுவரப்பட்ட நிவாரணப் பொருட்களை அரசாங்கத்திடம் ஒப்படைக்கும் போது இந்திய உயர்ஸ்தானிகர் இந்தத் தகவலைத் தெரிவித்துள்ளார். (ஸ்ரீ-2)

# சட்டவிரோதமாக கஞ்சா கடத்திய இருவருக்கு விளக்கமறியல்

இந்தியாவில் இருந்து சட்டவிரோதமான முறையில் படகு ஒன்றின் மூலம் மன்னாருக்கு சுமார் 26 கிலோகிராம் கொண்ட கஞ்சாவினை கடத்திய இருவரை எதிர்வரும் 28 ஆம் திகதி வரை விளக்கமறியலில் வைக்குமாறு மன்னார் மாவட்ட நீதவான் கே. ஜீவராணி உத்தரவிட்டுள்ளார்.

கடந்த 7 ஆம் திகதி அதிகாலை 2 மணியளவில் மன்னார் சௌத்பார் கடற்கரையை நோக்கி வந்து கொண்டிருந்த படகினை அப்பகுதியில் கடமையில் இருந்த கடற்படையினர் நிறுத்தி சோதனையிட்டனர். குறித்த படகின் முன்புறத்தில் மறைத்து வைக்கப்பட்டிருந்த 26 கிலோ நிறை கொண்ட கஞ்சாப் பொதியினை கடற்படையினர் கைப் பற்றியுள்ளனர். அத்துடன் படகில் பயணித்த இரண்டு நபர்களையும் கைது செய்தனர்.

மன்னார் பொலிஸாரிடம் ஒப்படைக்கப்பட்ட இரண்டு சந்தேக நபர்களையும் மன்னார் பொலிஸ் நிலையத்தில் 7 நாட்கள் தடுத்து வைத்து விசாரணைகளுக்கு உட்படுத்தப்பட்டனர்.

இதனையடுத்து இரண்டு சந்தேக நபர்களையும் நீதிமன்றில் ஆஜர்படுத்திய போது எதிர் வரும் 28 ஆம் திகதி வரை விளக்கமறியலில் வைக்குமாறு உத்தரவிடப்பட்டுள்ளது. (ஸ்ரீ-2)

# வெள்ளத்தினால் பாதிக்கப்பட்ட விவசாயிகளுக்கு நிவாரணம்

(கொழும்பு)

அம்பாறை மாவட்டத்தில் தொடர்ந்து பெய்த அடை மழையினால் பாதிக்கப்பட்ட மூவினங்கள் வாழும் பொத்துவில்,கோமாரி, உகண ஆகிய பிரதேச கமநல சேவை மத்திய நிலையங்களுக்கு உட்பட்ட விவசாயிகளுக்கு உலர் உணவு நிவாரணங்களை கமநல சேவைகள் வனஜீவராசிகள் அமைச்சர் எஸ்.எம்.சந்திரசேனவினால் கடந்த 15 ஆம் திகதி வழங்கப்பட்டன.

பொத்துவில் பிரதேசத்தில் பாதிக்கப்பட்ட விவசாயிகளுக்கு 2ஆயிரம் தண்ணீர் போத்தல்கள், 400கிராம்360 பால்மா பைக்கற்றுகள், 500கிராம் நிறையுடைய 260 சீனி பைக்கற்றுகள், 100 கிராம் நிறையுடைய தேயிலைத்தூள் 40 பைக்கற்றுகள் வழங்கப்பட்டன.இதேபோல் கோமாரி ,உகண பிரதேசங்களிலும் பாதிக்கப்பட்ட விவசாயிகளுக்கு உலர் உணவு நிவாரணம் வழங்கப்பட்டது.

இதனைத் தொடர்ந்து சனிக்கிழமை மாலை அம்பாறை மாவட்ட கமநல சேவை திணைக்கள காரியாலயத்தில் அம்பாறை மாவட்ட கமநல சேவை திணைக்கள ஆணையாளர் டி.எம்.என்.திசாநாயக்க தலைமையில் கூட்டம் ஒன்று நடைபெற்றது. (ஸ்ரீ-2)

# சனத் ஜயசூரியவின் வாகனம் மோதியதில் மூவர் காயம்

ஐக்கிய மக்கள் சுதந்திரக் கூட்டமைப்பின் மாத்தறை மாவட்ட பாராளுமன்ற உறுப்பினரும் பிரபல கிரிக்கெட் வீரருமான சனத் ஜெயசூரிய பயணித்த வாகனம் மோட்டார் சைக்கிளுடன் விபத்துக்குள்ளானதில் மூவர் காயமடைந்துள்ளனர்.

கடந்த 15ஆம் திகதி இரவு 10 .30 மணியளவில் இடம்பெற்ற குறித்த விபத்தின் போது காயமடைந்த மூவரும் மாத்தறை வைத்தியசாலையில் சிகிச்சை பெற்று வருவதாக தெரிவிக்கும பொலிஸார் அவர்களில் இருவர் கடும் காயங்களுக்குள்ளாகி இருந்ததாகவும் தெரிவித்துள்ளனர்.

கொழும்பிலிருந்து கந்தர நோக்கி பயணித்த பாராளுமன்ற உறுப்பினர் சனத்ஜெயசூரியவின் வாகனமும் கந்தர பகுதியிலிருந்து மாத்தறையை நோக்கி பயணித்த மோட்டார் சைக்கிள்கள் மூன்றும் மாத்தறை எலிகண்ட பகுதியில் மோதிக்கொண்டுள்ளன.

மூன்று மோட்டார் சைக்கிள்களில் 6 பேர் மரணச் சடங்கொன்றிற்கு சென்று விட்டு வந்துள்ளனர்.அவர்களே இவ்வாறு விபத்துக்குள்ளாகியுள்ளனர். சனத் ஜெயசூரிய பயணித்த வாகனத்திற்கு சேதங்கள் ஏற்பட்ட போதும் சனத்திற்கு எதுவித காயங்களோ ஏற்படவில்லை. சம்பவம் தொடர்பிலான மேலதிக விசாரணைகளை மாத்தறை பொலிஸார் மேற்கொண்டு வருகின்றனர். (ஸ்ரீ-2)

# வெள்ள பகுதிகளில் பொருட்களின் விலை உயர்வை தடுக்க விசேடதிட்டம்

(கொழும்பு)

வெள்ளத்தினால் பாதிக்கப்பட்ட பகுதிகளில் பொருட்களின் விலை உயர்வடைந்து செல்வதனை தடுப்பதற்கான விசேட திட்டமொன்று தயாரிக்கப்பட்டுள்ளதாக கூட்டுறவு மற்றும் உள்நாட்டு வர்த்தக அமைச்சு குறிப்பிடுகின்றது.


பாதிக்கப்பட்ட பகுதிகளில் செயற்கையான முறையில் பொருட்களின் விலைகளை அதிகரிப்பதற்கு சிலர் செயற்பட்டு வருகின்றனர்.


கூட்டுறவு மற்றும் உள்நாட்டு வர்த்தக அமைச்சின் செயலாளர் சுனில் எஸ். சிறிசேன தெரிவிக்கின்றார்.

அதன் பிரகாரம் குறித்த பகுதிகளில் உள்ள கூட்டுறவு நிலையங்கள் மற்றும் மினி கோப்சிற்றிகள் ஆகியவற்றிற்கு குறைந்த விலையில் அத்தியாவசியப் பொருட்கள் விநியோகிக்கப்படும் என்றும் அவர் கூறினார்.

இதன்கீழ் கிழக்கு மற்றும் வடமத்திய மாகாணங்களில் உள்ள கூட்டுறவு நிலையங்கள் மற்றும் கோப்சிற்றி ஆகியவற்றிற்கு உணவுப்பொருட்களை விநியோகிக்கும் நடவடிக்கைகள் ஆரம்பிக்கப்பட்டுள்ளதாக கூட்டுறவு மற்றும் உள்நாட்டு வர்த்தக அமைச்சின் செயலாளர் மேலும் குறிப்பிட்டார். (ஸ்ரீ-2)











யாழ். துரையப்பா விளையாட்டரங்கில் நேற்று இடம்பெற்ற தேசிய தைப்பொங்கல் விழாவில் பிரதம அதிதியாக கலந்து கொண்ட ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷ, பாரம்பரிய கைத்தொழில் மற்றும் சிறு தொழில் முயற்சி அபிவிருத்தி அமைச்சர் கே.என். டக்ளஸ் தேவானந்தா, வடமாகாண ஆளுநர் மேஜர் ஜெனரல் ஜி.ஏ.சந் திரசிறி ஆகியோர் அழைத்து வரப்படுவதையும் விருந்தினர்கள் அமர்ந்திருப்பதையும் பல்கலைக்கழக அனுமதிக்கு தகுதி பெற்ற மாணவி ஒருவருக்கு ஜனாதிபதி மடிக்கணனி வழங்குவதையும் மாணவிகளின் கலைநிகழ்வையும் நிகழ்வில் கலந்து கொண்டோரில் ஒரு தொகுதியினரையும் படங்களில் காணலாம்.

(படங்கள்:- எஸ்.கரன்)

# வடக்கு மாகாணக் கல்வி அமைச்சு மருதனார்மடத்தில் நாளை ஆரம்பம்

வடக்கு மாகாணக் கல்வி, பண்பாட்டு அலுவல்கள் மற்றும் விளையாட்டுத்துறை அமைச்சு, அதற்குட்பட்ட திணைக்களங்கள் சம்பிரதாய பூர்வமாக நாளை காலை 10 மணிக்கு மருதனார் மடத்தில் ஆரம்பித்து வைக்கப்படுகின்றது.

இந்நிகழ்வில் வடக்கு மாகாண வலயக் கல்விப் பணிப்பாளர்கள், வலயக் கல்வி அலுவலர்கள், பாடசாலை அதிபர்கள், ஆசிரியர்கள், சக திணைக்கள அலுவலர்களைக் கலந்து சிறப்பிக்குமாறு வடக்கு மாகாணக் கல்விப் பணிப்பாளர் ப.விக்னேஸ்வரன் அழைப்பு விடுத்துள்ளார். இது தொடர்பில் அவர் தெரிவித்துள்ளதாவது,

வடக்கு மாகாணக் கல்வி, பண்பாட்டு அலுவல்கள் மற்றும் விளையாட்டுத்துறை அமைச்சு, அதற்குட்பட்ட திணைக்களங்கள் நாளை காலை 10 மணிக்கு மருதனார்மடம், வலிகாமம் வலயக் கல்வி அலுவலகக் கட்டடத் தொகுதியின் மேற்தளத்தில் சம்பிரதாயபூர்வமாக ஆரம்பித்து வைக்கப்படுகிறது.

எனவே இந்நிகழ்வில் வடக்கு மாகாண வலயக் கல்விப் பணிப்பாளர்கள், வலயக் கல்வி அலுவலர்கள், பாடசாலை அதிபர்கள், ஆசிரியர்கள், சகல திணைக்களத் தலைவர்கள், அலுவலகர்களைக் கலந்து சிறப்பிக்குமாறு அழைப்பு விடுப்பதாக வடக்கு மாகாணக் கல்விப் பணிப்பாளர் ப.விக்னேஸ்வரன் தெரிவித்தார். (ந-5)

# வடக்கு மாகாண கல்வி திணைக்களத்தின் கலை விழா உடுவில் மகளிர் கல்லூரியில்

வடக்கு மாகாணக் கல்வித் திணைக்களத்தின் ஏற்பாட்டில் வலிகாமம் வலயக் கல்வி அலுவலகம் நடத்தும் பௌர்ணமி கலை விழா நாளை பிற்பகல் 2.30 மணிக்கு உடுவில் மகளிர் கல்லூரியில் நடைபெறுகின்றது.

இவ்விழாவில் பாரம்பரிய கைத்தொழில்கள் மற்றும் சிறுதொழில் முயற்சி அபிவிருத்தி அமைச்சர் டக்ளஸ் தேவானந்தா பிரதம அதிதியாக கலந்து சிறப்பிப்பதுடன் கௌரவ விருந்தினராக வடக்கு மாகாண கல்வி அமைச்சின் செயலாளர் இ.இளங்கோவன் [illegible]ந்துகொள்கிறார்.

இந்நிகழ்வு தொடர்பில் வடக்கு மாகாணக் கல்விப் பணிப்பாளர் ப.விக்னேஸ்வரன் விபரிக்கையில் ;

வடக்கு மாகாணக் கல்வித் திணைக் களத்தின் ஏற்பாட்டில் பௌர்ணமி கலை விழா வலிகாமம் கல்வி வலயத்தினால் நாளை உடுவில் மகளிர் கல்லூரியில் நடத்தப்படுகின்றது.

வடக்கு மாகாண கல்வித் திணைக் களத்தின் ஏற்பாட்டில் இவ்வாண்டு முதல் வடக்கு மாகாணத்திலுள்ள 12 கல்வி வலயங்களில் ஒவ்வொரு மாதமும் ஒரு கல்வி வலயத்தின் சார்பில் பௌர்ணமி தினத்தில் கலை விழா நடத்தப்படும்.

இக்கலாசார விழாவில் சமூக ஒற்றுமை, மத ஒற்றுமையைப் பிரதிபலிக்கும் வகையிலும் மாற்றுவலுவுள்ளவர்களின் ஆற்றலை வெளிக்கொண்டு வரும் வகையிலும் கலை நிகழ்வுகள் இடம்பெறும். இதன் நோக்கம் நமது மாகாணத்தில் கலை, கலாசார, பண்பாட்டு விழுமியங்களை பாதுகாப்பதும் எங்கள் இளம் தலைமுறைக்கு அதனை கையளிப்பது மாகும் என்று தெரிவித்தார். (ந-5)

# சைக்கிள் ஓட்டப்போட்டி நாளை பதிவுகள் இன்று யாழ்.நூலகத்தில்

விமானப் படையின் 60ஆவது ஆண்டு விழாவை முன்னிட்டு வடக்கு மாகாணத்தில் சைக்கிள் ஓட்டப்போட்டி நாளை வவுனியாவில் நடைபெறுகின்றது.

இதற்காக யாழ்.மாவட்டத்தில் பங்குகொள்ள விரும்புபவர்களுக்கான பதிவுகள் இன்று யாழ். பொது நூலகச் சிற்றுண்டிச்சாலையில் நடைபெறுகின்றது.

அத்துடன் இன்று மாலை 4 மணிக்கு பங்குகொள்ளும் வீரர்கள் யாழ்ப்பாணத்தில் [illegible]ந்து அழைத்துச் செல்லப்படுகின்றனர். வவுனியாவில் இருந்து அநுராதபுரம் வரை நடைபெறும் இச்சைக்கிள் ஓட்டப்போட்டியில் முதலாவது பரிசாக 25 ஆயிரம் ரூபாயும் இரண்டாவது பரிசாக 20 ஆயிரம் ரூபாயும் மூன்றாவது, நான்காவது, ஐந்தா வது பரிசாக முறையே 15 ஆயிரம், 10 ஆயிரம், 5 ஆயிரம் ரூபாய் பரிசாக வழங்கப்படுகின்றது.

அத்துடன் போட்டித் தூரத்தை ஓடி முடிப்பவர்களுக்குத் தலா 3 ஆயிரம் ரூபாய் வழங்கப்படுகிறது. இவ்வாறு யாழ்.சைக்கிள் ஓட்டப் பயிற்சியாளர் ஆர்.ஆர்.குணசேகர தெரிவித்துள்ளார்.

# தரம் 1 மாணவர்களின் கால்கோள் விழா

(யாழ்ப்பாணம்)

2011 ஆம் ஆண்டிற்கான தரம் 1 மாணவர்களைப் பாடசாலைகளில் உள்வாங்கும் வகையில் வடமாகாண மட்டக் கால்கோள் விழா கோண்டாவில் இராமகிருஷ்ண மகா வித்தியாலயத்தில் இன்று செவ்வாய்க்கிழமை காலை 9 மணிக்கு வடமாகாணக் கல்விப் பணிப்பாளர் ப.விக்னேஸ்வரன் தலைமையில் நடைபெறும்.

இவ்விழாவின் பிரதம விருந்தினராக வடமாகாணக் கல்வி, பண்பாட்டு அலுவல்கள், விளையாட்டுத்துறை அமைச்சின் செயலாளர் இ.இளங்கோவன் கலந்துகொள்வார்.

இவ்விழாவில் மதகுருமார்களின் ஆசியுரைகளும் கல்விப் பெரியார்களின் வாழ்த்துரைகளும் ஆரம்பப் பிரிவு மாணவர்களின் கலை நிகழ்வுகளும் இடம்பெறும்.

இதேவேளை வடமாகாணக் கல்வித் திணைக்களத்தின் சிங்கள மொழிப் பிரிவின் பிரதிக் கல்விப் பணிப்பாளர் ஏ.எல்.தயாவன்ச அவர்களின் தலைமையில் வவுனியா தெற்கு வலயத்தைச் சேர்ந்த முண்டிமுறிப்பு அரசினர் பாடசாலையில் சிங்கள மொழி மூலமான மாணவர்களின் வடமாகாண மட்டக் கால்கோள் விழா நடைபெறும். (ந)

# கிணற்றில் வீழ்ந்த திருடன் வசமாக மாட்டுப்பட்டான்

வீடொன்றில் திருடுவதற்காகச் சென்ற திருட்டுக் கும்பல் ஒன்றினைப் பொதுமக்கள் துரத்திச் சென்றபோது திருடன் ஒருவன் கால் தடுக்கிக் கிணற்றினுள் விழுந்ததினால் பொதுமக்களால் மடக்கிப் பிடிக்கப்பட்டான்.

இச்சம்பவம் யாழ்.சுண்டுக்குளிப் பகுதியில் நேற்று அதிகாலை 12.30 மணியளவில் இடம்பெற்றுள்ளது. சம்பவம் பற்றி மேலும் தெரிய வருவதாவது,

வீடொன்றில் திருடுவதற்காகச் சென்ற கும்பலைக் கண்டவுடன் வீட்டு உரிமையாளர் விழிப்படைந்து வீட்டைச் சுற்றி விளக்குகளைப் போட்டதும் திருடர்கள் முன் வீட்டுக்காரர்தான் வந்திருப்பதாகவும் கதவைத் திறவுங்கள் எனவும் கூறியிருக்கின்றனர்.

குரலில் வேறுபாடு இருந்ததினால் வீட்டில் இருந்தவர்கள் கூக்குரல் எழுப்பியதைத் தொடர்ந்து அயலவர்கள் கூடி ஆரவாரத்துடன் வருவதைக் கண்ட திருடர்கள் அயலிலுள்ள காணி ஒன்றினூடாகத் தப்பியோட முயன்ற வேளையிலேயே அவர்களில் ஒருவன் வழி தவறிக் கிணற்றினுள் விழுந்திருக்கின்றான்.

சம்பவம் குறித்து யாழ்ப்பாணப் பொலிஸாருக்குத் தகவல் கொடுக்கப்பட்டதைத் தொடர்ந்து நேற்றுக் காலை 7 மணியளவில் சம்பவ இடத்துக்கு வந்த பொலிஸார் திருடனைக் கைது செய்துள்ளனர்.

யாழ்ப்பாணத்தில் தற்போது பரவலாக இடம்பெற்று வரும் திருட்டுச் சம்பவங்களுடன் கைது செய்யப்பட்டவருக்குத் தொடர்பு இருக்கலாம் என்ற கோணத்தில் பொலிஸ் விசாரணைகள் இடம்பெற்று வருவதாகத் தெரிவிக்கப்படுகிறது. (ந-5)

# மடிக்கணனி பெற்ற மாணவர்களுக்கு

நேற்றைய தினம் ஜனாதிபதியிடம் இருந்து மடிக்கணனிகளைப் பெற்றுக் கொண்ட பல்கலைக் கழக அனுமதி பெறும் மாணவர்களுக்கு இறுவட்டு ஒன்று வழங்கவுள்ளதால் அதனை யாழ்ப்பாணம் மேலதிக மாகாணக் கல்விப் பணிமனையில் பெற்றுக் கொள்ளுமாறு மேலதிக மாகாணக் கல்விப் பணிப்பாளர் வே.தி. செல்வரத்தினம் கேட்டுள்ளார்.



தேசிய மட்டக் கால்பந்தாட்டப் போட்டியில் சம்பியனான பருத்தித்துறை உதைபந்தாட்ட லீக் அணியினர் ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷவிடமிருந்து சம்பியன் கிண்ணத்தைப் பெற்றுக் கொண்ட போது...

# உலகக் கிண்ணத் தொடர் இந்திய அணி நேற்று அறிவிப்பு

மிகவும் எதிர்பார்க்கப்படும் உலகக் கிண்ண கிரிக்கெட் தொடருக்கான இந்திய அணி அறிவிக்கப்பட்டது. இதில் தமிழக வீரர் அஷ்வின், பியுஸ் சாவ்லா உள்ளிட்ட 3 சுழற்பந்து வீச்சாளர்கள் இடம்பெற்றுள்ளனர். ரோகித் சர்மா, சிறிசாந்த், இஷாந்த் ஆகிய முன்னணி வீரர்கள் அதிரடியாக நீக்கப்பட்டுள்ளனர்.

இந்தியா, இலங்கை, பங்களாதேஷ் ஆகிய 3 நாடுகளில் பத்தாவது உலகக் கோப்பை கிரிக்கெட் தொடர் அடுத்த மாதம் 18ஆம் திகதி முதல் ஏப்ரல் 2 ஆம் திகதி வரை நடக்கவுள்ளது. இத்தொடருக்கான 30 வீரர்கள் கொண்ட உத்தேச இந்திய அணி சமீபத்தில் அறிவிக்கப்பட்டது. இறுதி அணித் தேர்வு சென்னையில் நேற்று நடந்தது.

இக்கூட்டத்தில் பி.பி.சி.ஐ. செயலர் சீனிவாசன், தேர்வுக் குழுத் தலைவர் சிறிகாந்த், தேர்வாளர்கள் கிர்மானி, பாவே உள்ளிட்டோர் கலந்துகொண்டனர்.

கூட்டத்தின் முடிபில் 30 வீரர்கள் கொண்ட உத்தேச அணியிலிருந்து 15 வீரர்கள் கொண்ட இறுதி அணி தேர்ந்தெடுக்கப்பட்டது. தோனி தலைமையிலான இந்திய அணியில் சேவாக், சச்சின், காம்பீர், ஹோலி, யுவராஜ், ரெய்னா, ஹர்பஜன் சிங், முனாப், பிரவீன், நெகரா, அஷ்வின், யூசுப், பியுஸ் சாவ்லா ஆகியோர் இடம் பெற்றுள்ளனர்.

**ரோகித் பாவம்**

உத்தேச அணியில் இடம்பெற்றிருந்த ரோகித் சர்மா, முரளி விஜய், தினேஷ் கார்த்திக், ரவீந்திர ஜடேஜா, சவுரப் திவாரி, ஓஜா, வினய் குமார், பார்த்தீவ் பட்டேல், சகா, சிறிசாந்த், ரஹானே, புஜாரா, ஷிகர் தவான், அமித் மிஸ்ரா, இஷாந்த் சர்மா ஆகியோருக்கு இறுதி அணியில் இடம் கிடைக்கவில்லை.

பின் நிருபர்களுக்கு பேட்டியளித்த சிறிகாந்த் கூறியதாவது,

இந்த நாள் முக்கியமான நாள். அடுத்த மாதம் நடக்கவுள்ள உலகக் கிண்ண கிரிக்கெட் தொடருக்கான இந்திய அணியை தேர்வு செய்துள்ளோம். தற்போது தேர்வு செய்யப்பட்டுள்ள அணியில் எந்த ஆச்சரியமும் கிடையாது.

சிறந்த அணியைத் தேர்வு செய்துள்ளோம். அணித் தலைவர் மற்றும் பயிற்சியாளருடன் கலந்து பேசினோம். தென்னாபிரிக்காவில் உள்ள மற்ற இரு தேர்வாளர்களுடனும் பேசினோம். போட்டி நடைபெறவுள்ள மைதானங்களின் தன்மை, எதிர்த்து விளையாட இருக்கும் அணிகள், எப்படி விளையாடப் போகிறோம், இந்திய விக்கெட்டுக்களின் தன்மை உள்ளிட்ட பல்வேறு விடயங்களைக் கணக்கில் எடுத்துக் கொண்டு இந்த அணியைத் தேர்வு செய்துள்ளோம்.

**சுழல் முக்கியம்**

இந்தியாவில் விளையாடும் போது, சுழற்பந்து வீச்சாளர்கள் முக்கிய பங்கு வகிப்பர். இந்திய அணி கடந்த சில ஆண்டுகளாக, டெஸ்ட் மற்றும் ஒருநாள் போட்டி இரண்டிலும் சிறப்பாக விளையாடி வருகிறது. இந்தியாவில் மட்டுமன்றி, வெளிநாடுகளிலும் இந்த அணி தொடர்ந்து சிறப்பாக விளையாடி வருகிறது. இது அணிக்குத் தன்னம்பிக்கையை வழங்கி உள்ளது.

இரண்டாவது ஒருநாள் போட்டியில் 190 ஓட்டங்கள் எடுத்திருந்த போதும், தென்னாபிரிக்காவில் அந்த அணியைத் தோற்கடித்துள்ளது.

இந்திய உலகக் கிண்ணத் தொடரில் விளையாடும் வீரர்களுக்கு அதிகளவிலான நெருக்கடி இருக்கும். இதனைத் திறமையாக எதிர்கொண்டு, கோப்பையைக் கைப்பற்றுவதே சிறந்த அணிக்கான தகுதி.

**மீண்டும் கோப்பை**

இந்திய அணி 28 ஆண்டுகளுக்குப் பின்னர் உலகக் கிண்ணத்தை மீண்டும் வெல்லும் என நம்புவதுடன், அதற்காகக் கடவுளிடமும் பிரார்த்திப்போம். உலகக் கோப்பையை வெல்லும் போதுதான் அது எனக்கும் எனது அணிக்கும் பொன்னான நேரமாக இருக்கும்.

வீரர்களுக்கு உடற்தகுதி பற்றிய கேள்விகளுக்கு விடையளிக்க விருப்பமில்லை. அப்பிரச்சினை எழும்போது அதைப்பற்றி யோசிக்கலாம். உடற்தகுதி என்பது கிரிக்கெட் வாழ்க்கையின் ஒரு பகுதி. அனைத்து அணிகளுக்கும் உடற்தகுதிப் பிரச்சினை உள்ளது.

உடற்தகுதி பற்றி ஏன் கவலைப்பட வேண்டும். ஏன் எதிர்மறையாக நினைக்க வேண்டும். சாதகமாக நினைத்து உலகக் கோப்பையை வெல்வோம் என நம்புங்கள். இவ்வாறு ஸ்ரீகாந்த் கூறினார்.

**இந்திய அணி விபரம்:**

தோனி (அணித் தலைவர்), சேவாக் (துணைத் தலைவர்), சச்சின் டெண்டுல்கர், காம்பீர், விராத் ஹோலி, யுவராஜ் சிங், சுரேஷ் ரெய்னா, ஹர்பஜன் சிங், சகிர்கான், முனாப் பட்டேல், பிரவீன்குமார், ஆஷிஷ் நெஹ்றா, அஷ்வின், யூசுப்பதான் மற்றும் பியுஸ் சாவ்லா.

...நகர சபை, யாழ்ப்பாணம்



# தமிழ் அரசியல் கட்சிகள் அனைத்...

மேலும் ஜனாதிபதி தனது உரையில் தெரிவிக்கையில்,

இந்த தேசியப் பொங்கல் விழாவில் யாழ்ப்பாணத்திற்கு வந்து உங்களுடன் கலந்துகொள்ளக் கிடைத்தமைக்காக நான் மட்டற்ற மகிழ்ச்சி அடைகிறேன்.

இன்று இந்த விழாவில் முக்கியமாக கலை நிகழ்வுகளில் மாணவ, மாணவிகள் கலந்து கொண்டமையை இட்டு நான் மகிழ்ச்சி அடைகிறேன்.

நாங்கள் எமது நாட்டின் மீது அன்பு செலுத்தும் அதேவேளையில் எங்களுடைய கலை, கலாசாரத்திற்கும் நாம் அன்பு செலுத்தவேண்டும்.

நாங்கள் எங்களுடைய கலாசாரத்தை பாதுகாத்துக்கொண்டால் மாத்திரமே நாங்கள் ஒரு நல்ல இனமாக, தேசியமாக, ஒரு நாடாக வளர முடியும்- மிளிர முடியும்.

எங்களுக்குத் தெரியும் மேற்கு நாடுகளிலிருந்து எமது நாட்டிற்கு வரும் புதிய புதிய கலாசாரங்கள் காரணமாக எங்களுடைய இளைஞர்கள், யுவதிகள் அந்த கலாசாரங்கள் மீது பற்றுக்கொண்டு தங்களுடைய பெற்றோர்கள் கற்றுத்தந்த கலாசாரங்களை மறந்து செல்கின்ற போக்கே நடந்துகொண்டிருக்கிறது.

நாம் எமது கலாசாரத்தை பாதுகாத்துக்கொள்ளவேண்டும். நாட்டைப் பாதுகாப்பது போன்று கலாசாரத்தைப் பாதுகாத்துக்கொண்டு அதனை எமது சந்ததிக்கு சந்ததி தொடர்ந்து கொண்டு செல்லவேண்டும்.

அதற்காக பெற்றோர்கள் கவனம் எடுக்கவேண்டும் என்பதைத்தான் இந்தச் சந்தர்ப்பத்தில் உங்களுக்கு நினைவுகூற விரும்புகின்றேன்.

எமது நாடு 30வருடங்கள் பின்னடைவிலிருந்த காலப்பகுதி இருந்தது. அந்த நிலையை நிறுத்தி தற்போது எமது பயணத்தை முன்னோக்கிச் சென்றுகொண்டிருக்கிறோம்.

இந்த நாட்டிலே எந்த ஒருவரும் பிரிந்துநின்று தனித்தனியாக வாழ முடியாது. நாம் எல்லோரும் இலங்கைத் தாயின் ஒரே பிள்ளைகள்.

எனவே சிங்களவர்கள் இருக்கலாம், தமிழர்கள் இருக்கலாம், முஸ்லிம்கள், பறங்கியர்கள் இருக்கலாம். யார் இருந்தாலும் இலங்கைத்தாயின் மக்கள்தான். ஒரே நாட்டின் சந்ததிதான் நாம் எல்லோரும்.

இந்த மேடையிலே சில மாணவ, மாணவிகள் ஆடினார்கள், பாடினார்கள். மலர்களைப் போன்று அழகான திறமையை அவர்களிடம் கண்டோம்.

ஆனால் இந்த நாட்டிலே சுதந்திரம் இல்லாவிட்டால், அமைதி இல்லாவிட்டால் அவர்களுக்கு என்ன நடந்திருக்கும் என்பதை சிந்தித்துப் பாருங்கள்.

எங்களுக்கு ஒரு பொறுப்பு இருக்கிறது. எல்லா அரசியல் கட்சித் தலைவர்களுக்கும் ஒரு பொறுப்பு இருக்கிறது.

இந்த நாட்டில் இன பேதத்தை, மத பேதத்தை, குல பேதத்தை தூண்டிவிடுவது மாத்திரமல்ல, எல்லா மக்களும் ஒன்றுபட்டு வாழக்கூடிய சூழலை ஏற்படுத்துவதுதான் எல்லா அரசியல் கட்சிகளினதும், கட்சித் தலைவர்களினதும் பொறுப்பு என்பதை நான் கூறிவைக்க விரும்புகின்றேன்.

எனவே குறுகிய அரசியல் இலாபத்திற்காக மக்களை இன ரீதியாக, மத ரீதியாக, குல ரீதியாகப் பிரித்து செயற்படுகின்ற முறையை இல்லாமற் போக்க வேண்டும் என்று இந்தத் தைப்பொங்கல் நன்னாளிலே நான் கூறிவைக்க விரும்புகின்றேன்.

நாங்கள் இந்தப் பிள்ளைகளுக்கான ஒரு நாட்டைத்தான் பார்க்கின்றோம். நாங்கள் பிரிந்து சென்ற ஒரு நாட்டையல்ல, ஒன்றுபட்ட நாட்டைத்தான் பார்க்கின்றோம்.

எனவே, நீங்கள் எங்கள் மீது காட்டிய விசுவாசத்தை நம்பிக்கையை நாங்கள் உங்களுக்கு மீட்டெடுத்து காட்டியிருக்கிறோம்.

இந்தப் பகுதி இப்பொழுது அபிவிருத்தி அடைந்து வருகிறது. எனவே ஏனைய மாகாணங்களை- மாவட்டங்களை அபிவிருத்தி செய்வதைப் போல, இந்தப் பகுதியை அபிவிருத்தி செய்ய நாம் நடவடிக்கை எடுத்து வருகின்றோம்.

அவைகள் பாதைகளாக இருக்கலாம், பாடசாலைகளாக இருக்கலாம், புகையிரதப் பாதைகளாக இருக்கலாம். எவையானாலும் அவற்றை அபிவிருத்தி செய்ய நாம் நடவடிக்கை எடுத்து வருகின்றோம்.

ஆனால் சில ஊடகங்களுக்கு நாம் செய்யும் அந்த அபிவிருத்தி வேலைகள் சரியாகக் கண்களுக்குத் தெரிவதில்லை.

நாங்கள் ஏதாவது ஒரு பாலத்தைத் திறந்தால் அது வெளிநாட்டு உதவியுடன் செய்த பாலம் என்கிறார்கள். நாங்கள் வீடுகளைக் கட்டிக் கொடுத்தால், வேறு நாட்டினுடைய உதவி என்றும் அவர்கள் சொல்கிறார்கள்.

எனவே அவர்களுடைய தவறை அரசாங்கம் ஒன்றும் செய்யவில்லை.

நான் ஒன்றைச் சொல்லுகின்றேன். இவை எல்லாவற்றிற்கும் அரசாங்கம் திருப்பி அந்தக் கடனை கொடுக்கவேண்டித்தான் இருக்கிறது. நாம் அந்தக் கடனை மாத்திரம் அல்ல வட்டியுடன்தான் கொடுக்கவேண்டியிருக்கிறது.

நாட்டை அபிவிருத்திசெய்ய காசு இல்லை என்றால் நாம் கடன்பெறுவோம். வட்டிக்காக என்றாலும் கடன் பெறுவோம்.

உங்களுடைய நன்மைக்காக, உங்களுடைய பிள்ளைகளின் எதிர்காலத்திற்காக நாங்கள் எதனையும் செய்வதற்கு பின்வாங்க மாட்டோம் என்பதனைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

எனவே குறுகிய நோக்கத்தோடு குறுகிய அரசியல் இலாபத்திற்காக என்ன சொன்னாலும் நாம் அசைந்து கொடுக்கமாட்டோம். நாங்கள் சரியானவற்றை தெரிந்துகொண்டே போவோம்.

ஒரு நாடு மீண்டும் சாதாரண நிலைக்கு வரவேண்டுமானால் அதற்கான நடவடிக்கையை நாம் எடுத்தாகவேண்டும்- அதை எடுத்திருக்கின்றோம்.

இந்த மேடையிலே இருக்கின்ற அமைச்சர் டக்ளஸ் தேவானந்தா அவர்களே, அதேபோன்று எனது பழைய ஆத்மநண்பர் காலஞ்சென்ற மகேஸ்வரனுடைய மனைவி நாடாளுமன்ற உறுப்பினர் விஜயகலா, அதேபோன்று நாடாளுமன்ற உறுப்பினர் விநாயக மூர்த்தி அவர்களே, உங்கள் எல்லோரையும் நான் கேட்டுக்கொள்வது என்னவென்றால்,

நீங்கள் எல்லோரும் ஒன்றுசேர வேண்டும். உங்கள் முன்னால் இருக்கக்கூடிய இந்தமக்களுக்காகவேண்டி- இந்தப் பிள்ளைகளின் நல்ல எதிர்காலத்திற்காக வேண்டி நீங்கள் ஒன்றுபட்டுச் செயற்படவேண்டிய காலம் வந்துவிட்டது என்றுதான் கூறிவைக்க விரும்புகின்றேன் எனத் தெரிவித்த ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷ, தொடர்ந்து தமிழில் உரையாற்றுகையில்,

இந்தத் தேசியப் பொங்கல் விழாவில் பங்குகொண்டமையை இட்டு நான் மிகவும் சந்தோசப் படுகிறேன். உங்கள் எல்லோருக்கும் எனது இனிய பொங்கல் வாழ்த்துக்கள்.

தைப்பொங்கல் தமிழர் பெருநாள். சூரியனுக்கு நன்றி சொல்லும் நன்னாள், தை பிறந்தால் வழி பிறக்கும்.

மக்கள் மத்தியில் நல்லுறவு, நம்பிக்கை நிலையாக இருக்கவேண்டும். சமாதானம், சுகவாழ்வு, சமத்துவம், சௌபாக்கியம் எப்போதும் இருக்கவேண்டும்.

இந்த தேசியப் பொங்கல் விழாவை ஒழுங்கமைத்த அமைச்சர் டக்ளஸ் தேவானந்தா அவர்களை நான் பாராட்டுகிறேன்.

வடபகுதியில் அவர்தான் ஒரே ஒரு அமைச்சர். வடபகுதி மட்டுமல்ல முழு நாட்டிற்கும் அமைச்சர்.

நாங்கள் வடக்கின் வசந்தம் மூலம் நிறைய அபிவிருத்தி வேலைகளைச் செய்கிறோம். அது உங்களுக்கு நன்றாகத் தெரியும். நேற்று நாங்கள் சங்குப்பிட்டி புதிய பாலம் திறந்து வைத்தோம்.

பல வருட காலமாக இல்லாத அபிவிருத்தி வேலைகள் இப்போது உங்கள் பகுதியில் இடம்பெறுகிறது. 30 வருட காலமாக நீங்கள் பட்ட கஷ்டம், நஷ்டம் போதும் போதும்.

இனிமேல் அந்த நிலைமை வேண்டாம். வடபகுதியை கட்டியெழுப்ப இன்னும் இன்னும் செலவு செய்வோம்.

மக்களின் வாழ்க்கைத்தரம் மேம்படவேண்டும். அதற்கான வசதிகள் வழங்கப்பட வேண்டும். உங்கள் எல்லோருக்கும் வளமான வாழ்க்கை உருவாக வேண்டும்.

கல்வி, சுகாதாரம், மின்சாரம், நீர், வீடு வசதிகள் என எல்லாம் நாம் வழங்கி வருகின்றோம். வடக்கின் வசந்தம் உங்கள் வசந்தம்- உங்கள் பிள்ளைகளின் வசந்தம்.

நாம் இவற்றை செய்யும்போது சிலர் அதை குழப்ப முயற்சி செய்கிறார்கள்.

பாதாள கோஷ்டிகள் தென்பகுதியில் இருந்தாலும், வடபகுதியில் இருந்தாலும், யாழ்ப்பாணத்தில் இருந்தாலும் நாம் விடமாட்டோம். அந்த வார்த்தையே இல்லாமல் செய்வோம்.

இனிமேல் இந்த நாட்டில் பயங்கரவாதம் உருவாக இடம் கொடுக்க மாட்டோம். இன பேதம், குல பேதம், மத பேதம், மாகாணபேதம் இனிமேல் இருக்கமாட்டாது.

குறுகிய அரசியல் நோக்கம் வேண்டாம். அப்பாவி மக்களை நாம் எல்லோரும் பாதுகாக்க வேண்டும். அபிவிருத்திதான் மக்களின் நல்ல எதிர்காலத்திற்கு முக்கியமானது.

நாம் சொல்வதைச் செய்வோம், செய்வதைச் சொல்வோம். நண்பர்களே! உங்களுக்குத் தேவையான உதவிகள் எல்லாவற்றையும் நாம் செய்வோம்.

நாம் எல்லோரும் ஒன்றுபடுவோம். ஒரு தேசியக் கொடியின்கீழ் ஒன்றிணைவோம். உங்கள் எல்லோருக்கும் வளமான எதிர்காலம் நிச்சயம் உருவாகும்.

இவ்வாறு ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷ தனது உரையில் தெரிவித்தார். (நு-5)

# ஊடகங்களும் அரசியல்...

கத்துடனான பேச்சுவார்த்தைகள் சாதகமான முறையில் காணப்படுகின்றது.

மழைவெள்ளம் காரணமாக மக்கள் பாதிப்புக்களை எதிர்நோக்கியுள்ளனர். இதனால் வேட்புமனுத் தாக்கல் செய்யும் காலத்தை அல்லது தேர்தல்கள் நடத்தும் காலத்தை மாற்றியமைக்கவேண்டும் என அரசாங்கத்திடம் கோரிக்கை விடுக்கின்றோம்.

ஆளும் ஐக்கிய மக்கள் சுதந்திரக் கூட்டமைப்புடன் இணைந்து செயற்படப் போவதாக வெளியாகும் தகவல்களில் எவ்வித உண்மையும் கிடையாது. தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு ஓர் சுயாதீனக் கட்சி. தொடர்ந்தும் சுயாதீனமாகச் செயற்படுவதையே விரும்புகின்றோம்.

எவ்வாறெனினும் அரசாங்கத்துடன் இணைந்து அபிவிருத்தித் திட்டங்களில் ஈடுபடுவோம். தமிழீழ விடுதலைப்புலிகள் தோற்கடிக்கப்பட்டுள்ள நிலையில் தமிழர் பிரச்சினைகளுக்காக தீர்வுத் திட்டத்தை பெற்றுக்கொடுக்கும் பொறுப்பு எம்மிடம் வந்திருக்கிறது. தமிழீழ விடுதலைப் புலிகளை நாடாளுமன்றில் பிரதிநிதித்துவப்படுத்தியதாக மேற்கொள்ளப்படும் பிரசாரங்களில் உண்மையில்லை.

புலிகள் இயக்கத்தில் சிறுவர்களை படையில் இணைத்துக்கொள்ளல் போன்ற நடவடிக்கைகளுக்கு எதிராக எமது கட்சி குரல் கொடுத்தது. சில ஊடகங்களும், அரசியல்வாதிகளும் தம்மை புலி ஆதரவுக் கட்சியாக முத்திரை குத்தியதாக அவர் தெரிவித்துள்ளார். (நு-5)

# தேசியப் பொங்...

கப்பட்டது.

அதனைத் தொடர்ந்து கடந்த வருடம் நடைபெற்ற க.பொ.த. உயர்தரப் பரீட்சையில் வடக்கு மாகாணத்தில் சிறந்த பெறுபேற்றைப் பெற்ற 100 மாணவர்களுக்கு ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷ மடிக்கணனிகளை வழங்கி வைத்தார்.

அத்துடன் யாழ்.மாவட்டத்தில் 34 ஆலயங்களின் புனரமைப்புக்காக தலா ஒரு இலட்சம் ரூபாய் வீதம் 3.4 மில்லியன் ரூபாய் நிதியை யாழ்.அரச அதிபர் இமெல்டா சுகுமாரிடம் ஜனாதிபதி கையளித்தார்.

இவ்விழாவில் அரச அதிகாரிகள், மாணவர்கள், பொதுமக்கள் என ஆயிரக்கணக்கானோர் கலந்து கொண்டனர்.

விழாவை புத்தசாசன பிரதியமைச்சர் குணவர்த்தனா, நாடாளுமன்ற உறுப்பினர்களான மு.சந்திரகுமார், சில்வஸ்திரி அலெஸ்ரின், தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு நாடாளுமன்ற உறுப்பினர் அப்பாத்துரை விநாயகமூர்த்தி, ஐக்கிய தேசியக் கட்சியின் நாடாளுமன்ற உறுப்பினர் திருமதி விஜயகலா மகேஸ்வரன், யாழ்.மாநகர சபை முதல்வர் திருமதி யோகேஸ்வரி பற்குணராஜா, யாழ்.அரச அதிபர் இமெல்டா சுகுமார், வடக்கு மாகாண ஆளுனர் மேஜர் ஜெனரல் ஜீ.ஏ.சந்திரசிறி உட்பட பல பிரமுகர்கள்கலந்து கொண்டனர். (நு-5)

# அர்ஜூனவுக்கு...

வழக்குத் தொடரப்பட்டிருந்தது.

இந்நிலையில்நேற்றுஇந்தவழக்கு விசாரணைக்கு எடுத்துக்கொள்ளப்பட்டபோதுஅர்ஜுனரணதுங்கமன்றில் ஆஜராகியிருக்கவில்லை. இதனையடுத்து அவருக்கு எதிராக நீதவான் பிடியாணை பிறப்பித்தார்.

இருப்பினும் நாடாளுமன்ற உறுப்பினரான அர்ஜுன ரணதுங்க தற்போது வெளிநாடு சென்றிருப்பதாலேயே அவர் மன்றில் சமுகமளிக்கவில்லை என்று அவர் சார்பில் மன்றில் ஆஜரான சட்டத்தரணிகள் தெரிவித்துள்ளனர். (நு-5)

# சைவக் குருக்களின்...

யாமல் வந்த இருவர் நிமேஷாவின் காலில் துப்பாக்கியால் சுட்டுவிட்டு தப்பிச்சென்றுள்ளனர்.

காலில் காயமடைந்த நிமேஷா உடனடியாக யாழ்.போதனா வைத்தியசாலைக்குக் கொண்டு செல்லப்பட்டு அனுமதிக்கப்பட்டார்.

அவரின் காலில் துப்பாக்கி ரவைகள் இருந்ததால் நேற்று இரவு அவருக்கு சத்திரசிகிச்சை மேற்கொள்ளப்பட்டது.

சம்பவம் தொடர்பில் மானிப்பாய்ப் பொலிஸார் விசாரணைகளை மேற்கொண்டு வருகின்றனர். துப்பாக்கிச்சூட்டுச்சம்பவத்தை அடுத்து படையினரும் பல இடங்களிலும் சேதனை நடவடிக்கையில் ஈடுபட்டதாகத் தெரிவிக்கப்படுகிறது. (நு-5)

சகரம் | Dan தமிழ் ஒளி | WWW JAFFNA TODAY COM
பத்திரிகை | தொலைக்காட்சி | வானொலி | இணையம்
ஊடகக் கற்கைநெறிகள்
வகுப்புகள் ஆரம்பம்
பிரதான பாடங்கள்:
பத்திரிகையியல், வானொலி, தொலைக்காட்சி, இணையம்
துணைப் பாடங்கள்:
Photography, Graphic Designing, Marketing, English
Microsoft Office, Internet, Email, Web Search, Social Media பயிற்சிகள் இலவசம்
3மாத கற்கைநெறி + 3மாத பணியிடப் பயிற்சி
பயிற்சிநெறி முடிவில் தொழில் உத்தரவாதம்
19-01-2011 புதன் மதியம் 1 மணிக்கு
மேலதிக விபரங்களுக்கு:
சிகரம் ஊடக இல்லம் MEDIA
இல.221, பலாலி வீதி, கந்தர்மடம், யாழ்ப்பாணம்.
நேரடி: 077 77 33 931

தவத்திரு ஸ்ரீஸ்ரீ ரவிசங்கர் குருஜீ நடாத்தும்
மகா ருத்ர பூஜை மற்றும்

உலகில் முதன் முறையாக 21000 மக்கள் இணைந்து வழங்கும்
தேவார பாராயணம்
இடம்:- வெபர் மைதானம், மட்டக்களப்பு
திகதி:- 2011, ஜனவரி 22, சனிக்கிழமை மாலை 3.30
அனைவரும் வருக அருளாசி பெறுக.
இவ்வரிய நிகழ்வில் கலந்து கொள்ள விரும்புவோர் பயண ஒழுங்குகளுக்கு தொடர்பு கொள்ள வேண்டிய தொலைபேசி எண்-0777250879

இப்பத்திரிகை வலம்புரி அன்.கோஸ்தாபனத்தாரால் இல.3,2 ஆம் ஒழுங்கை, பிறவுண் றோட், யாழ்ப்பாணம் என்னும் முகவரியிலுள்ள அவர்களது அச்சகத்தில் 18.01.2011 இல் அச்சிட்டு வெளியிடப்பட்டது.